padippakam




படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# அடிவானத்திலிருந்து...

கி.செ. துரை.

த்வனி

படிப்பகம்

padippakam

**COPIES AVAILABLE WITH:**

**K. SELVADURAI**
**FRUEHØJVEJ 10, 2th**
**7400 HERNING**
**DENMARK**

* * *

ADIVAANATHILIRUNTHU : A collection of Tamil short stories ❖ © K.Selvadurai ❖ First edition : Dec 98 ❖ PP VIII + 120 ❖ Jointly Published by: Dhwani Books, 216/10 R.K. Mutt Road, Mylapore, Chennai - 600 004 and K.Selvadurai ❖ Laser Typesetters : Adhithya Computers, Chennai - 600 041. Ph : 4928568 ❖ Negatives : Sundar Process, Chennai - 600 005. Ph : 8523900 ❖ Printers : Mani Offset, Chennai - 600 005. Ph: 8555249 ❖ Cover Painting : Craig Stephens.



படிப்பகம்

padippakam

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | வீக் என்ட்! | 1 |
| 2. | ஓடிப்போனவர்களின் ஓடிப்போனவள். | 7 |
| 3. | அடிவானத்தின் அழுகுரல். | 16 |
| 4. | இன்ரநெற் சாமியும்! றிபிளக்டர் சாமியும்! | 24 |
| 5. | நல்ல பெடியன். | 34 |
| 6. | மாற்றம் விநாடிக்குள்தான். | 42 |
| 7. | பாட்ஷா - 2 | 51 |
| 8. | இடிந்த வீடுகள். | 61 |
| 9. | உச்சம் என்பது.. | 68 |
| 10. | கடன்பட்டார் நெஞ்சம்! | 77 |
| 11. | காத்தான்குட்டி கைலாசம்போன கதை. | 85 |
| 12. | ஒரு பயணமும் இரண்டு சித்திரங்களும். | 93 |
| 13. | துரும்பார் துரும்பாட்டம் | 100 |
| 14. | மின்னல் கொடிகள். | 106 |
| 15. | இன்னொரு சினிமா. | 114 |




படிப்பகம்

padippakam

## இந்நூல்...

ஐரோப்பியத் தொழிற்சாலைகளில்
மெழுகுவர்த்திகளாக உருகி,
உறவுகளுக்கு ஒளி தர பாடுபடும்
உயர்ந்த உள்ளங்களுக்கு...



படிப்பகம்

padippakam

# என்னுரை...

புலம்பெயர் இலக்கியங்களென்றால் அவை அவலங்களையே பேச வேண்டுமென்பது அவசியமல்ல. புலம் பெயர்ந்து வாழும் மக்கள் தம் நாடு, உறவினர், வாழ்ந்த வாழ்வு உட்பட யாவற்றையும் இழந்துவிட்டார்கள். அதனால் ஏற்பட்ட சோகங்களே அவர்களது இலக்கியங்கள் என்ற பரிதாபப் பார்வைகளால் புலம்பெயர் இலக்கியங்களை நோக்குவது நீடித்த பயனுக்குரியதல்ல. மேற்சொன்ன இழப்புக்களெல்லாம் ஏற்பட்டாலும்கூட, இன்று உலக நாடுகளெங்கும் ஏழுந்து நிற்கும் புலம்பெயர் தமிழ் மக்கள் பூஜ்ஜியத்திலிருந்தே தமது வாழ்வைக் கட்டியமைக்க முடியுமென்ற அசாத்திய நம்பிக்கைக்கு உரியவர்கள் என்னும் உண்மையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

நைல் நதிக்கரையில் தோன்றிய எகிப்திய நாகரிகம் உலகில் முதற்பேரரசு ஒன்றை உருவாக்கியது. அவ்விதம் அங்கு ஓர் பேரரசு உருவாகக் காரணம், அக்காலத்து எகிப்தியர்கள் தமக்குள்ளிருந்த சகல பேதங்களையும் மறந்து செயற்பட்டமையே என்கிறார்கள். பிரமிடுக்களை அமைக்கும் கடினமான பணியில் ஈடுபட்டபோது அவர்களிடையே இருந்த பேதங்களெல்லாம் மறைய, உலகின் மிகப்பெரிய அதிசயத்தையே படைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இதுபோல பிரமிட்டாகத் தேவையொன்று கண்முன் நிற்கும்போதுதான் சமூகம் அசுரபலம் பெறுவது இயல்பாகிறது. அந்த வகையில் நமது கண்முன்னுள்ள கடமைகளை நினைத்தால் சகல சோகங்களையும், அவலங்களையும் விரட்டி, புதிய நம்பிக்கைகளைப் பெறமுடியும். அதற்குத் தடையாக உள்ள சங்கதிகளை ஒவ்வொன்றாக அடையாளம் கண்டு, அவற்றைச் சிரித்தபடியே சுட்டிக்காட்ட முயல்கின்றன இக்கதைகள். வளரும் உலகம் அறியாமைகளை சிரிப்பிற்குரியதாக்கி அவற்றைக் கடந்து செல்லவே முயல்கிறது. எல்லாவற்றையும் இடித்துச் சரித்து, நம்பிக்கை வரட்சியின் கூரிய முனைகளால் வாழ்வைப் புண்படுத்தாது, பண்படுத்திச் செல்ல இக்கதைகள் உதவுமென நம்புகிறேன்.

புலம்பெயர் வாழ்வும் அதன் இலக்கியங்களும் தளர்வடையாது உறுதியுடன் நடக்க வேண்டியிருக்கிறது. நாம் சிகரங்களைத் தொட்டுவிட்டதாக மார்தட்டவில்லை. புலம்பெயர் இலக்கியங்களில் படைப்பிற்கு அப்பால் முதலீடு, அச்சாக்கம், வெளியீடு, விற்பனை போன்ற ஏகப்பட்ட பணிகள் இன்னும் தொழிற் பிரிப்படையாமல் பெரும்பாலும் படைப்பாளிகளின் தோள்களிலேயே இருந்தாலும் சகல நாடுகளிலுமே காத்திரமான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுவது


படிப்பகம்

மகிழ்வு தருகிறது. யார் நூலை முழுமையாகப் படிக்கிறன்ராரோ அவருடைய உள்ளத்தில் இதற்கான மதிப்புரை இயல்பாகவே உருவாகும். அவற்றை எழுதியனுப்பினால் அவைகளே இந்நூலுக்கான நேரிய முன்னுரைகளாகும். அவ்வப்போது இக்கதைகளை வெளியீடு செய்து உதவிய ஈழமுரசு ஆசிரிய பீடத்தினர்க்கும், பாலம், காகம், கணையாழி ஆகிய சஞ்சிகைகளுக்கும், நண்பர் திலீப்குமாருக்கும், மற்றும் இவ்வெளியீட்டில் உறுதுணையாக நின்ற, நிற்கப்போகும் அனைவருக்கும் இதயத்தால் நன்றிகள். புலம்பெயர் வாழ்வை வெற்றிக்குரியதாக்க அதன் படைப்பிலக்கியங்கள் சோர்வின்றிப் பாடுபடும். எதிர்பார்க்கும் உயர்வுகளை நமது மக்கள் எட்டித் தொடுவார்கள் என்ற நம்பிக்கையுடன்...

கி.செ. துரை.

டென்மார்க்

23.10.98

## வீக் என்ட்!

பாலாமணி குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து நெடுநேரமாகச் சல்லடை போட்டு ஒருவாறாக அடியில் கிடந்த கோழியை வெளியே எடுத்தாள்.

அது எப்பொழுது சிவபதமடைந்தது, பக்கட் செய்யப்பட்ட திகதி, காலாவதியாகும் நாளெது, போன்ற தகவல்கள் ஏதுமற்ற நிர்வாணமாய்.. தலையிழந்து.. எந்த ஆண்டு வாங்கிப் போட்டாளோ? என்று அவளுக்கே தெரியாத நிலையில் கிடந்தது.

கால்கள் இரண்டும் தறித்து முடமாக்கப்பட்டு, குடல் வகிர்ந்துபோய்.. சிரச்சேதமாகி, தலை தொலைத்து, பனியில் உறைந்து கல்லாகிக் கிடந்தது. வெட்டுவதற்கு வசதியாக தண்ணீர்ச் சட்டியில் தூக்கிப் போட்டாள்.

கோழி ஊறுவதற்கு முன் அரிசி போட்டு, பருப்புக் கறியையும் இறக்கிவிட நினைத்தாள். அலுமாரியைத் திறந்தபோது முன்னுக்கு நீட்டியபடி உருளைக் கிழங்குமா, காய்ச்சல் றஸ்க், நூடில்ஸ் போன்ற எப்போதாவது பாவிக்கும் சாமான்கள் முழித்தபடி கிடந்தன. எல்லாவற்றையும் கீழே இறக்கி அன்றாடம் பாவிக்கும் அரிசியையும், மைசூர் பருப்பையும் எடுத்து முடிக்க போதும் போதுமென்றாகிவிட்டது.

அலுமாரிக்குள் கிடந்த பொரித்த அப்பளம், முறுக்கு, மிக்சர், பொரித்த எண்ணெய் என எல்லாமே சேர்ந்து மெல்லிய சக்கு மணம் வீசியது. அலுமாரியில் அங்குமிங்குமாக தெரியாத ஐரோப்பியப் பூச்சிகள் ஊர்ந்தும், பறந்தும் கொண்டிருந்தன. கதவைப் பத்திரமாக மூடினாள்.

“மாதத்திலை முதல் கிழமை ஒருத்தரையும் கூப்பிடாதை. கரைச்சல் கரைச்சலெண்டன் கேட்டாளே!” பழுப்பேறிய் போயிருந்த பாத்ரூமை “கறாச் கறாச்” சென மரத்தும்பால் தேய்த்தபடியே சூதலிங்கம் புறுபுறுத்தார்.

“தும்புத்தடி ஒரு பக்கம்! உந்த மனியன் ஒருபக்கம்! ஒண்டும் விளங்கேல்லையப்பா! என்னனை சொல்லுறியள்?'' இருவரும் மாறிமாறிக் கத்தி, கடைசியில் அவரே தும்புத்தடியும் கையுமாய் குசினிக்குள் போய் பலத்த குரலில், “மாசத்திலை முதல்கிழமை..!” என்று நீட்டினார்.

“நானே வாங்கோவெண்டு ஆலாத்தி எடுத்தது? வாறனண்ட சனத்தை என்ன வரவேண்டாமெண்டுறதே?” குளிர்சாதனப் பெட்டியை சட்டென இழுத்தாள். முன்பக்கமாக எல்லாவற்றையும் மறைத்தபடி கிடந்த இலைக்கோவாவும் ஒரு நுள்ளுப்போல கரைந்து வைத்திருந்த புளிக்கிண்ணியும் உருண்டு கீழே சரிந்தன. சூதலிங்கம், “கப்சிப்!” ஆனது.

''முதலிலை பாத்ரூமைக் கழுவிப் போட்டு, பாலை வேண்டியாங்கோ! பிந்தினியளோ பால் முடிஞ்சுபோடும்.'' சீலைப்பையைத் தூக்கிக் கீழே போட்டாள்.

இங்கிருந்து பில்கா மாக்கற் போய்வர பத்து கிலோமீட்டர் தூரமிருந்தது. ஆறு பெட்டிப்பாலுக்கும் கிடைக்கக்கூடிய மொத்த இலாபம் ஒரேயொரு குறோண். பெற்றோல் விரயத்தையும் கிடைக்கும் ஆதாயத்தையும் கூட்டிப் பார்த்தபோது, பைத்தியக்காரத்தனமாகப் பட்டது. ஆனால் நிறையத் தமிழர்கள் அவரைவிடத் தொலைவிலிருந்தே பாலுக்காக வருவதால் மக்களைப் பகைக்கப் பயந்து வாயை மூடிக் கொண்டார்.

கடைக்குள் போனபோது சனக் கூட்டம் நிறைந்து கிடந்தது. நாலைந்து கறுப்புத் தலைகள் தெரிந்தன. அவர்களும் பாலுக்குத்தான். காதிற்குள் வந்து, “எவ்வளவு கழிவு?” என்று குடைந்து குடைந்து சென்றனர்.

''மாதத் தொடக்கத்திலேயே கழிவு கழிவெண்டுதானே எல்லாருமே கழிவுகளாய்க் கிடக்கிறம்!'' என்று கத்தவேண்டும் போலிருந்தது. தானும் ஒரு சீட்டுத்தாய்ச்சி என்பதை உணர்ந்து அடக்கிக் கொண்டார்.

கால்கடுக்கக் காத்துநின்று ஆறு லிட்டர் பால் பெட்டிகளையும் கவுண்டரில் அடுக்கியபோது, அதில் இருந்தவன் அவரையே ஏற இறங்கப் பார்த்தான். ''மற்ற பொருட்களையும் வாங்க

வேணுமெண்டுதான் ஒரு பொருளை மலிவாகப் போடுறது இது கூட தெரியாத ஜடமாயிருக்கிறாயே!" என்று அவன் கேட்காவிட்டாலும்; பார்வை அப்படித்தானிருந்தது. பால் பெட்டிகளைக் கோபத்தோடு தள்ளிவிட்டான். சூதலிங்கத்திடம் அதற்கும் ஒரு அசட்டுச் சிரிப்பு.

காரை நிறுத்தத்திலிருந்து நகர்த்தியபோது, வெளியில் உருளைக் கிழங்கு மூடைகள் அடுக்கி வைத்திருப்பது தெரிந்தது. பழைய லாடா காரிலிருந்து ஒரு கிழவன் சடாரெனக் கீழே இறங்கினான். ஒரு மூடை கிழங்கு மாயமாய் மறைந்தது. நல்லவேளை அந்தக் கிழவன் ஒரு தமிழனல்ல. சூதலிங்கத்திற்கும் அப்படியே ஓர் ஆசை தூண்டியது. அடக்கிக் கொண்டார்.

வீடு வந்து சேர சோறும் பருப்பும் இறங்கிவிட்டது. கோழிக்கறியின் வாசம் மாடியிலிருந்து படியிறங்கி கீழே வந்து கொண்டிருந்தது. தூளைப்போட்டு, சீரகத்திற்கு ஒரு தடவை, இன்னொரு தடவை உள்ளி, பிறகு இஞ்சி, கறிவேப்பிலை என்று ஒவ்வொன்றாக யோசித்து யோசித்து, இங்கும் அங்குமாகத் தேடி எல்லாவற்றையும் போட்டு முடிக்க இறைச்சிக் குழம்பு பாரதக் கதையாக நீண்டு, கோழியும் கரைந்து கிடந்தது.

பால் பெட்டிகளோடு உள்ளே வந்தவர் குசினியைப் பார்த்ததும் விறைத்துப் போய் நின்றார். "என்னடியப்பா ஒரு குழம்பு வைக்கிறதுக்கு உலகத்துச் சட்டிபானையள், கிண்ணியள் எல்லாத்தையும் எடுத்துக் கடை பரப்பி வைச்சிருக்கிறாய்?" கடைகாரன் மீதிருந்த கோபத்தைக் காட்டமாக இறக்கிவிட்டு, மண்டபத்தை ஒழுங்கு படுத்தத் தொடங்கினார்.

"எணேய்! எப்பன் இஞ்சை வானை! போன கிழமை சதுத்தியாலை கொண்டந்த தேங்காய்க் கையிலுகள் சும்மா கிடக்குது. துருவினியளெண்டால் சம்பலரைச்சுப் போடலாம். விருப்பமா சாப்பிடுங்கள்." தேங்காய்க் கையில்களைத் தூக்கிப் பாத்தார். தேரை மேய்ந்த தேங்காய்கள் போலக் கிடந்தன. திருகு வலையில் கொடுத்து சுழற்றத் தொடங்கினார்.

நினைவுகளும் அதுபோல சுழன்றன. "இந்த ஐஞ்சு வரியத்திலை ஒரு நாள் எங்க வீட்டுப் பக்கம் வந்திருப்பானே? இண்டைக்கென்ன கலியாணமோ குடும்பத்தோடை வாறனெண்டுறான். புண்ணாக்கன் சும்மா வரமாட்டான்."

"அந்தாளை ஏனணை திட்டுறியள்? அந்தாளுக்குப் போஸ்ட் மாஸ்டரெல்லோ இஞ்சத்தையில் பேர்!"

"போஸ்ட் மாஸ்டர், மாஸ்டர், கிளார்க்கு, பிறிஞ்சிப்பல் உதெல்லாம் இஞ்சை தலை நரைச்சாக்களுக்கு வைக்கிற பேரடியப்பா! அதுதான் நான் அவனை ஊரிலை கூப்பிடுற மாதிரியே புண்ணாக்கன்சாமியெண்டுறது. எல்லாம் அன்புதான். ஒண்டாய் படிச்சவனெல்லோ!" மாசுக்கருவாடும் சதுர்த்தித் தேங்காயும் சம்பலில் சங்கமமாயின.

ஒரு மணி ஏழு நிமிடத்திற்கு புகைவண்டி வரும். சூதலிங்கம் குளித்துவிட்டு ஸ்டேசனுக்குக் காரைக் கிளப்பினார். அவர் திரும்புவதற்குள் இவள் குளித்து வெளிக்கிட வேண்டும். பாலாமணி பரபரப்பாகினாள்.

கடமைக்காக நாலுதரம் தண்ணீரை மேலும் கீழும் பிசிறியடித்துவிட்டு, நடுங்கியபடியே துவாயைச் சுற்றிக் கொண்டு, அறைக்குள் ஓடினாள். அதற்குப் பிறகுதான் அவளுக்குரிய பெரிய பிரச்சனையே உருவெடுத்தது.

ஒரே ஒரு பழைய சட்டையையே போட்டுக் கொண்டு அது கிழிந்து போகும்வரை காத்திருக்கும் பாரம்பரியம் இப்போது வீட்டை மறைத்துக் கிடக்கும் நான்கு அலமாரிகளிலும் சிங்கப்பூர், இந்திய, ஐரோப்பிய மலிவு விலை உடுப்புக்களால் நிறைந்து கிடக்க எந்த உடுப்பைத் தெரிவு செய்வதென்று தெரியாது தடுமாறினாள்.

எந்தப் பிடவை எங்கே கிடக்கிறது? அதற்கான இறவக்கை எந்த அலுமாரியில் சிக்குண்டு கிடக்கிறதெனத் தெரியாமல் ஒவ்வொரு உடுப்பாக எடுத்துக் கட்டிலில் வீசிக் கொண்டிருந்தாள். போர்வை, தலையணை, உடைகள் சகிதம் கட்டிலில் ஒரு கோபுரமே வளர்ந்து கொண்டிருந்கது.

கடைசியாக ஒரு இடைக்காலப் பஞ்சாபியை எடுத்து மாட்டிக் கொண்டு கண்ணாடிக்கு முன்னால் வந்து பார்த்தபோது கமக்கட்டில் தையல் பிரிந்து, ஓர் ஓட்டை தெரிந்தது. ஊசி நூலைத் தேடி ஓடினாள். அது எங்கு கிடக்கிறதோ? அதற்குள் சூதலிங்கமும் சாமி குடும்பமும் வந்து வாசல் மணியை அமுக்கினார்கள். கதவைத் திறந்து விட்டு துவாய்த் துண்டை வாயில் கௌவியபடியே மீண்டும் ஓடினாள்.

பெண்சாதியையும் கடைசிப் பிள்ளையையும் மட்டுமே கூட்டி வந்திருந்தார். கடைக்குட்டி சிறு பையன் பற்களோடு பார்த்தால் முயல்குட்டி போல துருதுருப்பாக இருந்தான். மடியில் தொலைபேசி, பொக்கற்றில் கல்குலேட்டர் சகிதம் அவரைப் பார்த்தபோது அவரும் தன்னைப் போலவே கழிவு கணக்குக் கேஸ்தான் என்று எடைபோட்டுக் கொள்ள சூதலிங்கத்தாருக்கு அதிக நேரமாகவில்லை.

சம்பிரதாயமாக எல்லோரையும் விசாரித்துக் கொண்டார். அதற்குள் சின்னவன் வீட்டை நாலு தடவைகள் சுற்றி வந்துவிட்டான். அடங்கவைத்த மண்டபம் பாலாமணியின் குசினிபோல தலைவிரி கோலமானது.

''பறவாயில்லை குழந்தையள் எண்டால் எப்பவும் அப்பிடித்தானே!" என்றார் சூதலிங்கத்தார். ஓங்கி நாலு சாத்து சாத்தவேணுமென்று மனதில் மூண்ட கோபக் கனலை எப்படியோ சிரிப்பாக மாற்றியிருந்தார். இப்பொழுது பாலாமணி பஞ்சாபியைக் கழற்றிவிட்டு புதுச்சாரி கட்டி, மடமடப்புக் குலையாமல் வந்து சேர்ந்தாள்.

“எல்லாரும் சாப்பிட்டிட்டு, ஆறுதலாய்க் கதைக்கலாம்!” என்றபடி பாலாமணி சாப்பாட்டை ஒவ்வொன்றாக மேசைக்கு எடுத்து வந்தாள். இடையில் சூதலிங்கம் ரெக்ஸ் ரீவியை அடித்து நாட்டில் எதுவும் நடக்கவில்லையென உறுதி செய்த கையோடு டொலரின் இன்றைய பெறுமதியையும் தெரிந்துகொண்டு, மனதில் திருப்தியடைந்தார்.

“கோழிக்கறியிலை பயப்பிடாமல் போட்டுச் சாப்பிடுங்கோ!” பாலாமணி பரிமாறியபடியே அனைவரையும் உசார்ப்படுத்தினாள். அவள் மட்டும் இன்று மச்சம் மாமிசம் இல்லை, சனி விரதம். என்ன சொல்லியும் சிறுவன் உறைப்பிற்குப் பயந்து சாப்பிட மறுத்தான். புருசன் பார்த்த பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டு, மனைவி குணேஸ் சிறு தட்டில் வெறுஞ் சோறும், முட்டையும், பருப்புக் கறியும் போட்டுக் கொண்டே மகனைத் தேடினாள்.

“ஏப்பப்ப ஏப்பே! சீக்கா மேக்கா மாயா ஈக்க பங்க மை! ஈகிகி கீ!” பெடியன் மேசைக்குக் கீழிருந்து வெளிப்பட்டு, கண்ணாமூச்சி காட்டினான். தாயும் விடவில்லை கலைத்துக் கலைத்து ஊட்டினாள். அவன் கையை உதற , மேசையிலிருந்த தண்ணீர்ச்சாடி சரிந்தது. “பெடியன் வலுசுட்டி!” சூதலிங்கத்தார் அன்பாகச் சிரித்துக் கொண்டார். அதற்குப் பின் சிறுவன் மேலும் மேலும் வேகமெடுத்து, சூதலிங்கத்தின் உயிரி நாடியான ரீவியைச் சுற்றிச் சுற்றிச் ஓடத் தொடங்கினான்.

ரீவி விழுமுன் பெடியனைப் பிடித்துவிட முயன்றாள் குணேஸ். உடனே அவன் குறுக்குப் பக்கமாக ஓடினான். அப்போது முன்னால் எதிர்ப்பட்ட கண்ணாடி ஜன்னலைக் கவனிக்கவில்லை. “படார்!” என்ற சத்தம். அப்படியே சுருண்டு விழுந்தான். “ஐயோ!” என்று தலையில் அடித்துக் குளறியபடியே பாய்ந்து ஓடினார் சூதலிங்கம்.

தன்னுடைய பிள்ளையின் மீது சூதலிங்கத்திற்கு இவ்வளவு அக்கறையா? என்று ஒரு கணம் அதிசயப்பட்டு நெகிழ்ந்தார் சாமி.

ஆனால் பிள்ளையைக் கடந்து, அப்பாலும் ஓடிய சூதலிங்கம் ஜன்னல் அருகே சென்று கண்ணாடி உடைந்துவிட்டதோவென தடவிப் பார்த்ததைக் கண்டதும் அவருக்கு எல்லாமே 'சப்' பென்றாகியது.

பிள்ளைக்கு மண்டை பிளந்து இரத்தம் ஆறாகப் பாய்ந்து கொண்டிருந்தது. மனைவி குணேஸ் அடைத்த குரலில் கூச்சலிட்டாள். அதற்குள் பக்கத்து வீட்டு டெனிஸ்காரன் சத்தம் பொறுக்க முடியாமல் ஓடிவந்து விட்டான். பிள்ளையையும் தூக்கியபடி தாய் தகப்பனையும் ஏற்றிக் கொண்டு, சாப்பிட்ட கையும் கழுவாமல் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார் சூதலிங்கம்.

அது சிறிய வைத்தியசாலை. பிள்ளைக்கு முதலுதவிச் சிகிச்சை அளித்தார்கள். தலை படமெடுத்தல் உட்பட, மற்ற காரியங்கள் அடுத்த நகரத்தில் இருக்கும் வைத்தியசாலையில்தான் நடைபெற வேண்டியிருந்தது. தாயையும் தகப்பனையும் ஏற்றிக் கொண்டு, அம்புலன்ஸ் வண்டி புறப்படத் தயாரானது. சிறுவனுக்கு மயக்கம் தெளிந்தபாடில்லை.

காசு பணம் எல்லாம் சேத்தாச்சு, குடியுரிமையுட்பட மற்ற மற்றக் காரியங்களும் நிறைவேற்றியாச்சு. தனித்தனி ஆக்களெல்லாம் ஆளுக்கொரு சங்கத்தைத் தொடங்கி தலைவர்மாருமாகியிட்டாங்கள். இனி நாமளும் ஒரு மனிசனெண்டு காட்ட ஒரு சங்கத்தைத் தொடங்கினாலென்ன? சாமிக்கு தோன்றிய விபரீத ஆசைக்கு பொருந்தி வந்தது ஊர்ச்சங்கம் ஒன்றுதான். அதுதான் ஒறிஜினல் ஊராக்களைத் தேடி சூதலிங்கத்திடம் வந்திருந்தார். வந்த பயணம் முதன் முதலிலேயே அபசகுணம் பிடிச்சமாதிரி பெடியின்ரை மண்டை பிளந்துவிட்டதால் மௌனமாகவே புறப்பட்டார்.

"நல்லவேளை சன்னல் கண்ணாடி பிழைத்தது!" என்றபடி காரை ஸ்ராட் செய்தார். அப்போது வயிற்றுக்குள்ளும் இறக்கமாக ஒரு "ஸ்ராட்!" சத்தம். சிறைகிடந்த கோழி கைவரிசையைக் காட்ட ஆரம்பித்திருந்தது. புண்ணாக்கன் ஏன் வந்தான்? என்பதையும் கேட்க மறந்து, வீட்டை நோக்கி காரை வேகமாக மிதித்தார் சூதலிங்கம்.

# ஓடிப்போனவர்களின் ஓடிப்போனவள்!

வேறொன்றுமில்லை நடந்தது இதுதான்.

டர்மினி ஓடிவிட்டாள்! அதென்ன டர்மினி? சரியாகச் சொல்வதானால் தர்மினி என்றாவது வந்திருக்க வேண்டாமா? இப்படியாகத்தான் அம்பலவாணரிடம் முன்னரும் சில தமிழர்கள் விசாரித்திருக்கிறார்கள்.

பிறந்த திகதியுடன் பெயரின் எண்ணிக்கையும் சரியாகப் பொருந்தி வரவேண்டுமானால் அவளுக்குப் பெயர் டர்மினியேதான். அதிர்ஷ்டதேவதை சூட்டிவைத்த பெயரென்று அம்பலவாணர் சுமார் பதினெட்டு வருடங்களாகப் புழுகி வந்திருக்கிறார்.

வைத்திருக்கும் பெயருக்காக என்றோ ஒருநாள் அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும் என்றே காத்திருந்தார். எதிர்பார்த்தபடியே சென்ற வாரம் ஒரு அதிகாலையில் அதிர்ஷ்ட தேவதை கூரையைப் பிரித்து வைத்திருந்ததையும் கண்டு கொண்டார். டர்மினி காதலனுடன் அந்த வழியாகத்தான் ஓடியிருந்தாள்.

பக்கத்து வீட்டில் குடியிருப்பது மனைவியை வீட்டில் சிறை வைத்திருக்கும் இரும்புப் பூட்டு முருகேசு. அவரும் அம்பலவாணரும் ஜென்மப்பகை. ஆனாலும் அவருடைய வீழ்ச்சியையோ, துக்கங்களையோ கேள்விப்பட்டால் துடித்துப் பதைத்து முதல் முதலாக ஓடிவரும் சீவன். போன வருடம் அம்பலவாணரின் கார் களவு போனபோது கண்ணீர் விட்டே அழுதிருக்கிறார். அது ஒரு வகை ஆனந்தக் கண்ணீர் என்பதே அம்பலவாணரின் கோபம்.

டர்மினி ஏன்தான் இப்படிச் செய்தாளோ? இரும்புப் பூட்டு

முருகேசுவிற்கு விஷயம் தெரிந்தால் அவன் எவ்வளவு ஆனந்தப் பட்டுப் போவானென்று முதலில் பெரும் கவலை கொண்டார். அதனால்தான் டர்மினி எங்கே ஓடிப் போனாள், யாருடன் ஓடிப்போனாள், என்ற ஆராய்ச்சிகளை மிக இரகசியமாகவே மேற்கொண்டார்.

குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். நான் கடவுள் ஒருவரால் புதிதாக ஆசீர்வதிக்கப் பெற்றிருப்பதும்; டென்மார்க்கில் பத்து வருடங்களாக வாழ்ந்து, அதன் பேறாக கொழும்பில் ஒரு வீடு வாங்கியிருப்பதும் இதுவரைக்கும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

இங்கிருந்து நூறு கி.மீ. தொலைவில்தான் அசன்போ நகரம் இருக்கிறது. அது காட்டின் நடுவே நாலைந்து வீடுகளும், சுற்றவர மாட்டுத் தொழுவங்களுமாகக் காணப்படும். தொடக்கத்திலும் முடிவிலும் தொங்கும் இரண்டு பெயர்ப் பலகைகளுக்காக அதையும் ஒரு நகரமென்றே அழைக்க வேண்டியிருந்தது. முட்டைகளும், உருளைக்கிழங்குகளும் வீதியோரம் வைத்து விற்கும் நாட்டுப்புற டெனிஸ்காரரே அங்கிருந்தார்கள். அவர்களோடு ஒரே ஒரு தமிழனும் வாழ்ந்து வருகிறான். அவன் அதிக பிள்ளைகுட்டிக்காரன்.

“தமிழ்ச் சனத்தின் சோலியே வேண்டாமென்று நாங்கள் ஒதுங்கியிருக்கிறோம்!” என்று அவனும் மனைவியும் அடிக்கடி என்னிடம் கூறுவார்கள். சிறிய நகர சபை. அங்கு ஒரே ஒரு அகதிக் குடும்பமாக இருந்தால் சலுகைகளை அதிகம் பெறலாமென இவனோ இவனைப் போன்று வாழ்ந்துவரும் மற்ற தமிழர்களோ என்னிடம் கூறுவதேயில்லை.

அவனைப் போலவே எனக்கும் வேலைவெட்டி கிடையாது. ஏனென்றால் எந்த வேலைக்குப் போனாலும் எனக்கு நாரிப் பிடிப்பு வந்து தொலைத்து விடுகிறது. எல்லா வைத்தியர்களும் கைவிட்டு விட்டார்கள். ஆனாலும் இப்போது ஒருவாறு கைநிறைய பென்சன் பணத்தைப் பெற்றுக் கொள்கிறேன்.

பென்சனியர்களுக்கு இங்கே பஸ் ரிக்கட் அரைக் கட்டணம். இதைப் பயன்படுத்தி மாதந்தோறும் பல நகரங்களுக்கும் பயணஞ்செய்து, இறைவனின் அருளால் எனது வட்டிப் பணத்தை ஒழுங்காக வசூலித்துக் கொள்வேன். பென்சன் கிடைத்ததோடு எனது நாரிப் பிடிப்பும் தொலைந்து போன இடம் தெரியவில்லை. அதுவும் கடவுள் கிருபையே!

அதற்குப் பிறகுதான் எனக்கு ஒரு மகள் பிறந்ததும் எனது மனைவிக்கு அறுபது பவுணில் ஒரு ஒட்டியாணம் செய்ததையும் இங்கு

padippakam

பினாத்திக் கொண்டிருப்பதை விட மறுபடியும் டர்மினியின் விஷயத்திற்கே வந்து விடுகிறேன்.

அந்த அசன்போ நகரத் தமிழனின் வீட்டில்தான் டர்மினியும், அவளோடு ஓடிப்போன பெடியன் டிஸ்கோ ராஜும் இருப்பதைக் கண்டேன். அப்பொழுதே எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை! நடுக்கமும், ஓட்டமுமாக எல்லாவற்றையும் மறந்துபோய் வீடுவந்து சேர்ந்து விட்டேன். எவ்வாறாயினும் எனது வட்டிப் பணத்தை மட்டும் நான் எப்போதுமே மறந்து விடுவதில்லை.

எனது ஒரே நண்பன் ஆறுமுகம். அவனும் என்னைப் போல ஒரு பென்சனியர். அவனுடைய பிரச்சனை மூக்கை அடைக்கும் தூசு. ஒருவருக்குமே சொல்லக் கூடாதெனச் சத்தியம் வாங்கி விட்டு, அவனிடம் மட்டுமே விஷயத்தைக் கக்கினேன்.

அவனும், அவனுக்குத் தெரிந்த மற்றவர்களும், மற்றவர்களின் மற்றவர்களும் தமக்குத் தமக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் இப்படியாக சத்தியம் வாங்கிவிட்டே சொல்லியிருப்பதால் இப்போது டர்மினி ஓடிப்போன செய்தி தெரியாத சத்தியவான்களைக் காண்பது அரிது.

அம்பலவாணர் ஷேவ் எடுக்காத முகத்துடன் விசரன், பைத்தியக்காரன் போல புலம்பிக் கொண்டிருந்தார். மனைவி பூரணநாயகி தலைவிரி கோலமாய்க் கிடந்தாள். ''கந்தசஷ்டி விரதத்திற்குப் பிறகு நாலு நாளா அன்னந்த தண்ணி இல்லாமல் கிடக்க வைத்து விட்டாளே!" என்று ஒப்பாரி வைத்தாள். செத்த வீடு போல என்று நான் ஏன் சொல்ல வேண்டும்? செத்த வீடேதான். நாலு பக்கத்தாலும் சனம் வேடிக்கை பார்க்கச் சரிந்து கொண்டிருந்தது.

இனி என் பங்கிற்கு நானும் போயே ஆகவேண்டும். என்றாலும் வெறுங் கையை வீசியபடியே எப்படிப் போவது? என்னிடம் ஒரு ஹொர்லிக்ஸ் போத்தலிருக்கிறது. அதைப் பாவித்து முடிப்பதற்கான கடைசித் திகதிவர மேலும் நான்கு நாட்களே பாக்கியிருந்தன. இரண்டு வருடங்களுக்கு முன் இதை ஒரு தமிழ்க் கடையில் முதன் முதலாக வாங்கியவன் நானே! சாட்சியம் அதில் நான் பதித்து வைத்திருந்த சிறு அடையாளமாகும். தலை நகர் சென்றபோது வருத்தமாக இருந்த ஒரு தமிழ் நண்பருக்குக் கொடுத்திருந்தேன். அது எங்கெல்லாமோ சுற்றி என்னிடமே வந்து சேர்ந்திருக்கிறது. எவ்வாறாயினும் அது அம்பலவாணருக்காகவே நேர்ந்து விடப்பட்ட ஆட்டுக் குட்டியென்பதையும், என்றுமே விதிக்குள்ள வலிமையையும்



படிப்பகம்

padippakam

மறுபடியும் மெச்சியபடியே துக்கம் விசாரிக்க நானும் போய்ச் சேர்ந்தேன்.

எனக்கு முன்பே அங்கு பலர் வந்திருந்தார்கள். அம்பலவாணர் என்னைக் கண்டதும் ஒவென்றே அழுதுவிட்டார். என்னுடைய கடைசிக் கவலையை வெளிப்படுத்துவதற்காக நான்கு தடவைகள் அழுகையோடு அழுத்தமாகக் குக்கியும் வைத்தேன். அழுகையும் புலம்பலுமாகப் பூரணநாயகி எனது ஹொர்லிக்ஸ் போத்தலை எடுத்துப் பாத்திரப் படுத்துவதை எனது கண்களும் ''சடக்''கெனக் கொத்திக்கொண்டன.

“அண்ணைக்குத் தெரியுந்தானே? நான் வாழ்க்கையிலை என்ன சுகத்தைக் கண்டன்? என்னைப் போலை உந்தப்பிள்ளையும் கஷ்டப்படக் கூடாதெனண்டுதானே கேட்டதையெல்லாம் வாங்கிக் குடுத்தன். கடைசியிலை இப்பிடிச் செய்து போட்டாளே!" என்று அம்பலவாணர் அழ எனக்குக் கொஞ்ச நேரமாகப் பேய்க் கிறுதியாய் கிடந்தது. எண்டைக்கு இந்தச் சலரோகம் வந்து துலைச்சுதோ அண்டையிலிருந்து இப்பிடித்தான் ஒரு தலைச் சுத்து. சீனிபோடாமலே ஒரு ரீ போடும்படி வேண்டிக் கொண்டேன்.

கேட்டதையெல்லாம் தவறாது வாங்கிக் கொடுத்து வந்ததால் டர்மினிக்கு இந்த, “வாங்கிக் கொடுத்தல்!" என்ற விவகாரமே அலுத்துப் போயிருக்க வேண்டும். இனி அம்பலவாணர் சீதனம் கொடுத்து, ஒரு மாப்பிள்ளையையும் வேண்டிக் கொடுக்க முன்னரே அவள் தப்பித்துக் கொண்டாளோ யாரறிவார்.

என்னுடைய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, சுற்றவர இருந்த சனத்தையெல்லாம் பார்த்தேன். வரவேண்டிய எல்லோரும் வந்திருந்தனர். மூலையில் இருந்த இருவர் மட்டும் அம்பலவாணரையே அழாத குறையாகப் பார்த்தபடியிருந்தனர். ஊடுபற்றிய லாந்தர் போல ஒளிகுன்றிய முகங்களையுடைய அந்த இருவருமே அம்பவாணரின் உயிருக்காக அகத்தால் ஆண்டவனிடம் மன்றாடினர்.

யார் இந்த மனித நேயமுள்ள இரு மானுடர்கள்? இந்த இருவரையும் யாருக்காவது தெரியாதிருந்தால் அவர்கள் நிச்சமயமாக இந்த நாட்டைச் சேர்ந்தவர்களல்ல. இவர்கள் இருவருமே நகரத்தின் முக்கிய ஏலச் சீட்டுத்தாய்ச்சிகள். ஒருவேளை அம்பலவாணர் மண்டையைப் போட்டுவிட்டால் பாக்கிப் பணத்தை எப்படி வசூலிப்பதென்ற கவலையை அவர்களையல்லால் யாரறிவார்?

''அண்ணே! காலங் கெட்டுக்கிடக்கு அம்பலவாணற்றை அடியென்ன முடியென்ன? இப்ப வெளிநாடு வந்து, பிள்ளை குட்டி



படிப்பகம்

முறைதலை தெரியாமல் கலக்குப் படுகுதுகள்! எனக்கு அந்தப் பெடியனையும், அவங்கடை ஆட்களையும் ஆரெண்டு.." இறப்பர் போல இழுபட்ட ஒரு குரல் பின்புறமாக வந்தது. அப்பொழுதான் எனக்கு முந்தியே பீதாம்பரத்தாரும் வந்து விட்டதைத் தெரிந்து கொண்டேன்.

கந்தரோடை ஆய்ச்சி வளவிலிருந்த ஏதோ ஒரு அம்பாளுக்குக் கொடியேறிவிட்டதாகவும், தான் விரதமிருப்பதால் எங்குமே வாய் நனைக்க முடியவில்லை யென்றும், அனைவருக்கும் கேட்கும்படியாகக் கூறிக் கொண்டார்.

என்றாலும் அந்தப் பெடியனின் சாதிப் பெயரை மட்டும் அவர் ஏன் கூறாமல் சாப்பிட்டுக் கொண்டார் என்பதே என் கவலையாயிருந்தது. அதைக் கேட்கும் போது அம்பலவாணர் எபபடித் துடிதுடிக்கிறா ரென்பதைக் காண யாருக்குத்தான் ஆசையிராது? அந்தப் பெடியனின் உறவினன் ஒருவனும் அங்கு வந்து தொலைந்திருப்பதால் அந்த இன்பத்தை ஒருவருமே சுவைக்க முடியாமல் போய்விட்டது. எவ்வாறாயினும் சட்டப்படி இங்கு ஒருவரும் சாதி பார்ப்பதில்லை யென்பதையும் முதலில் உரத்த குரலில் பிரகடனப் படுத்திக் கொள்கிறேன்.

"பெடியனுக்கும், பெட்டைக்கும் பதினெட்டு வயது முடிஞ்சுது. பிறகு மற்றாக்கள் இதிலே ஏனாம் தலையிட வேணும்? இனி அவர்களுடைய வாழ்க்கையை அவர்களே தீர்மானிக்கலாம்!"

"அதெண்டால் சரி! இந்தப் பழமைகளை உடைத்தெறிந்து, புதுமைகளை வரவேற்போம்! கிழடுகளே வழிவிடுங்கள்!" என்றாவாறு நேற்று ஓடும் பஸ்சில் இரண்டு இளசுகள் பேசிக் கொண்டார்கள். எனக்கும் புதுக்குடியிருப்பு ஆண்டியப்பருக்கும் கேட்க வேண்டும் என்ற நோக்கோடு சத்தமாகக் கதைத்தார்கள்.

"புதுமை வேணுந்தான்! பழமையையும் உடைக்கத்தான் வேணும்! அதுக்கு முந்தி பழமையை வடிவாக விளங்கி, அதிலை இருக்கிற பிழைகளைக் காரண காரியங்களோடை சுட்டிக் காட்டுங்கோ! அந்த இடத்துக்குப் புதுமையைக் கொண்டுவாங்கோ? ஆர் வேண்டாமெண்றான்? பழமையின் அரிச்சுவடியும் தெரியாது பழமையை உடைச்சுப் புதுமையைக் கொண்டரப் போகினமாம்" என்று ஆண்டியப்பர் என்னிடமே கொக்கரித்தார். நல்லவேளை அவர் ஒரு பழைய ஹெட்மாஸ்டரென்பது ஏற்கெனவே இறங்கிப் போய்விட்ட இளவட்டங்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. இருந்தாலும் ஆண்டியப்பர் சொன்ன அந்தக் கருத்தாகப் பட்டதைக் கேட்டிருந்தால் என்னைப் போலவே அவர்களுக்கும் அவ்வளவாக விளங்கியிருக்க நியாயமில்லையென்றே நினைக்கிறேன்.

ஏனெனில் அவர்களோ டெனிஸ் மொழியில் பேசுகிறார்கள். இடுப்புகளில் தொங்கும் "வோக்மன்" மட்டும் அரபிக் கடலோரம் என்று டிஜிற்றல் தமிழ் பாடுகிறது. பெண்களின் முன் கதாநாயகர்களாக வலம்வர எங்களைப்போலவே அவர்களும் சிங்கப்பூர் உடைகளையே அணிந்திருந்தனர். இருந்தாலுமென்ன, "காதலிக்கும் போதும், திருமணம் செய்த பிற்பாடும் சினிமாக்களில் வருவதைப் போலவே பெண்களைக் கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டுமென்பதில் அவர்களும் நம் போன்ற கிழவர்களுடன் என்றுமே உடன் படுகிறார்கள் என்றும் ஹெட்மாஸ்டரை சமாதானம் செய்தேன். கல்யாணம் பண்ணுவதற்கு மட்டுமே புதுமையை விரும்புவதென்பது சம்பந்தர் காலத்திற்கு முன்பே அமுலில் உள்ளதாக அவர் சொன்னதை அதிர்ஷ்டவசமாக நாங்கள் அறிந்திருக்கவில்லை.

டிஸ்கோராஜ் ஆயிரம் தமிழ் "சீ.டி."க்கள் வைத்திருப்பதால்தான் டர்மினி அவனைத் தேர்ந்தெடுத்தாளென்று வேறு சில இளைஞர்கள் பொறாமைப்பட்டுக் கொண்டனர். அவர்கள் ஆயிரம் சீ.டி.க்களுக்கும் குறைவாக வைத்திருப்வர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்களில் ஒருவன் ஹெட்மாஸ்டரின் மகன் என்பதாலும் அவரிடம் இதுபற்றி நான் அதிகம் பேசவில்லை.

ஒரு வார காலமாகப் போகும் வரும் இடங்களிலெல்லாம் டர்மினி அம்பலவாணர் பற்றியே கதைக்கப்படுவதை நினைத்த போதே எனது தேநீர்க் கோப்பையும் காலியாகிவிட்டது.

"நீங்கள்தான் சொல்ல வேணும்! இவளுக்கு நான் என்னவாம் குறைவைச்சனான்? அவள் இப்ப எங்கே" என்று அம்பவாணர் என்னைக் கேட்காமல் முன்னாலிருந்த எழுத்தாளர் முழக்கத்தைப் பார்த்துக் கேட்டதையும் நான் கவனிக்காமலில்லை.

இப்படியொரு கேள்வியை திருவாளர் முழக்கம் எதிர்பார்த்திருக்க முற்றிலும் நியாயமில்லை. மேலும் முழக்கம் அவர்கள் ஆரம்பித்திருக்கும் புதிய புலம் பெயர்ந்தோர் கழகத்திற்கு அம்பலவாணர் மனைவியே வடைகளைச் சுட்டுக் கொடுப்பவள். எனவே எவ்வாறாயினும் அவர்களுக்கும் ஒரு சாதகமான பதிலைக் கூற அவர் கடமைப் பட்டிருந்தார்.

மேலும் கூறப்பட வேண்டியதென்னவென்றால், அவர் டிஸ்கோ ராஜையும் அவனின் நண்பர்களையும் தொடர்ந்து முற்போக்கு மழையில் குளிப்பாட்ட வேண்டியுமிருந்தது. எதையாவது உளறிவைத்தாலோ சூழ்ந்திருக்கும் தலையில்லா மனிதர்கள் எல்லா பழிகளையும் அவர் தலையிலேயே போட்டுவிடவும் வாய்ப்பிருந்தது.

அல்லாமலும் பிள்ளை பிறந்ததும் அம்பலவாணரும், மகளும் ஒன்று சேர இருக்கும் அரிய அனுகூலங்களையும் அவரால் நிராகரிக்க முடியவில்லை.

இவையெல்லாவற்றையும் விட ஆபத்தான காரியம் அருகிலிருந்த கூழ்க்கண்ணன் மாயவனின் பாம்புக் காதுதான். மாயவன் எப்போதுமே எல்லாவற்றையுமே குறை சொல்பவன். அதனால் அவனுக்குப் பட்டம் கூழ்க்கண்ணன். அவனுக்கும் ஏதாவதொரு பதவியைப் பட்டத்தைக் கொடுத்தால் அவனால் யாவற்றையும் புகழமுடியும் என்பதையும் இங்கு சொல்லாமல் விடமுடியாது. எவ்வாறாயினும் இவை யாவற்றிலிருந்துமே தப்பிவிட முடிவெடுத்த திருவாளர் முழக்கம் இந்திய தமிழ்ச் சினிமாவையும், அவற்றின் சீர்கேடுகளையும், அவற்றினூடாகப் புலம் பெயர் சமூகத்தையும் இணைத்து அருமையான விமர்சனமொன்றைச் சபையின் முன் வைத்தார்.

அவரின் கருத்துக்களைக் கேட்ட சிலர் அவரை ஒரு புத்திஜீவி எனப் புகழ்ந்தனர். வேறுசிலர் இவன் மிகமிகத் தந்திரமான புத்திஜீவி, எப்படியோ புத்திஜீவிகள் தொலைத்துக் கட்டப்பட வேண்டியவர்கள் என்று மனதிற்குள் திட்டினார்கள். ஒருவனைப் புத்திஜீவி எனப் பாராட்டுவதும், புத்திஜீவிகள் தொலைக்கப் படவேண்டியவர்கள் என்று உறுமுவதும், தம்மைத் தாமே முட்டாள்களென்று சுய பிரகடனம் செய்வதும் ஆகிய மூன்று சங்கதிகளும் ஒன்றே என அறிந்தவர் போல சிலர் மௌனம் காத்தனர்.

நேரம் இரண்டு மணி. துக்கம் விசாரிக்க வந்தவர்களுக்கு மதிய போசனம் கிடைக்காதென்பது இப்போது உறுதியாகவே தெரிந்தது. அம்பலவாணரின் கதிகலங்கிய பார்வை, "மத்தியானச் சோற்றையாவது தின்ன விடுவீர்களா?" என்றே மன்றாடுவதைப் போலிருந்தது. அவரின் கவலைகளுக்கான தீர்வுப் பொதி அங்கு யாருடைய மடிகளிலும் இல்லையென்ற இரகசியத்தை இப்பொழுது அவரும் அறிந்திருக்கலாம்.

"பிள்ளை நீ ஏன் ஓடினாய்? உன் பெற்றோர்களை ஏன் துயரத்தில் ஆழ்த்தினாய்?" என்று டர்மினியிடமே கேட்டுவிட வேண்டும். அந்தக் கேள்வியை அவளிடமே கேட்ட முதல் ஆளாக நானே இருக்க வேண்டுமென ஆசை கொண்டேன். ஆனால் அதையும் வழமைபோல என் நண்பன் ஆறுமுகமே கெடுத்து வைத்திருந்தான். ஏனெனில் அவனே டர்மினியிடம் கேட்டு நல்ல பதிலையும் பெற்றுக் கொண்டானென்பதை இறுதியாகவே தெரிந்து கொண்டேன். அதுவும் நன்மைக்குத்தான்.

அப்படி அவள் கொடுத்த பதிலாகப்பட்டது; "ஓடாமல் ஒழுங்காக இருந்தால் போல் நீங்கள் உருவாக்கி வைத்திருக்கும் இந்த வாழ்க்கையில்



படிப்பகம்

என்ன சொர்க்கத்தையே காட்ட போறியள். ஓடியவர்களின் வாழ்வும் இதுதான்! ஓடாதவர்களின் வாழ்வும் இதுதான்! நீங்களெல்லாம் நாட்டைவிட்டு ஓடிவந்த ஆக்கள்தானே? உங்களுடைய பிள்ளையள் மட்டும் ஓடக்கூடாதெண்டுறது மட்டும் என்ன நீதி?" என்று கேட்டு பாவியான ஆறுமுகனைக் குறிசுட்டுக் கலைத்திருக்கிறான். ஆறுமுகம் இன்றுதான் எனக்கு வாழ்வில் ஒரே ஒரு நன்மையைச் செய்திருக்கிறான். இருந்தாலும் கலியாணம் கட்டிய பின் ஓடுவதைவிட, கட்டுவதற்கு முன்பே ஓடி விடுவது மேலென்றும் ஒரு புதிய வாதமிருப்பதை இங்கு தனியாகப் பிரித்துக் கூற வேண்டியதில்லையே?

எல்லோருடைய வீறாப்புக் கதைகளும் முடிந்தது. அம்பலவாணர் பசி பொறுக்க முடியாது சோற்றுக் கோப்பைக்குள் கையைப் புதைந்தார். பூரண நாயகியும் இன்றைக்குத்தான் ஒருபிடி சோறு தின்னப் போவதாகச் சொல்லி அழுதாள். வயிற்றுப் பசி என்பது எல்லோருக்குமே ஒரே மாதிரிதானென்பது இங்கு வேறு விடயம்.

நாம் உண்மைகளை எங்கோ ஒளித்து வைத்திருக்கிறோம். அதே வேளை எல்லோரும் சம்மந்தமில்லாத இடத்தில் நின்று, சம்மந்த மில்லாதவைகளைப் பற்றியே பேசுகிறோம். உண்மை அம்பலவாணருக்கும் தெரியும்: எங்களுக்கும் தெரியும்: உங்களுக்கும்தான். என்று சொல்லக்கூடியவர்கள் வந்து சேர மேலும் சில மணித்தியாலங்கள் இருக்கின்றன. அவர்கள் மரம் அரிந்து முடிந்ததும் வந்து சேர்ந்து விடுவார்கள். அதற்கு முன் நாங்கள் போய்விட வேண்டும்.

எனினும் இத்தால் அனைத்து மக்களும் அறிந்து கொள்வது என்னவெனில்: உலகத்தில் அறிய வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்க காகம் எதையோ கிளறியது போல, நமது கனவுகள் மட்டும் எப்பொழுதுமே இப்படிப்பட்ட சங்கதிகளுக்குள்தான் சிறைவைக்கப் பட்டுள்ளன என்பதை நான் மட்டும் இங்கே சுட்டிக்காட்டுவதில் யாதோ பயன்? ஏனெனில் இப்படியெல்லாம் பேசி எனது வடிக்கையாளரை நான் இழந்துவிட்டால் அவர்களுக்கு வட்டிக்கு வழங்க இங்கு மேலும் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

இத் தருணத்தில் உங்களுக்கு மட்டும் ஒரு புதிய செய்தியையும் சொல்லவேண்டும். டர்மினியின் கதையை சகல மக்களுக்கும் மகிழ்ச்சி தரும்படி சுவைபடக் கூறியதால் நிறைய தமிழர்கள் என்னை விரும்புகிறார்கள். இப்பொழுது நீங்களே சொல்லுங்கள் இவ்வளவு தமிழர்களின் ஆதரவு இருக்கும் போது, ஏன் நான் மட்டும் புதிதாக ஒரு பலசரக்குக் கடையை ஆரம்பித்தல் கூடாது.?

டர்மினியும் பாவந்தான். அவளின் காதலை நாமும்

ஆதரிப்போம்! ஏனெனில் அவளுக்கும் நான் எனது பலசரக்குப் பொருட்களை விற்றாக வேண்டியிருக்கிறது.

பலசரக்கு என்றதும், வயிற்றைக் குடைகிறது பாருங்கள்! கிழங்குக் கறியும், சோறும் என்னை, "வா! வா!" என்கிறது. அப்பொழுதுதான் மாசிலாமணியின் மனைவி ஓடிப்போய்விட்ட செய்தி கிடைக்கிறது. பசி, களையெல்லாம் மறந்துபோக அந்தப்பக்கமாக ஓட ஆரம்பிக்கிறேன்.

●

# அடிவானத்தின் அழுகுரல்!

மடகும்பர எஸ்டேட்டை எப்படி மறப்பதென்று தெரியாமல் ஓடும் பஸ்சிலேயே சரிந்து கிடந்தான் செவஞானம்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அங்கு வாரச் சந்தை கூடும். தமிழ் மலைநாடு, மட்டக்களப்பு, யாழ்ப்பணமாகி ஒலிக்க, சிங்களம் கரையோரம் கண்டியாக உச்சரிக்கப்பட, போதாக்குறைக்கு ஆபீசில் வேலை செய்வோரின் இங்கிலீசும் சேர்வதால் அந்தச் சந்தையிலிருந்து புதுமாதிரியாக இரைச்சல் கிளம்பும்.

அந்த ஒலியின் முடிவில், “ஓம்” என்ற நாதம் பிறப்பதாகச் சிலர் சொன்னார்கள். செவஞானத்தால் அதைக் கிரகிக்க முடியவில்லை. ஏனோ தெரியவில்லை இன்று அவனால்கூட கடையிரைச்சலில் ஓர் கலை நயத்தை அனுபவிக்க முடிந்தது.

“ஏம்பா சிம்பேஞ்சி என்னா ஊசிக்கிறே?”

“ஒண்ணுல்லண்ணே!” சீட்டில் கிடந்த ஈரப்பலாக்காயை தூக்கி மடியில் வைத்துக் கொண்டான். சிம்பேஞ்சி என்றால் அவனுக்குக் கோபம் வருவதில்லை. “சிம்பேஞ்சிக்கொரங்கு” என்று நீட்டிய சிலரை மட்டுமே கல்லால் அடித்திருக்கிறான். ஈரப்பலாக்காய் கிடந்த இடத்தில் இப்போது செல்வநாயகம் குந்திக்கொண்டான். பதுளையில் புறப்பட்ட பஸ் ஆதர்தர்மிசிறி கடைக்கு அருகில் ஐந்து நிமிடங்கள் இளைப்பாறியது.

ஆதரைக் கண்டால் சிங்களவர்களே பயப்படுவதாகச் சொல்வார்கள். அந்தக் குட்டி நகரத்தில் எல்லாமே அவரைக்

கேட்டுத்தான். அவரின் ஹோட்டலில் ரீ அடிப்பது, றொட்டி போடுவது இரண்டும் செல்வநாயகத்தின் வேலை. ஆதர் கடையில் வேலை செய்வதால் செல்வநாயத்திற்கும் மற்றவர்கள் பயப்படுவது போலிருந்தது. அவனுக்கு வேறுசிலரும் எழுந்து இடம் கொடுக்க முன்வந்தனர்.

"ஊருக்குப் போறாப்பலே.. பயணம் என்னிக்கு வாக்கிலே வெச்சிருக்கு?"

"பொதேங்கெழம"

"நமக்குத் தெரியாமப் போச்சே; நேத்து சாயந்தரந்தா சுக்குறு கணக்குப்புள்ளே மவன் சொன்னா! அ... பொட்டியெல்லா அடிச்சாச்சா?"

"அ... அதெல்லாம் முடிஞ்சி..."

செல்வநாயகத்தின் முகத்திலும் முதல் தடவையாக இரக்கம் தெரிந்தது. "சிம்பேஞ்சி இந்தத் தோட்டத்துலெதானே பொறந்தா! அப்பாவிப்பய.. அவனைப்போயி இந்தியாவுக்குத் தொரத்துறானுவளே?" தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். பதில் கிடைக்கவில்லை.

பஸ் மடக்கும்பர வரும்வ்ரை இருவரும் ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை. சிம்பேஞ்சி மரக்கறி சாமான்களையும், ஈரப்பலாக்காயையும் தலையில் தூக்கியபடி இறங்க மூட்டை வாசலில் தடக்கியது. முன்னும் பின்னும் இழுத்து வெளியே பாய்ந்தான்.

"எலேய் சிம்பேஞ்சி! போகமிந்தி ஆதர் மொதலாளியையும் ஒருவாட்டி பாத்திரு என்னா!"

"அ... சரிங்க.. " பஸ் புறப்பட்டது.

செல்வநாயகத்திற்கு எல்லாமே ஆதர் முதலாளிக்குப் பிறகுதான். ஆதர் முதலாளியின் ஆணையை ஏற்று யாரோ சில சண்டியர்களை உலக்கையால் அடித்து விரட்டியதாக பெருமைப்படுவான். அப்போது அவனுடைய விசுவாசம் சிரிப்பில் மினுங்கும்.

இறங்கியதும் ரீ ஸ்டோர் வழியாகவே நடந்தான் செவஞானம். மூட்டையைக் கல்லில் வைத்துவிட்டு, ஸ்டோரின் பின்புறம் இருக்கும் றோதைமுனி சாமியை வணங்கினான்.

padippakam

வருடம் தவறாமல் அங்கு றோதை முனிக்குப் பூசை போடுவார்கள். இவனும் பக்தியோடு கோழியொன்றைக் காணிக்கையாக வளர்ப்பான். மழைபெய்ய, கொழுந்து விளைய, ஸ்டோரில் நல்லா வேலை நடக்க வேண்டுதல் வைப்பான். பழனி பூசாரி கலையாடி மஞ்சள் நீரில் குளிப்பாட்டி நடுங்கியபடியே நிற்கும் கோழிகளை ஒவ்வொன்றாகச் சிறிய கழு மரத்தில் குத்திக்குத்தி இழுத்து வீசுவான். இரத்தம் கால்களால் ஒழுக, அலறியபடியே அவை தூரத்தில் போய் விழ, வருடத்தில் ஒரு தடையாவது றோதைமுனியின் பெயரால் இவனும் கோழிக் குழம்பு வைப்பான். அதுவும் இனியில்லை.

லயத்துக்குப் போனான். அங்கே தாய் தங்காயி அவனுக்காகவே காத்திருந்தாள். றொட்டியும், சம்பலும் நெளிந்த அலுமினியத் தட்டில் காத்திருந்தன. மூட்டையை இறக்கிவிட்டு றொட்டியைக் கடித்தான். சுவை தெரியவில்லை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓரமாக இருந்து அழவேண்டும் போலிருந்தது. "என்ன எழவுக்கு நா பொறந்த இடத்தெ உட்டு போணும்.. மயிராண்டிக.." றொட்டித் தட்டை காலால் உதைத்தான்.

"நீ ஒண்ணுக்குமெ பயப்புடாதெ ராஜா நம்ம உறவுக்காறவுங்க மிந்தியெ அங்கெனத்த போயிட்டாக, தங்கராசு மச்சானும் அங்கெதானே போயிருக்கா சட்டுப்பிட்டின்னும் ஏதுனாச்சும் செஞ்சீ...?"

"என்னியும் உன்னியும் சீமெக்கு அனுப்பி வைப்பாங்களோ? போ ஆத்தா, எப்ப பாரு நீ எடக்குமுடக்காத்தா பேசிகிட்டுக் கெடப்பே.. இங்கெ இருக்கிறப்பவே ஏ நாயேன்னுங் கேக்காதவுங்க அங்கினப் போயா துடிக்கப் போறாக.."

இரண்டு நாட்களில் அந்த இடத்து உறவே அறுக்கப்பட்டு அவனும் ஆத்தாளும் தூக்கி வீசப்படப் போகிறார்கள். அப்படியிருந்தும் குசினியை சாணமிட்டு மெழுகி, வாசலில் கோலம் போட்டு, சின்னஞ்சிறிய லயத்தை சுத்தமாகத்தான் வைத்திருந்தாள் தங்காயி.

சோறு காய்ச்சிய பானையை சூட்டோடு சூடாக சாம்பல் போட்டு விளக்கி, சாம்பலிலேயே மூன்று மூன்றாகத் திருநீற்றுக்குறி போட்டு; தங்காயியைபோல் யார்தான் சுத்தமாக சமைக்கிறார்கள். அடுப்பங்கட்டின் வலது புறம் பெரிய கத்தி, சுவரில் தொங்கும் சுளகு, பின்னறை, மூடிவைத்த அம்மி ஆட்டுக்கல் என்று எல்லா தட்டுமுட்டுச் சாமன்களையும் சுத்தமாக வைத்திருப்பாள். எந்தப் பொருளை எடுத்தாலும் மறுபடியும் அதே இடத்திலேயே வைப்பது அவளின்



படிப்பகம்

பழக்கம். இப்போது சாமான்கள் கட்டப்பட்டுவிட்டதால் வீடு வெறிச்சென்று கிடந்தது. மனமும் அப்படித்தான். சுரத்தின்றி வெளியே நடந்தான்.

தோட்டத்து ஸ்கூல் மாடசாமி சிலைக்கு பக்கத்தில் இருந்தது. அவன் பிறந்த காலத்திலிருந்தே ரத்னம் மாஸ்டர்தான் படிப்பித்தார். இழுத்து இழுத்துக் கதைப்பார். அவரிடம் ஒரு துப்பாக்கி இருந்ததாகப் பேசிக் கொண்டார்கள். அவருடைய மனைவி அழகானவளென்றும் அவளைப் பாதுகாக்கவே அதை வைத்திருந்தாரென்றும் கொழுந்துக் காட்டில் பேசிச் சிரிப்பார்கள்.

அப்போதெல்லாம் ஸ்கூல் போகாமலே செவஞானம் எங்காவது போய் ஒளிந்து கொள்வான். ஆனால் பிள்ளைக் கங்காணியோ எங்குபோய் ஒழிந்தாலும் குறிவைத்து வந்துவிடுவான். ஒருநாள் மரத்தின் உச்சியில் ஒளிந்திருந்தான். பிள்ளைக் கங்காணி மரத்திலும் ஏறி அவனைப் பிடித்துவந்தான். பாடசாலைக்கு மட்டம் போடும் பிள்ளைகளைப் பிடித்துவந்து மாஸ்டரிடம் கொடுப்பது அவன் வேலை.

“ஏண்டா செவஞானோ நீ என்னா நெனச்சிக்கிட்டிருக்கே...அ... அழுவுறியா உங்நோயி மூஞ்சியையும் மொகரக் கட்டயவும்பாரு சிம்பேஞ்சியாட்டமா போடா..” ஓங்கி ஒரு அடி முதுகில் வைப்பார் மாஸ்டர். குளறியபடியே சாக்கில் விழுவான். இப்பொழுது ரத்னம் மாஸ்டர் இறந்து, வேறு யாரோ வந்திருக்கிறார்கள்.

“சாரு .. நாமெல்லா எதுக்குப் படிக்கணு படிச்சு இன்னா தொரெ வேலெயா பாக்கப்போறோ...? ஏதோ பேரெப் பதிஞ்சிட்டு கொழுந்துக் காட்டுக்குப் போனா செரிதான்..” ஒருநாள் மாஸ்டர் நல்ல மூடில் இருக்கும்போது பார்த்து மாரியப்பன் கேட்டான்.

“நெசந்தாண்டா! நீங்கல்லா தேயிலைக் கொழுந்துகளை ஒடச்சு மரங்களெ நாசப்படுத்துறீங்கடா! அதுதா தொரயாபாத்து இந்த ஸ்கூலைப் போட்டிருக்காரு, நோயியுங் நொப்பனும் மலையால வரக்காட்டி உங்களப் புடிச்சி வைச்சிருக்கிறதுக்குத்தாண்டா ஸ்கூலு. ஒங்கள யாருடா படிக்கச்சொன்னா?” என்றபடியே காய்ந்து கிடக்கும் மலைக்காட்டுப் பக்கமாக விரட்டியடிப்பார். பல மைல்கள் சுற்றிச் சுற்றி நடந்து, கீழே போய் விறகுடன் மேலே ஏறி வர பொழுதாகிவிடும். மாலையில் கணக்குப்பிள்ளையின் தோட்டத்திற்குத் தண்ணீர் போடுவான். சனி ஞாயிறு ஜவ்வாது மரிக்காருக்குக் கோப்பிப் பழம் பொறுக்கிக் கொடுத்து மிட்டாய் வாங்குவான். இப்படிப் போனது அவனுடைய மாணவப் பருவம்.

padippakam

பின்னர் மீசை முளைக்க பெயர் பதிந்து கொண்டான். புல்லுவெட்டு, உரம் வீசுதல், கவாத்து வெட்டு, துரைசாணியின் மாட்டுத் தொழுவத்தைப் பராமரிப்பதென்று அந்தத் தோட்டமே உலகமாக இருபத்தியாறு வருடங்களை ஓட்டிவிட்டான்.

சாமி மலை காய்ந்து கிடந்தது. வேண்டுதல் வைத்தவர்களெல்லாம் ஆளுக்கொரு வேலாகக் குத்தி இருபது முப்பது வேல்களினால் அடர்ந்து கிடந்தது. சாமிமலை முக்கில்தான் டோபி மருதையின் வீடிருந்தது. அவனுடைய மகள் கமலத்தைத்தான் இவன் மனதில் நினைத்திருந்தான். அவளைப் போல் தளதளப்பாக தோட்டத்தில் ஒருத்தியும் கிடையாது என்பது இவனுடைய முடிவாக இருந்தது. அவன் ஆசைக்கு ஆத்தா சம்மதிக்கவில்லை. கமலம் மஞ்சள் காமாலை வந்து செத்தபின் முறைப்பெண் செயலெச்சுமியை அந்த இடத்தில் வைத்துக் கொண்டான்.

மாலை நேரங்களில் சாமிமலையின் மணியை ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருப்பான். எந்த மூலையில் இருந்தாலும் ஒவ்வொரு கல்லாகத் தாவி மலை உச்சிக்கே வந்துவிடுவாள் செயலெச்சுமி.

அவளை நினைத்து எவ்வளவோ கனவுகள். வீட்டில் தோட்டம் போட்டிருந்தான். கரட் பிடுங்கினதும் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று காத்திருந்தான். மேல்காட்டு ராமையா அதற்கும் விட்டபாடில்லை. அவன் எழுதும் கணக்கு அனுமார்வால் போல முடிவேயில்லாது நீண்டுபோகும். எப்படிப் பாடுபட்டாலும் கையில் ஒற்றைச்சல்லி மிஞ்சாது, மருந்து, உரம், விதை, அரிசி, தேங்காயென்று வாங்கிய கடனைக் கூட்டிக்கொண்டே போவான் முடிவிலும் இவனே கடனாளியாக நிற்பது வழமை.

நாலு வருடங்களாகக் காத்திருந்த செயலெச்சுமி நேற்றுத்தான் கண்ணீரோடு விடைபெற்றாள். அவள் இலங்கையின் சிற்றிசென் என்று சொன்னார்கள். இவன் இந்தியாவுக்கு போகவேண்டும். நடப்பதெல்லாமே உயிரைத் தறித்துத் துண்டு போடுவதைப் போலிருந்தது. அவர்கள் இருவரும் அடுத்த ஜென்மத்திலாவது ஒன்று சேரவேண்டுமென வேண்டி சாமிமலையில் வைத்த பூக்களைப் பார்த்தான். வாடிப்போயிருந்தன. செயலெச்சுமியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. நீண்ட நேரமாக மணியை அடித்துக் கொண்டிருந்தான். ஒரு வேலின் மேல் இருந்தபடியே ஓணான் ஒன்று அதைப் பிடுங்குவதைப் போல விருட் விருட்டென்று தலையை ஆட்டியது.

சாமிமலைச் சரிவிலிருந்து நீர் ‘கோ’வெனப் பாய்வது கேட்டது. அப்படியே பள்ளத்தில் குதித்து இறந்துவிடலாமா என்றும்



படிப்பகம்

யோசித்தான். "எலே செவஞானம் எந்திரி!" ஆத்தாள் வந்து கத்தியபோதுதான் நன்றாக உறங்கிவிட்டது தெரிந்தது. "ஏ சும்மானாச்சும் கூவுறே?" என்றபடியே இவன் இறங்க, மறுபுறம் இரவுக்காற்று குளிரைச் சுமந்தபடியே மலையில் கஷ்டப்பட்டு ஏறத் தொடங்கியது.

வீடுவந்து சேர்ந்தபோது அவனைத் தேடி தங்கமலைத் தோட்டத்து மொசெசு வந்திருந்தான். அவனைப் பணியகாட்டு கடைக்கு அழைத்துப் போனான் கைக்காசு கொடுத்தே இருவரும் வாயை நனைத்துக் கொண்டு வந்தார்கள். மெல்லிய மயக்கம் இவன் செயலெச்சுமியைப் பற்றித்தான் புலம்பிக் கொண்டிருந்தான். சாப்பிடும்போது "கொளம்பு நல்லாரிக்கி" என்றபடி விரல்களை நக்கினான் மோசெசு. பிறகு தபால்கார பங்காரு வர இன்னொரு தடவை பணியகாடு போய்வந்ததாக நினைவு...

தோட்டத்திலிருக்கும் வீடுகளெல்லாம் ஒன்றுவிடாமல் பயணம் சொல்லி வந்தான். பகை உறவு எதுவுமில்லாமல் எல்லோர் குரலும் பயங்கலந்து கிணற்றிற்குள் இருந்து வருவதைப் போலிருந்தது. அப்போதுதான் ஆதர் கடை செல்வநாயகத்தையும் கண்டான். அவனுக்கும் இந்தியா போக கடிதம் வந்திருந்ததை அறிந்தான். இனி ஆதர் முதலாளி அவனுடைய இடத்திற்கு இன்னொரு செல்வநாயகத்தைப் போடுவார். தொடர்ந்தும் ரீக் கடை நடக்கும்.

பயணம் புறப்படும்போது நிலமை மோசமாயிருந்தது. "ஐயோ என்னை உட்டுறுங்க நாமாட்டே... என்னாலெ பொறந்த இடத்தை உட்டு போக ஏலா! ஆத்தா! காப்பாத்துங்க ஆத்தா! என்னைக் காப்பாத்துங்க!" செவஞானம் புகையிரத நிலையத்தில் விழுந்து விழுந்து கூச்சலிட்டான். வந்திருந்தவர்களெல்லாம் குளறி அழுதனர். செயலெச்சுமி தலையை கைகளால் ஓங்கி ஓங்கி மோதினாள். உயிரோடு சாவோர் காட்சியை பார்த்துப் பார்த்து அலுத்துப்போன கிழட்டுப் புகையிரதம் தன் பாட்டுக்கு மூச்சை முட்டி புகையை இழுத்தது.

செல்வநாயகமும் வேறுசிலரும் அவனைத் தூக்கி புகையிரதத்தினுள் போட்டார்கள். "செவஞானம் அழுவாதடா! அப்ப பொறப்படுறமுங்க..." தங்காயிதான் முதலில் ஏறினாள். நகிண்ட நகிண்ட!" யாரோ சில பயணிகள் அவர்களை இடித்து உள்ளே தள்ளுகிறார்கள்.

உடரட்டமெனிக்கே, "ஊ... ." என்றபடி உருள்கிறது. செவஞானத்தின் அழுகுரலையும் அவன் நாடு கடத்தப்படும்



படிப்பகம்

padippakam

அவலத்தையும் பார்த்து, முன்னரே கோணர் சீட்டில் இடம்பிடித்திருந்த சிலர் சிரித்துக் கேலி பண்ணியதை யாரும் பார்க்கவில்லை.

இது நடந்து இருபத்தைந்து வருடங்களாகி விட்டது. செவஞானம் என்னவானான் என்பது இதுவரை தெரியாத செய்தியாகிய நினைவுகளுடன் அந்த ஐரோப்பிய நாட்டின் அகதி முகாமிற்குள் படுத்திருந்தான் குணம்.

தாய்நாட்டில் நடைபெறும் அவலங்களைப் புகைப்படங்களாக்கி எங்கும் தொங்க விட்டிருந்தார்கள். அகதியாகக் கூட ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்ட நிலை. தற்போது திருப்பியனுப்ப வேண்டாமெனக் கேட்டு அவனும் அவனோடு வேறுபலரும் உண்ணாவிரதமிருந்தனர்.

“எங்களைத் திருப்பியனுப்ப எந்த நியாயமும் இல்லையே? மனிதாபிமானத்திற்காவது நீங்கள் செவிசாய்க்க வேண்டும். ஏன் உங்கள் முடிவை மாற்றக் கூடாது.?” என்று கேட்டுப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

“ஐ. நாவின் அகதி முகாம் இப்போது உங்கள் நாடான இலங்கையிலும் பல இடங்களில் இருக்கிறது. நீங்கள் அங்கு போய் பாதுகாப்பாக வாழலாம்!” என்று உரத்துக் கூறினான் அந்த வெள்ளைக்கார அதிகாரி. நாட்டின் தற்போதய நிலமைகளை விளக்கி புதிதாக வந்திருக்கும் அறிக்கையை மேசையில் தூக்கிப் போட்டான்.

நாட்டில் ஒரு வாரகாலம் நின்று சேகரிக்கப்பட்ட பயணக்குறிப்புக்கள் போன்ற தகவல்கள் அவை. தான் அங்கு பிறந்து வளர்ந்து, வாழ்ந்து தகவல்களைப் பெற்றவன் என்றபடியே அதை மறுபயும் மேசையில் போட்டான் குணம். அப்பொழுதுதான் ஒரு பொலீஸ் வண்டி வந்து நிற்பது கண்ணாடி ஜன்னல் ஊடாக தெரிந்தது. அவர்களில் ஒருவனின் கையில் பெயர்ப் பட்டியலும் நாடு கடத்தும் ஆணையும் மங்கலாகத் தெரிந்தன. அச்சமடைந்த சிலர் எழுந்து ஓடுகிறார்கள். அதைப் பார்த்ததும் பொலீசார் விரட்ட ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் மேலும் வேகமாக ஓடுகிறார்கள். திடீரென்று நான்கு புறமும் பலமான அபாய அலாரங்கள். கணப்பொழுதில் முகாமைச்சுற்றி எண்ணற்ற பொலீஸ் வண்டிகள் அணிவகுத்து நின்றன.

சிறகை மடக்கிப் பிடித்த கோழிகள் போல ஓடியவர்ளைப் பிடித்து இழுத்து வருகிறார்கள்., “ஐயோ ஐயோ என்னைத் திருப்பியனுப்பாதேயுங்கோ கெல்ப் .. கெல்ப்...!” யாரோ ஒரு இளைஞனின் குரல் அவலமாக ஒலித்தது. ஓடிக் களைத்த



படிப்பகம்

பொலீஸ்காரர்கள் கோபத்தோடு, வண்டிக்குள் சிலரை நெட்டித் தள்ளுகிறார்கள்.

உயிரோடு நடைபெறும் மரணங்களுக்காக அழுகுரல்கள். அகப்பட்டவர்கள் செவஞானம் செயலெச்சுமிகளாகத் துடிதுடித்துப் புரள, நாடு கடத்தும் வாகனம் இங்கும் இரக்கமின்றியே நகர்கிறது.

பசி, களை, யாவற்றுக்கும் மேலாக, "திருப்பியனுப்பப் பட்டால்..!" என்ற பீதியே மேலோங்கி நின்றது. எல்லோர் முகங்களிலும் கவலை ஆழமாகக் குழி வெட்டி, கருப்புக் கருப்பாகப் படிந்து கிடந்தது. பொலீஸ் வண்டிகளின் காது வெடிக்கும் சத்தங்கள் இப்போதைக்கு மட்டும் தற்காலிகமாக ஓய்ந்து கிடந்தன. மறுபடியும் எப்போது அவர்களின் அலாரம் கேட்குமோ? இனி அடுத்ததாக யாரைத் தூக்கிச் செல்ல வரப்போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முன்னதாகவே கட்டப்பட்ட அந்தப் பழைய கட்டிடமும் பயத்தில் நிசப்தமாகக் கிடந்தது.

தயங்கித் தயங்கி வெளியேவந்து பார்த்தான் குணம். யாரையுமே காண முடியவில்லை. தூரத்தே சிவந்து கிடந்த அடிவானக் கோட்டின் வழியாக அழுகுரலொன்று எழுவது போன்ற பிரமை. அது செவஞானத்தின் குரலா? அல்லது தூக்கிச் செல்லப்பட்ட இளைஞனின் குரலா? என்பதைப் பிரித்தறிய முடியாதிருந்தது..

(யாவும் கற்பனை)

padippakam

# இன்ரநெற் சாமியும்!
# றிபிளக்ட்டர் சாமியும்!

தூக்குப் போட்டுக் கொள்வது என்று முடிவெடுத்த பின்புதான் தன்னுடைய தொண்ணூறு கிலோவையும் தாங்கக்கூடிய கயிற்றைத் தேடுவது இந்த நாட்டில் சுலபமான காரியமல்ல என்பதை மான்குட்டி புரிந்து கொண்டார். எங்கு தேடியும் பயனில்லாது போகவே கோடாலிப் பாம்பு போன்ற மெல்லிய கயிற்றை வாங்க வேண்டியதாயிற்று.

கயிற்றை வாங்கிய பின்புதான் தூக்குப் போட்டுக் கொண்டவர்களில் யாராவது நடு வழியில் அறுந்து விழுந்திருக்கிறார்களா என்பதை யோசித்தார். எல்லாவற்றையும் எட்டிவிட்ட புலம் பெயர்ந்தோர் இதுவரை அந்தச் சாதனையை மட்டும் எட்டியதாகத் தெரியவில்லை. அவருக்கு இப்பொழுதே நிறையப் பட்டங்கள் இருந்தன. இனி "தூக்கறுந்தான்" பட்டமும் வந்தால் அதைத் தன்னால் தாங்க முடியாதென அலுத்துக் கொண்டார்.

கட்டிலுக்கு அடியில் பத்திரமாக ஒளித்து வைத்திருந்த தேடா வளையத்தை எடுத்து, மூன்று பாகங்களாக அளந்து துண்டு போட்டுக் கொண்டார். தூக்கறுந்தான் பட்டத்தைத் தவிர்த்துக் கொள்ள கயிற்றை மூன்று புரிகளில் முறுக்கியெடுக்க வேண்டியிருந்தது. ஊரிலென்றால் தென்னங்காணியில் குத்தி வைத்திருக்கும் இரும்பு ராட்டையில் போட்டு வசதியாகத் திரித்துக் கொண்டிருப்பார்.

நேரம் பதினொன்று மனைவி செண்பகவடிவு ஒரு மணிக்குத்தான் வருவாள். அதற்குள் இவருடைய சிவன் அடங்கிப் போய்விடும். கயிற்றைச் சரசரவென முறுக்கத் தொடங்கினார். அப்போதுதான் தான்

padippakam

செத்துப்போன பின்பு என்ன நடக்கும் என்று யோசித்தார். மனைவி செண்பகவடிவு அவரது மார்பில் விழுந்து அழலாமென நினைத்தார். பிள்ளைகள் அழுவார்களோ ஆனந்தப்படுவார்களோ அவருக்குத் தெரியாது. இருந்தாலும் அவர்களுக்கு அப்பன் அருமையை விளங்கவைக்கவே இந்த முடிவை எடுத்திருக்கிறேன் என்பதை சிறு கடிதமாக எழுதிவைக்க முடிவு செய்தார்.

நல்லவனான தான் செத்துப்போவதை விட தீயவர்களான பிள்ளைகளையும், மனைவியையும் கொன்றுவிடலாமென முன்னர் நினைத்திருந்தார். ஆனால் அப்படிச் செய்வதால் அவருக்கு மிஞ்சப்போவது கொலைகாரன் என்ற பட்டம் ஒன்று மட்டும்தான். அதைவிட தானே தூங்கிவிட்டால் குடும்பத்தோடு; சுற்றியிருக்கும் நாலைந்து வெங்கிணாத்தியளும் திருந்திக் கொள்ளலாமென நினைத்தார். வெங்கிணாத்தியென்று நினைத்த போதுதான் ஊரிலிருக்கும் வெங்கிணாத்தி சண்முகராசா வாத்தியின் நினைவு ஓடோடி வந்தது.

“தம்பியவை! நீங்கள் எப்பவும் திருமணத்திற்கு அவசரப்படக் கூடாது. மேலை நாடுகளைப் பாருங்கோ, அவர்களுடைய சராசரித் திருமண வயது முப்பத்தைந்து, ஆனபடியால்தான் அந்த நாடுகள் சன்த்தொகைப் பெருக்கத்தால் பாதிக்கப்படவில்லை. அவர்கள் செல்வந்த நாடுகளாக இருப்பதற்கும் அது ஓர் காரணம்.”

“அப்பிடியென்டால் இள வயதுத் திருமணங்கள்தான் சனத்தொகைப் பெருக்கத்துக்குக் காரணமெண்டுறியள்?”

“நிச்சயமாக, அளவுக்கு மிஞ்சிய சனத்தொகைப் பெருக்கம்தான் எங்களைப் போன்ற நாடுகளின் அடிப்படைப் பிரச்சனை. ஆனபடியால்தான் திருமணங்களை எவ்வளவு தூரம் பின்போடுறியளோ அவ்வளவு தூரம் பொருளாதாரப் பிரச்சனையளும் தீரும். வெள்ளைக்காரனைப் போல புரிந்துணர்வும், ஆரோக்கியம் மிக்க குடும்ப வாழ்வும் உங்களுக்குக் கிடைக்கும்.”

சண்முகராசாவின் பொருளியல் வகுப்பில் படித்ததை நம்பித்தான் பல்லைக் கடித்து இளமையைக் கல்லாக்கி, பல்கலைக்கழகப் புத்தகங்களோடு போராடி, சகோதரங்களைக் கரைசேர்த்து, முப்பத்திநான்கு வயது செண்பகவடிவைக் கைப்பிடித்தார். “லேற் மரேஜ்.” மூன்று பிள்ளைகளையும் பெற்றபோதே கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்தே வளர்த்தெடுக்க வேண்டியதாகப் போய்விட்டது.

குடும்பத்தோடு வெளிநாடு வந்ததும் வெள்ளைக்காரர்கள்



படிப்பகம்

முப்பத்தைந்து வயது வரை எப்படித்தான் கலியாணம் கட்டாமல் காத்திருக்கிறார்கள் என்பதை அறிய ஆவல் கொண்டார். அவர்களில் பெரும்பாலோர் ஆடி ஒய்ந்து, பிள்ளைகளும் பெற்று, கட்டையில் போகும் காலத்துப் பாதுகாப்பிற்கே கல்யாணத்தை வைத்துக் கொள்வதை அறிந்தபோது தனக் காகவும், தன் போன்ற "லேற் மரேஜ்" பல்கலைக்கழகக் காரருக்காவும் ஒரு முறை ஓங்கி அழுதார்.

இப்போது சண்முகராசா வாத்தி மட்டும் கைகளில் அகப்பட்டால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, முதலில் அவருடைய மண்டையைப் பிளந்து எமலோகம் அனுப்பிவிட்டே தானும் தூக்குப்போட்டுக் கொள்வேனென உறுமினார். ஆனால் சண்முகராசா வாத்தியைக் கொல்வதால் தன் போன்றவரின் கருவளத்தையே அழித்துக் கொண்டிருக்கும் கல்வித் திட்டத்தை மாற்ற முடியாதென்பதை பின்னரே விளங்கினார். எனினும் ஆறாத கோபத்தால் கயிற்றை ஓர் மூச்சுப்பிடித்து இழுத்துப் பார்த்தார். அது தன்னைப் போல மூன்று பேர் சேர்ந்து தொங்கினாலும் அறுந்துபோகாத பலம் பெற்றிருப்பது தெரிந்தது.

தொண்டைக் குழியை முறித்து, நாக்கை வெளியே தள்ளவைக்கக் கூடியவாறு பலமான உருவு தடத்தைப் போட்டபடியே தன் உயிரை உவியப்போகும் பாசக் கயிற்றின் சுருக்கை கவலையுடன் பார்த்துக் கொண்டார். அது ஓர் கேள்விக்குறியைப் போல வளைந்திருந்தது. பின் ஓர் கடதாசித் துண்டில் தனது மரண வாக்குமூலத்தை எழுத ஆரம்பித்தார்.

பணக்கஷ்டங்களைச் சொல்லிச் சொல்லியே பாரதம் பாரதமாகக் கடிதம் எழுதியவருக்கு இப்படியொரு கடிதமெழுதுவது புதிய அனுபவமாயிருந்தது. இத்தால் டேனிஸ் அரசாங்கம் அறிவது யாதெனில்.. என்று தொடங்கும் போதே பிணத்தைக் கீறிக் கிழிக்க வேண்டாம் என்ற மன்றாட்டத்தை மட்டும் டேனிஸ் மொழியில் எழுதியிட வேண்டுமென நினைத்தார். தமிழில் எழுதி பின் அதை யாராவது அடிதலையாக மொழிபெயர்த்துவிட்டால் போதும் அவர்கள் பிணத்தை இரண்டாகப் பிளந்துவிடுவார்கள்.

கவலையுடன் வீட்டைச் சுற்றி ஒரு முறை நோட்டம் விட்டார். எங்கிருந்தோ சுடலையில் வளரும் எருக்கலஞ்செடி நாறுவதைப் போல பிரமை. அதே வீடுதான் மூலையில் சிலந்தியொன்று வலை பின்னிவிட்டு, இரைக்காகக் காத்துக் கிடந்தது. அதனுடன் உடன்பாடு கொள்ளாத இன்னொரு சிலந்தி ஒற்றையான நூலில் கீழ்நோக்கித் தொங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சிலந்தியும் தூக்கில்தான்

தொங்குகிறதா என்று கூர்ந்து பார்த்தார். திடீரென என்ன நினைத்தாரோ தெரியவில்லை. தும்புத்தடியை எடுத்துவந்து, அந்தச் சிலந்தி வலையைத் தாறுமாறாகப் பிய்த்தெறிந்தார். அடிபட்ட சிலந்தியொன்று தன் வயிற்று முட்டைகளோடு கூழாகி சுவரின்மீது வடிந்தது.

அந்தச் சிலந்தி அநியாயமாக இறந்தமைக்கு இன்ரநெற்றை இணைவலை என்று தமிழ்ப்படுத்தியதே காரணமாக இருந்திருக்கலாம். ஏனென்றால் அவர் தூக்குப்போட முடிவெடுத்தமைக்கு பாழாய்ப்போன இன்ரநெற்றும் ஓர் காரணம் என்றே மரண வாக்குமூலத்தில் எழுதியிருந்தார்.

இன்ரநெற் வந்த புதிதில் தமிழரிடையே பெரும் புரட்சி ஏற்படுத்திவிடும் என்று துள்ளிக் குதித்த இரண்டொரு தமிழரில் இவரும் ஒருவர். பக்கத்திலிருக்கும் நூல் நிலையத்தில் இலவச சேவையாக இன்ரநெற்றைப் பூட்டியிருந்தார்கள். அங்கு வயோதிகர் முதல் இளசுகள் வரை இன்ரநெற் பூக்களை வண்டுகளாய் மொய்த்திருப்பதைப் பார்த்தால் அவர் மட்டுமல்ல, யாருமே அப்படித்தான் எண்ண நேரிடும்.

அவரின் மூத்த மகன் கார்வண்ணன் ஒரு வருட காலமாக இன்ரநெற்றின் முன்னாலேயே தவங்கிடக்கிறான். மகள் லோகமணியும், கடைக்குட்டி டெனிசனும் கூட பாடசாலை முடிந்த கையோடு இன்ரநெற்றைத் தேடி ஓடுவதே வழமையாகிப் போயிருந்தது.

தன் காலத்துத் தமிழர் எட்டத் தவறிவிட்ட உச்சங்களை எல்லாம் இக்காலத்துப் பிள்ளைகள் தொட்டுவிடப் போகிறார்களெனப் பெருமிதமடைந்தார். அவர்களே உலகத்தை ஆழ அகலப் பார்க்கும் புத்தம்புதிய இன்ரநெற் தலைமுறைகள் என நினைத்து, யாரைக் கண்டாலும் மரியாதை கொடுத்தே ஒதுங்கி நடந்தார். தன்னுடைய ஓய்வு நேரங்களையெல்லாம் இன்ரநெற்றில் இருக்கும் தன் பிள்ளைகளின் உடுப்புக்களைத் தோய்ப்பதற்கும், இஸ்திரிப்பெட்டி போடுவதற்குமாக தானம் செய்தார்.

“பழைய புலம்பெயர் தமிழரின் கைகளில் ரெலிபோன்களைக் கொடுத்தம் அது குரங்கின்கைப் பூமாலையாகப் போச்சு. இப்ப நம்ம புதிய தலைமுறைகளோ இன்ரநெற்றை என்னமாய்ப் பயன்படுத்துகின்றனர்.” என்று ஊர் முழுவதும் புழுகி வடிந்தார்.

போன மாதம் சின்னவன் டெனிசனின் அலமாரிக்குள்ளிருந்து பல வெள்ளைக்கார அழகிகளின் நிர்வாணப் படங்கள் மீட்கப்பட்ட

போதுதான் மான்குட்டியின் வெண் தலையில் முதல் இடி விழுந்தது. அவருடைய ஐம்பத்தைந்து வருட சீவியத்தில் காணத் தவறிய கோணங்களில் கிடந்த படங்கள் அவருக்குள் பெரும் கலவரத்தை ஏற்படுத்தின. பத்து வயதுப் பையன் கையில் இன்ரநெற் பட்டிருக்கும் பாட்டை எண்ணிக் குமுறினார். உடுப்புத் தோய்ப்பதை விட்டுவிட்டுப் பிள்ளகளைப் பின்தொடரத் தொடங்கினார்.

இலவச இன்ரநெற் இருக்கும் நூல் நிலையங்களையெல்லாம் சுற்றிச் சுற்றி வட்டமிட்டார். ஒன்றும் தெரியாத பெக்கோ மாதிரி அலைந்து எல்லாச் சூட்சுமங்களையுமே கேட்டுத் தெரிந்து கொண்டார். எத்தனையோ இளம் தமிழ்ச் சிலந்திகளெல்லாம் இன்ரநெற்றை கலியாணச் சந்தையாக்கி வலைவிரித்துக் காத்திருப்பது தெரிந்தது. றம்பா, நக்மா, பிரபுதேவா, அஜித்குமார் கனவுகளின் அலைக்கழிப்பில் பல இளசுகள் இன்ரநெற்றை நாசமாக்கிக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

பழைய தலைமுறைத் தமிழருக்குச் சளைத்துப் போகாத புதிய தலைமுறைகளைப் பார்த்தபோது, பாகல் போட்டால் சுரைக்காய் முளைக்க வழியில்லையென அலுத்துக்கொண்டார். கோபம் மேலிட பிள்ளகளை மூசி அடித்தார். இதுதான் சமயமென நினைத்து செண்பகவடிவின் மேலிருந்த பழைய கோபத்தில் சட்டி, பானைகளைப் பந்தாடி; வெங்கலக் கடைக்குள் யானை புகுந்ததைப் போல சின்னஞ் சிறிய வீட்டையே களேபரப் படுத்தினார்.

அவரின் ஆத்திரம் அடங்கும் முன்னரே பிள்ளைகள் இரண்டு பொலீஸ்காரர்களை அழைத்து வந்துவிட்டார்கள். கடைசியில் அவர்கள் எல்லோரும் சேர்ந்து இவருக்குப் பைத்தியமென்று பட்டம் சூட்டிவிட ஆசைப்படுவதும் தெரிந்தது. விசாரணைக்காகப் போனவர் வீடு திரும்புவதற்குள் நாலாபக்கங்களிலும் கதை சிதறிப் போய்விட்டது.

"தமிழன் வெறுமனே கதை சப்பிற சமுதாயமப்பா! மற்றவனைப் பற்றிக் கதைச்சுக் கதைச்சே பொழுதொழிக்கிற சனம்." என்று கலாநிதி பரஞ்சோதியர் சொன்னதை முன்னர் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை; இப்போது அதை ஏற்காமல் விடுவதைவிட அவருக்கு வேறு வழியும் தெரியவில்லை.

"எனக்குப் பதினெட்டு வயசு வந்திட்டுது. இனி நான் என்னைப்பற்றித் தீர்மானிக்கலாம்!" என்று மகன் அவரைப் பார்த்து டேனிஸ் மொழியில் சீறினான். அதைத் தாயோ மற்ற பிள்ளைகளோ எதிர்க்காது மௌனம் சாதித்ததால் பதிலுக்கு இவரும் மௌனமாகிப் போய்விட்டார்.

"அப்பனை மதியாத பிள்ளையளோடை வாழ்ந்தென்ன புண்ணியமென்று நினைத்தே சாவதற்கு முடிவெடுக்கிறேன். "என்பதை மறக்காமல் கடிதத்தில் கோடிட்டுக் கொண்டார். எழுதிய கடிதத்தை எல்லோரும் பார்க்கக் கூடியவாறு தொலைக்காட்சித் திரையில் ஒட்டிவிட்டார். ஆசையாக ஒரு கப் தேநீரை வார்த்துக் குடித்தார். கயிற்றை மீண்டும் ஒரு முறை தடவிப் பார்த்தார். அழுகையாக வந்தது. தூக்கி பையில் மறைவாகப் போட்டார். வீட்டிற்குக் கீழிருக்கும் நிலவடி அறையில்தான் தூக்குக் கயிற்றை மாட்ட வேண்டுமென நினைத்தார். அப்போது பார்த்து தொலைபேசி மணி அடித்தது.

"ஹலோ ஆர் பேசுறது?"

"வேறை ஆர் வேலை வெட்டி இல்லாமல் இந்த நேரம் போனடிக்கிறது? நானேதான்.

"இப்ப எப்பிடியண்ணே உங்கடை பிரச்சினையள்?"

" என்னத்தே.. அ... அ.. சொல்லு!"

"எனக்கும் கொஞ்சம் அவசரம் ஆறுதலா எடுக்கிறனே?"

" ஆறுதலா எண்டு என்ன அடுத்த சென்மத்திலையே? நான் சொன்ன காரியங்களை எப்ப கவனிக்கப் போறாய்?" அலுவல் முடியாவிட்டால் பரலோகத்தார் அடுத்த ஜென்மம் வரை விடமாட்டார் போலிருந்தது.

"எதுக்கும் நாளைக்குப் போனடியுங்கோ உங்கடை அலுவலாகத்தான் ஒரு முக்கியமான டெனிஸ் அரசியல் கட்சித் தலைவரோடை பேச வெளிக்கிடுறன்!"

"சரி சரி! என்னவோ அந்த வழியிலை முயற்சியெடுத்தால்தான் வெல்லலாம்! எதுக்கும் நாளைக்கும் இதே நேரம் எடுக்கிறனே!" மனமின்றிப் போனை வைத்தார்.

பரலோகத்தாரின் தொலைபேசித் தொல்லையும் மான்குட்டிக்கு வாழ்க்கை வெறுத்துப் போக ஒரு காரணம். அவர் ஆசைப்படும் காரியத்தை எப்படி நிறைவேற்றுவ தென்றே தெரியவில்லை. சாகப்போகும் நிலையில் கூட மற்றவரிடம் சொல்லக் கூச்சப்பட வேண்டிய ஆசை அவருடையது. ஆனால் அவரோ அப்படியான ஓர் தீர்வுதான் புலம்பெயர் தமிழரின் பிரச்சனைக்கு அடிப்படைத் தீர்வென்று தொடர்ந்து வாதிட்டார்.

அவரின் ஆசை நிறைவேற்றப்பட வேண்டுமானால் முதலில் தமிழர்களெல்லாம் சாதிகளின் வாரியாகப் பிரிக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் ஒவ்வொரு மேல் தட்டுக்களும் தங்களுக்குக் கீழ்ப் பட்ட தட்டுக்களை மேய்த்துத் திரிய சட்ட ரீதியான அனுமதி கொடுக்கப்பட வேண்டும். இதை மட்டும் செய்துவிட்டால் தன்னைப் போன்ற பலரின் நோய் தீருமென்பது அவரின் கோரிக்கை. இதை செய்ய முயல்வதைவிட தூக்குப்போட்டுக் கொள்வது மேலான்தாகத் தெரிந்தது. பரலோகத்தார் மறுபடியும் எதையாவது நினைத்துவிட்டு தொலைபேசி எடுக்கும் முன்பு விரைவாக வெளியே வந்தார். முன்னாலிருந்த தேவாலயத்தைப் பார்த்து சிலுவை போட்டுக் கொண்டார். இப்படியொரு வழிப்பாட்டோடுதான் செண்பகவடிவும் அவரிடமிருந்து எட்டவாகப் போனாள்.

பிள்ளைகளுடன் அடிபட்டு மான்குட்டி யாருடனுமே கதைக்காது ஊமையாகத் திரிந்தபின் செண்பகவடிவு தன் துயரங்களையெல்லாம் இந்தத் தேவாலயத்தை நோக்கித்தான் கொட்டினாள். ஒரு நாள் இரவு வீதியில் நின்றபடியே அவள் தன் கவலைகளைச் சொல்லி அழுதபோது கோடி சூரியப் பிரகாசம்போல ஓர் ஒளியடித்தது. இறைவன் தன்னை ஆசீர்வதித்து விட்டாரென அன்றே அவள் நம்பினாள்.

அன்றிலிருந்து ஒளி வந்த திசையை நோக்கி தன் கவலைகளைக் கூறுவதும். மீண்டும் ஒளி வருமா என்று காத்திருப்பதுமே அவள் பொழுதுகளாயிருந்தது. இதற்குள் ஒளி தோன்றிய சங்கதியைக் கேள்விப்பட்டு நிறையத் தமிழர்கள் கூடத் தொடங்கினார்கள். அப்படியே அந்தக் கதையும் தொலைபேசி மூலம் கனடா வரை பரவிச் செல்லக் கண்டார்.

செண்பகவடிவை நினைத்தாலும் அவருக்கு பல்கலைக் கழகத்தின் மீதுதான் கோபம் வரும். இப்போது எப்படியோ அவர் அறியார். ஆனால் அந்த நாட்களில் பல்கலைக் கழக மாணவரிடையே நிரந்தரமாக ஓர் போட்டியிருக்கும். அது படிப்புச் சம்மந்தப்பட்டதல்ல; யார் அதிகமாகச் சீதனம் வாங்குவது என்பதைப் பற்றியதுதானென்பது அனேகருக்குத் தெரியாது. அப்படியொரு போட்டியிலும் குதித்துத்தான் பெற்றோல்குதம், தென்னங்காணி சகிதம் செண்பகவடிவைக் கைப்பிடித்துச் சாதனை புரிந்தார்.

அது ஓர் சாதனையல்ல என்பதை அறிய அவருக்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை. பிள்ளை வளர்ப்பு முதல், வாழ்க்கை பற்றிய அடிப்படை விளக்கங்களெல்லாம் போய்ச் சேராத தொலைவிலிருந்த

padippakam

செண்பகவடிவை மீட்டெக்க அவள் கொண்டுவந்த சீதனத் தொகையால் முடியாதென எண்ணி தலையைத் தலையை அடித்துக் கொண்டார். அவளின் கையில் குடும்பத்தை ஒப்படைத்தால் தனது சந்ததியே நாசமாகிவிடும் என்று கோபப்பட்டார்.

பெண் விடுதலை பற்றி அவளுக்குச் சில வகுப்புகள் எடுத்தார். அதைக் கேட்டதும் அவள் இவருக்கு மூளைப் பிழைதானென தீர்க்கமாக முடிவு செய்து ஓலையை எடுத்துக் கொண்டு சாதகம் பார்க்கப் புறப்பட்டாள். அதன் பிறகு அவர் தனக்குத் தெரிந்த அரைகுறைப் பெண் விடுதலை பற்றியும் பேசாது விட்டுவிட்டார்.

இவையெல்லாம் இப்படியிருக்க இவ்வளவு படித்த தன்னை விட்டுவிட்டு மூச்சைப் பிடித்தால் வாயைத் திறக்கத் தெரியாத செண்பகவடிவிற்கு மட்டும் ஆண்டவன் விசேடமாக ஒளி காட்டவேண்டிய அவசியமென்ன என்பதையும் அறிய ஆவல் கொண்டார். ஒரு நாள் இரவு அவரும் அந்த அதிசய ஒளியைக் காண நேர்ந்தது.

அந்த தேவலாயத்தின் பாதிரியார் தனது கறுப்பு அங்கியின் பின்புறமாக ஓர் றிபிளக்டரைக் கட்டித் தொங்கவிட்டிருந்தார். இரவு நேரங்களில் வரும் வாகனங்களின் ஒளி பட்டதும் அந்த றிபிளக்டரும் பளபளவென ஒளிரும். அது ஆண்டவனின் ஒளியல்ல றிபிளக்டரில் இருந்து திரும்பி வரும் வெளிச்சமென்று எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்க மறுத்துவிட்டாள். அன்றிலிருந்து செண்பகவடிவுக்கு மட்டுமல்ல வேறு பலருக்கும் அவர் மீது ஏகப்பட்ட கோபம். சிலர் அவரை நாத்திகனென்று முகத்திற்கு முன்னாலேயே திட்டியதைக் கண்டுகொண்டார். அதற்குப் பிறகுதான் அவருக்குக் குடும்பத்தோடு சமூகத்தின்மீதும் வெறுப்பு வந்தது.

நேரம் பன்னிரண்டு முப்பது. நிலவறைக்குள் புகுந்து, கதவைப் பூட்டினார். கயிற்றை ஓர் வெள்ளை நிற குழாயில் சுற்றி கட்டினார். ஒரு பழைய முக்காலியை வைத்து அதில் ஏறினார். கயிற்றுத் தடத்தைக் கழுத்தில் மாட்டினார். தான் எடுத்த முடிவு சரியானதுதானா என்று சில நிமிடங்கள் அப்படியே நின்று, ஒன்றுக்குப் பத்து தடவைகள் யோசித்தார். அவரால் எடுத்த முடிவை மாற்ற முடியவில்லை. கயிறு மட்டும் கழுத்தில் இறுகிவிட்டால் பிறகு கூச்சலிடவோ அல்லது கைகளை மேலே தூக்கி கயிற்றைப் பற்றிக்கொள்ளவோ முடியாதென்பதை அவர் முன்னரே அறிந்திருந்தார்.

"கடவுளே என்னை ஏற்றுக்கொள்! நாற்றமடிக்கும் நரகலோகத்திற்கு மட்டும் அனுப்பிவிடாதே!" என்றபடியே



படிப்பகம்

padippakam

முக்காலியைத் தட்டிவிட்டார். முடிச்சு சரேலெனத் தொண்டைக்குழியை இறுக்கியது. கண்கள் இருண்டன, எதுவுமே தெரியவில்லை. ஓராங்கட்டை லேகியம் அடித்ததுபோல் எங்கும் நட்சத்திரங்களே மின்னித் தெறித்தன.

மலைகளும் புதர்களும் வர அவற்றிடையே ரிஷிகளின் குடுமித் தலைகளும் அசையலாமென எதிர்பார்த்தார். “மான்குட்டி நீ எதற்காகச் சாக வேண்டும்? பிறந்ததும் கண்ணாடிப் பெட்டிக்குள் கிடந்து வளர்ந்த உனது பிள்ளைகளும், உன் மனைவி சென்பகவடிவு போன்றவர்களும் வாழும் இப்பூமியில் ஒடியல் பிட்டும் பனாட்டுக் கழியும் தின்று வளர்ந்த நீ மட்டும் ஏன் வாழ முடியாது.” எனக் கேட்டு ஓர் குரல் தலையில் சம்மட்டியால் அடிப்பதைப் போலவுமிருந்தது.

“ஐயோ நான் பெரும் தவறு செய்துவிட்டேன்! நான் மறுபடியும் வாழ ஆசைப்படுகிறேன்.” என்று பெரும் குரலெடுத்துக் கத்த ஆசைப்பட்டார் முடியவில்லை. அதற்குள் படாரென மின்னல் வெட்டியது போல ஒளி. மான்குட்டியின் சரித்திரம் முடிந்தது.

எங்கும் ஒரே மலசல கூடத்தின் கழிவு நாற்றம் வீசியது. அது சுவர்க்கலோகமல்ல தூங்கிச் சாவோருக்கான நரகலோகமே என்று நினைத்தார். பாட்டி சொன்ன கதைப்படி பார்த்தால் அங்குதான் துரியோதனன் முதலியோர் இருக்க வேண்டும். நாலா பக்கங்களும் பார்வையை ஓடவிட்டார். யாரையுமே காணமுடியவில்லை.

அந்த இடத்தை முன்னரும் எங்கோ பார்த்தது போலிருந்தது. அண்ணார்ந்து பார்த்தார். மலசல கூடத்தின் கழிவுநீர் ஓடும் மண் குழாய் முறிந்து கிடந்தது. எல்லாம் தூக்குக் கயிற்றை அதன் மீது மாட்டியதால் வந்த வினையென நினைத்தார். குழாய் உடைந்து சீறிய கழிவு நீரில் தோய்ந்து கொண்டிருந்த மான்குட்டி கழுத்தில் சரியாகத் தடம் இறுகாதிருந்த கயிற்றைக் கழற்றி வீசினார்.

தூக்கு போட உறுதியான கயிற்றைத் தேடியவர் அதைக் கட்டுவதற்கு உறுதியான குழாயைத் தேடவில்லையே என்று வருந்தினார். பட்டதாரியாக இருந்தும் குழாயின் பலத்தைக் கணக்கிடாதுபோன முட்டாள்தனத்தை எண்ணிச் சோர்ந்தார். எனினும் உயிர் தப்பியதால் சிறிது மகிழ்வடைந்தார்.

இதற்குள் செண்பகவடிவு வரும் நேரமாகிவிட்டது. அவளுக்குத் தெரிந்துவிட்டால் முழு நகரமுமே நாறிவிடுமென அச்சங்கொண்டார். இதுவரை எந்தப் புலம்பெயர்ந்தவரும் எட்டிப் பிடிக்காத தூக்கறுந்து விழுந்தான் என்ற பட்டம் கடைசியில் தன் தலையிலேயே வந்து



படிப்பகம்

padippakam

பொறியப் போவதை எண்ணி அச்சமடைந்தார். துள்ளி எழுந்து விரைவாக வீட்டை நோக்கி ஓடத் தொடங்கியபோதே இதெல்லாம் தனது பிழையல்ல புலம்பெயர் வாழ்வுகாட்டும் புதிய ஜாலங்கள் என்று முடிவு செய்தார். புலம்பெயர் வாழ்வின்மீதே சகல பழிகளையும் போட்டபடியே ஒரு வாளியில் தண்ணீரைப் பிடித்து தலையில் ஊற்றினார்.

(யாவும் கற்பனை)



படிப்பகம்

padippakam

# நல்ல பெடியன்!

ஏழு மணிக்கே இருட்டு ஆழமாகி, பழுத்தும் விட்டது. மூட்டமாக இறங்கிய சன வெக்கை கலை விழாவிற்கு வந்திருந்தவர்களைக் களைபோட வைத்திருந்தது. இருப்பதற்கு விருப்பமில்லாமலே இருப்பவர்கள் போல நிறைய பேர் கதிரைகளில் வழிந்து கிடந்தனர்.

"எனக்கு ஒரு கப் கோப்பி வேண்டும்?"

"சீனி போட்டா? போடாமலா?"

"பால் விட்டு"

அந்த டெனிஸ்காரன் திருவாசகத்தை முதல் தடவையாக நிமிர்ந்து பார்த்தான். பின் கோப்பியை வார்த்துவிட்டு பால் பெட்டியையும் தூக்கி முன்னால் வைத்தான்.

பணத்தைக் கொடுக்க, அருகில் சென்ற போதுதான் அவனுடைய காதுகளைப் பார்க்க முடிந்தது. மரம் அரியும் இயந்திரங்களுக்கு அருகில் நிற்போர் பாவிக்கும் கிடைச்சிகளால் காதுகளை அடைந்திருந்தான்.

மேடையில், "தும்! தும்!" என்று குத்தும் ஒலியுடன் அடுத்த சினிமாப் பாடல் ஆரம்பமாகியிருந்தது. வாத்தியங்களின் அதைப்பு, சுற்றி வர கைகளை நீட்டும் மிகையொலி அலைகளோடு காதுக் கிடைச்சிகளையும் தொடர்புபடுத்திப் பார்த்தார். தன்னுடைய செவிப்புலன்களிலேயே சந்தேகம்வர காதை மெதுவாகக் குடைந்து கொண்டார்.

எதிலுமே எந்தவித இலயிப்புமின்றிக் கோப்பியை மிடறுவதும்,

படிப்பகம்

பார்வையை அங்கும் இங்கும் வீசுவதுமாய் யாரையோ தேடினார். அவர் தேடிவந்த சிறீஸ் இதுவரை அகப்பட்ட பாடாயில்லை. பெடியனைப் பற்றிச் சேகரித்த தகவல்கள் அவனைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பை மேலும் மேலும் அதிகரித்தன.

வயது இருபத்தேழு, குடி, கட்டை, கூத்தி யாதொன்றுமில்லை. ஒரே மர பக்டரியில் தொடர்ந்து ஏழு வருடங்களாக வேலை செய்து வருகிறான். தானுண்டு தன் பாடுண்டு என்று வாழ்பவன். அவனுடைய பொழுது போக்கு தொலைக் காட்சியில் யூரோ ஸ்போட்ஸ் பார்ப்பது. நேரம் கிடைத்தால் கலை விழாக்களுக்கும் வருவதுண்டு.

முன்புறமாகப் பார்த்தார். சில பெடியன்கள் வீடியோ எடுப்பவரின் பார்வைக்காக இருக்கும் தொலைக்காட்சிப் பெட்டியை மொய்த்திருந்தனர். கலை விழாவை நேரடியாகப் பார்க்க வழியிருக்க இவர்கள் எதற்காக ரீ.வியைப் பார்க்கிறார்கள் என்று யோசித்தார். ஒரு வேளை சிறீஸ் அவர்களுடன் இருக்கலாமென்று நினைத்துக் கொண்டே அருகில் போனார், அங்கும் அவன் இல்லை.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று கமேராக்களில் ஒன்று பார்வையாளர் பக்கமாகச் சுழன்று கொண்டிருந்தது. யார் யார் வந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்களுடைய சோடனைகளையும் பார்க்க வேண்டுமானால் இருக்க வேண்டிய சரியான இடம் அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்புதான் என்பதை விளங்கிக் கொண்டார். சுற்றியிருந்தவர்களின் அறிவை மெச்சியபடி, தானும் அங்கேயே அமர்ந்து கொண்டார். சிறீஸ்சைத் தேட அதைவிட்டால் சிறப்பான இடம் கிடைக்கப் போவதில்லை.

கடைசியாக வந்த சினிமாவின் பெயரில் வெளியாகியிருக்கும் உடுப்புக்களும், கொண்டைகளும், சிங்கப்பூரின் கடைசி டிசைன் நகைகளுமாக வந்திருக்கும் பெண்களையெல்லாம் கமேரா நின்று நின்று அன்போடு குசலம் விசாரித்துச் சென்றது. அதே வேளை அவர்களைக் காமாந்து பண்ணுவதற்கே வந்திருக்கும் வயோதிகர்களின் முகங்களைப் பார்த்துவிட்டால் கமேராவும் தத்தித் தத்திப் பாயவே செய்தது. கமேரா எப்போதாவது ஆண்கள் பக்கம் செல்லலாம். அப்போது சிறீஸ்சைத் தேடலாம் என்று காத்திருந்தார்.

அவருடைய மூத்தவள் நளினியும் சிறீஸ்சைப் போலத்தான் மிகவும் அமைதியானவள். ஆடி பிறக்க முன்னர் அவளுடைய காரியத்தையும் முடித்துவிட வேண்டும். பிறகு இரண்டாவது மகளின் காரியத்தைத் தொடங்கவேணும். சிறீஸ்சின் உழைப்பிருந்தால் அவளுடைய காரியத்தையும் சீக்கிரம் முடித்துவிடலாம். நல்ல வேளை

padippakam

கடைக்குட்டி பெடியனாகப் பிறந்திருந்தான். சிறீஸ்சின் வீட்டு முகவரியும், தொலைபேசி இலக்கமும் கையில் இருந்தன. வலிய தேடிப் போவது மதிப்புக் குறைவென்றபடியால் தற்செயலான சந்திப்பொன்றையே விரும்பினார்.

பாயாசத்தில், 'நறுக்'கென்று பயறு கடிபடுவதைப் போல பின்னால் நின்ற சிலர் அடிக்கொரு தட்வைை கடுமையான தூஷணங்களைத் துப்பிக்கொண்டிருந்தனர். சிலவேளை அவர்கள் மனமுடைந்தவர்களாக இருக்கலாமென்று நினைத்துக் கொண்டார். திடீரெனப் பலமான தூஷண வார்த்தைகள் கேட்டன. வேகமாக ஓடிவந்த ஒருவன் முன்புறமாகப் பாய்ந்து, பியர்ப் போத்தலை நிலத்தில் எறிந்து உடைத்தான். இன்னொருவன் கையில் வைத்திருந்த கம்பால் கதிரையில் ஓங்கி வெளுத்தான். காகக் கூட்டத்தில் கல்லெறி விழுந்தது போல சனம் அல்லோலகல்லோலப்பட்டு எழுந்தது. முன்னால் இருந்த ஒருவன் ரீ.வியைத் தள்ளி விழுத்தினான். அவனுக்கு வீடியோக்காரன் மீதிருந்த பழைய வெப்பிசாரத்தைத் தீர்க்க, இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருந்திருக்க வேண்டும்.

திருவாசகம் எழும்பி ஓடத் தொடங்கினார். "பெம்பிளைப் பிள்ளையள் கவனம்!" என்ற சத்தமே எங்கும் மேலோங்கி நின்றது. தங்கள் தங்கள் குடும்பங்களைப் பாதுகாத்துவிட்ட நிம்மதியோடு பலர் கார்களுக்குள் பாய்ந்து ஏறிக்கொண்டனர். சனம் ஓடிய ஓட்டத்தைப் பார்க்க யூலைக் கலவரத்தில் "கொட்டியா" வருகிறார்கள் என்ற வதந்தியால் பயந்தோடியோரின் ஓட்டங்களே நினைவுக்குவர திருவாசகம் மேலும் வேகமெடுத்தார். பஸ் தரிப்பிடத்தில் ஒரு பஸ் வந்து கதவைத் திறக்க பாய்ந்து ஏறிக்கொண்டார். அது எங்கே போகிறதென இனித்தான் விசாரிக்க வேண்டும். ஒரு மணி நேரப் பயணத்திற்கான ரிக்கற்றைப் பெற்றுக் கொண்டார்.

கெந்திக் கெந்தி நடந்தபடியே இருக்கைகளை நோட்டம் விட்டார். இரண்டொரு இரவுப் பயணிகள் அங்குமிங்குமாக இருந்தனர். பின் பக்கம் ஒரு கறுப்புத் தலை தெரியவே, உரிமையோடு அருகில் போனார். சிறீஸ் வேலைத்தல உடையோடு வீடு திரும்பிக் கொண்டிருப்பது தெரிந்தது. எப்போதுமே முதலில் சோதனையைத் தந்து இறுதியில் இன்பத்தைக் காட்டிவிடும் அளக்கடவை அம்மனின் அருளை மெச்சினார்.

"தம்பி வேலை முடிஞ்சு வாறாப் போலை?"
"ஓம்!"

"சனிக்கிழமையும்..."



படிப்பகம்

"ஓடர்ஸ் கொஞ்சம் கூட, அதுதான் ஓவர்டைம் செய்யிறம்." திருவாசகத்தை சிறீஸ் முன்னரே மலிவு விற்பனை நடக்கும் இடங்களிலெல்லாம் பார்த்திருக்கிறான். ஆனால் கதைப்பது இதுதான் முதல் தடவை.

"நீங்கள் எங்கை போறியள்?"

"வீட்டைதான்!"

"வீடென்டால் நீங்கள் உழுத்தன்போவிலை யெல்லோ இருக்கிறது. இது ரெண்டாம் நம்பர் பஸ்!"

"தம்பிக்கு நான் உழுத்தன்போவிலை இருக்கிறது எப்பிடி தெரியும்?"

"கன தமிழாக்கள் அங்கைதான் இருக்கினம் அதுதான்..." இனியும் பஸ் மாறி ஏறிய கதையை மறைக்க முடியாதென்பதை அறிந்து கொண்டே, நடந்ததையெல்லாம் விலாவரியாகக் கூறி முடித்தார்.

"விழாவுக்கு எத்தினை சனம் மட்டிலை வந்திருக்கும்?"

"இல்லையில்லை எண்டாலும் ஒரு நானூறு உருப்படிக்குக் குறையாது."

"போத்தில் எறிஞ்சது எத்தினை பேர்?"

"ஒரு ரெண்டு மூண்டுபேர் இருக்கும். ஐயோ குறுக்காலை போவார் எப்ப திருந்தப் போகுதுகளோ..." என்றபடி திருவாசகத்தார் தன்னை மறந்து அலப்பாரிக்கத் தொடங்கினார்.

"நீங்கள் குறுக்காலை போவாரெண்டு ஆரைச் சொல்லிறியள்? ஓட்டமெடுத்த சனத்தையோ? அல்லது போத்தில் எறிஞ்வங்களையோ?" சிட்டிகை மூக்குப்பொடியை நுள்ளியெடுத்த திருவாசகம் அதை இழுக்க மறந்து, "சரக்! சரக்!" கென வெறும் மூக்கை இழுத்து சளியை மேலே ஏற்றிக் கொண்டார்.

"மூண்டுபேர் போத்திலெறிய, நானூறு சனம் விழுந்தடிச்சு ஓடியிருக்கெண்டா அதுகளின்றை புத்தி குறுக்காலைதானே போயிருக்கவேணும்? எல்லாரும் ஒண்டாச் சேந்தால் மூண்டு பேரை மடக்கிப் பிடிக்கிறது பெரிய வேலையே?" சிறீஸ் சுட்டிக்காட்டிய போதுதான் பயந்தோடிய "குறுக்காலை போவார்" பட்டியலில் தானும் அடங்கிப்போவதை அறிந்து வெட்கினார்.

இருந்தாலும் சிறீஸ் விவரமான பெடியன் என்பதை அவரால் மறுக்க முடியவில்லை. அவர் எதிர்பார்த்ததைப் போல அவன் ஓர் மானஸ்தனாகவும் இருக்க வேண்டும் என்றே எண்ணினார். தான் தேடித் திரிந்த பெடியன் இவனேயல்லாது வேறொருவனல்ல என்றும் மெய் சிலிர்த்தார். மூத்த மகள் நளினியின் கல்யாணம் கண்களுக்குள் ஓடியது.

"உம்மைப்போல நாலு விசயம் தெரிஞ்ச பெடியள் இப்ப எங்கை கிடைக்குதுகள்? ஒரு நல்ல மாப்பிள்ளையைத் தேடுறதெண்டால் உமியிலை நெல்லுப் பொறுக்கின கதையாத்தான் கிடக்கு. "சிறீஸ் அமைதியாக இருந்தான். அவன் முகத்தைப் பார்த்தபின் திருவாசகம் சிறிது உற்சாகமடைந்தார்.

"தம்பி! வெளிநாடு வந்த பிள்ளை குட்டியெல்லாம் ஏன் உப்பிடி நாசமாயப் போகுதுகள் சொல்லும்பாப்பம்?" அவன் இதற்கும் பதில் சொல்லாததால் திருவாசகமே தொடர்ந்தார்.

"நாட்டிலை இருக்கிற சொந்த பந்தங்களை ஐயோ எண்டு தவிக்க விட்டிட்டு, இஞ்சை ஓடிவந்தம் ஆமிக்காம்புகளிலையும், பொலீசிலையும் பிள்ளை குட்டியளைப் பறி குடுத்திட்டு, அதுகள் விடுற பெருமூச்சு இஞ்சை இருக்கிற பிள்ளை குட்டியளைச் சும்மா விடப் போகுதே? அதுதான் எங்கைப் பாத்தாலும் நாசமறுப்பாய்க் கிடக்கும். இனி நாமளும் பிள்ளை குட்டியளைப் பெத்தனாங்கள். உந்தச் சீலம்பாயளை ஏன் கதைக்க. அப்ப நான் அடுத்த கோல்டிலை இறங்கிறன் தம்பி"

சிறீஸ் என்ன நினைத்தானோ தெரியவில்லை. "அடுத்த கோல்டிலை இறங்கினாலும் உங்களுக்கு உடனே பஸ் கிடைக்காது. ஒண்டரை மணித்தியாலம் குளிரிலை நிக்கவேணும். வீட்டை வந்தியளெண்டால் ஏதும் சூடா குடிச்சிட்டுப் போகலாம்" என்றான். திருவாசகமும் 'இதற்குத்தான் காத்திருந்தேன்' என்று சொல்ல நினைத்ததை நாக்கோடு மடித்துக் கொண்டே, அவனோடு இறங்கினார்.

"தம்பிக்கு எத்தனை சகோதரங்கள்?"

"தம்பிமார் ரெண்டு!"

"பொம்பிளைச் சகோதரங்கள் இல்லையே?"

"இருக்கினம். ரெண்டு அக்காமார். கட்டிக்குடுத்திட்டன்."

சிறீஸ் உண்மையாகவே பொறுப்புள்ள பெடியனென்று

padippakam

மெச்சினார். 'அப்ப இனியென்ன உம்முடைய காரியந்தான். ஏழுவரியமா உழைச்சுதெல்லாம் நல்ல காரியத்துக்குத்தான் பயன் பட்டிருக்கு. ம்.. இஞ்சையும் இருக்குதுகளே குடிச்சு, கும்மாளமடிச்சு...' ஒரு கேன் நிறைய வெறுங்கோப்பியும், பிஸ்கட்டும் கொண்டுவந்து வைத்தான் சிறீஸ். குடித்துக் குடித்துக் கதைக்க வசதியாயிருக்குமென்று நினைத்தார்.

"கோப்பியைக் குடியுங்கோ! நான் குளிச்சிட்டு வாறன்!" அவன் வேலைத்தல உடுப்பைக் கழற்றிவிட்டுக் குளிக்கப் போனான். திருவாசகம் பெடியனின் செல்வாக்கைப் பார்க்க ரூமை நோட்டம் விட்டார். ஒரு பழைய பிலிப்ஸ் ரீ.வி. டெக் இல்லை. பக்கத்தில் ஒரு சின்னஞ்சிறிய கசற் றேடியோ, அளவான பூச்சாடி, அரை நிர்வாணப் படங்களால் அசிங்கப்படாத சுவர்கள். திருவாசகம் சகல வழிகளிலும் திருப்தியடைந்தார். சிறீஸ் குளித்துவிட்டு வந்து, ஒரு 'கப்'பில் தனக்கும் கோப்பியை ஊற்றினான்.

"அம்மா, அப்பா ஊரோடைதானோ?"

"ஓம்! தம்பியவைக்கும் வயது வந்திட்டுது. வீட்டிலை வைச்சிருக்கப் பயமாக்கிடக்கெண்டு எழுதியிருகினம்."

"அதெண்டால் மெத்தச் சரிதான்! நேற்றும் களுத்துறைச் சிறையிலை மூண்டு பேரைக் கொண்டு போட்டாங்களாம். உள்ளை இருக்கிறவனுக்கே இந்தக் கெதியெண்டால், வெளியிலை திரியிறவன்பாடு சொல்லியே தெரியவேணும்?"

"அம்மாவும் அதைத்தான் எழுதியிருக்கிறா"

"பெத்ததுகள் சும்மா இருக்குங்களே? ரெண்டு தம்பிமாரிலை ஒராளை மட்டும் இஞ்சாலை எடுத்து விட்டீரெண்டால் போதும். மற்றத் தம்பியாருந்தை பொறுப்பை அவனட்டையே குடுத்திடலாம். பிறகு நீர் ஒரு கலியாணத்தையோ காட்சியையோ வைச்சுக் கொள்ளலாமே!" சிறீஸ் எதையோ யோசித்துக் கொண்டிருந்தான். ஒரு வேளை திருவாசகத்தின் மகள் நளினியைத் தேடி அவன் எண்ணங்கள் ஓடியிருக்கலாம்.

"என்ன தம்பி கடுமையான யோசனை!"

"இல்லை... தம்பியை எடுக்கிறதெண்டால் நான் என்னம் நாலு வரியமாவது உழைக்க வேண்டிவரும். அதுக்குப் பிறகு கலியாணத்தைக் கட்டி என்ன பலன் இருக்கப்போகுது..?"



படிப்பகம்

''நீர் சொல்லுறதும் சரிதான். பருவத்தே பயிர் செய்ய வேணுமெண்டு சும்மாவே சொன்னவங்கள். எனக்கும் வேலை வெட்டி கிடையாது. என்ரை மூத்தவளுக்கும் தையோடை இருவத்திரெண்டு வயசு! அவளையும் காலா காலத்திலை கட்டிக்குடுத்திட ஆசைப்படுறன். நீரும் நமக்கொரு பிள்ளை மாதிரி உம்மடை தம்பிமாரையும் நினைக்க கவலையாத்தான் கிடக்கு...ம்! எல்லாம் பலன்!" அவனையே கூர்ந்து பார்த்தார்.

"பஸ்சுக்கு நேரமாச்செல்லே?"

"அதுக்கென்ன பஸ்சுக்கே பஞ்சம்? அடுத்த பஸ்சிலை போனால் போச்சு!"

"அப்ப நில்லுங்கோ! சாப்பிட்டிட்டுப் போவம்."

"ம்...! உம்மைப் போல நல்ல குணமுள்ள பெடியளைத்தானே கடவுளும் சோதிக்கிறார். எனக்குத் தெரிஞ்ச ஏஜென்சிப் பெடியனொருத்தன் பக்கத்து சிற்றியிலைதான் இருக்கிறான். ஒரு கிழமையிலையும் ஆக்களை எடுத்துக் குடுக்கக் கூடியவன். ஆள் வலு விண்ணன். எழுவத்தையாயிரம் குறோணரெண்டால் சரி!"

"ஏஜென்சி இருந்தென்ன பிரயோசனம் எழுவத்தையாயிரத்துக்கு எங்கை போறது?"

''இந்தக் காலத்திலை எழுவத்தையாயிரம் பெரிய காசே? கலியாணம் முடிக்க முந்தி உப்பிடியான சோலியளை வெட்டிப் போடுறதுதான் நிம்மதி. என்ரை பெட்டையும் கலியாணம் கட்டினாப்பிறகு கரைச்சல் இருக்கப்படாதெண்டுறவள்!" கதை நீண்டு சென்றது. சாப்பிட்டு முடித்தபோது சிறீஸ் மூத்த தம்பியை விரைவாக வெளிநாடு கூப்பிட்டுவிட்டு, அதே கையோடு தானும் திருமணத்திற்குத் தயாராகிவிட வேண்டுமென முடிவெடுத்துக் கொண்டான். நளினியின் வயது இருபத்தியிரண்டு என்பது அவனின் நினைவில் இருந்தது.

''எல்லாம் கேக்க நல்லாயிருக்கு. ஆனால் வட்டியை நினைக்கத்தான்.." என்று மீண்டும் இழுத்தான்.

"நாலு வட்டி ஒரு பெரிய விசயமே? தம்பி வந்தானெண்டால் ஒரு வரியம் கனக்க; கடனை முடிச்சிடலாம்! எனக்குத் தெரிஞ்ச ஆளட்டை கொஞ்சக் காசு கிடக்குது. மனியனுக்கு வட்டி உழைக்க ஆசை. ஆனால் முதலுக்கும் பயம். நான் பொறுப்பு நிண்டால் தரும்.

வேணுமெண்டால் சொல்லும் வாங்கித் தாறன். ஆனல் ஒண்டு மனிசன் முதலாந்திகதி வட்டிக்கு நிக்கும் மற்றபடி சோலியில்லை"

சிறீஸ் சம்மதம் தெரிவித்தான். திங்கள் பணத்துடனும், ஏஜென்சிக்காரனுடனும் வருவதாகக் கூறினார். அதற்குப் பிறகு கலை விழாச் சண்டை எப்படி முடிந்திருக்கும் என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டே விடைபெற்றார். சிறீஸ் பஸ் தரிப்பிடம் வரை கூடவே வந்தான். ஏற்றிவிடும்போது அன்பாகப் புன்னகைத்தான். அந்தச் சிரிப்பில் பொய்யிருக்கவில்லை.

பஸ்சில் ஏறி, ஓரமாக இருந்தபடியே பள்ளி கொள்ளும் பரந்தாமன் போல கண்களை மூடிக் கொண்டார். மகள் நளினியின் காரியம் நல்லபடி நிறைவேறப் போகிறதென மகிழ்ந்தார். அவளுக்குப் பேசி முடித்த மாப்பிளை போனமாதமே கொழும்பு வந்து காத்திருக்கிறான். அவனையும் அடுத்த வாரமே சிங்கப்பூர் புறப்படும்படி தகவல் கொடுக்க வேண்டும்.

ஒரு இலட்சத்தில் சீட்டு தொடங்கி, தாச்சித் துண்டும் எடுத்துவிட்டார். அதை மாதா மாதம் கட்டி முடிக்க சிறீஸ்சையும் பிடித்தாயிற்று. தொடர்ந்து உழைத்து வட்டிகட்ட அவனைப் போல ஒரு நல்ல உழைப்பாளி எங்கே கிடைக்கப்போகிறான். ஏஜென்சியிடம் கிடைக்கும் கொமிசனில் கொழும்பிலிருக்கும் மாப்பிளைக்கும், தனக்கும் விமான ரிக்கற் எடுத்துவிட முடியுமென நம்பினார்.

சிறீஸ்சின் தம்பி பாங்கொக்கிலோ, ரஸ்யாவிலோ தரித்துக் கிடக்கும் அவலமும், அவனை எடுக்க தொடர்ந்தும் பணம் தேவைப்பட இவரிடமே மேலும் கடன்பட்டு, வட்டிக்கும்; வட்டியின் வட்டிக்குமாக உழைத்து; சிறீஸ் கிழவனாகப் போகும் காட்சி மனதை உற்சாகப்படுத்தியது. அவரின் விடைத்த காதுகளுக்குள் இரண்டாவது மகளின் கல்யாணத்திற்கு அடிக்கும் கெட்டி மேளமும் தொலைவாகக் கேட்பது போலிருந்தது.

எங்கோ ஒரு கலைவிழா நடக்க, அவரின் இரண்டு மகள்மாரும் கணவன்மாரோடு வந்திருக்கிறார்கள். அவர்களும் புதிதாக வந்திருக்கும் நகைகள், கொண்டைகள், புடவைகள் சகிதமாக அமர்ந்திருக்கிறார்கள். பார்க்கக் கண்கள் பூரிக்கின்றன. திடீரென அவர்களின் வாழ்விற்காக வட்டிகட்டிய சிறீஸ் ஓடிவந்து, ஒரு பியர்ப்போத்தலை நிலத்தில் எறிகிறான். முதுமையடைந்த அவன் அவரை நோக்கி அடிக்க ஓடிவரவே திடுக்கிட்டு விழித்தார். கனவுதான் - பஸ் உழுத்தன்போவை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

●

## மாற்றம் விநாடிக்குள்தான்!

சரேலெனப் பாய்ந்து கழுத்தில் ஒரு அடி. "ஐயோ!" என்ற சத்தம் கேட்டது. சட்டெனப் பின்புறமாக ஜகா வாங்கி நாரிக்கணுவைக் குறி வைத்து இடக்காலால் எகிறினார். மேலும் அலறுவதைத் தடுக்க அருகில் கிடந்த பலகைக் கட்டையால் ஓங்கி மண்டையில் ஒன்று போட்டார். தொப்பென விழுந்ததும் கர்லாக்கட்டை சுழற்றுவது போல கைகளை வட்டமாகச் சுழற்றியபடியே அங்குமிங்குமாக அலங்கார அடி வைத்து தத்தித் தத்தி முன்னேறினார். அவரின் பிரதான எதிரியிடமிருந்து முனகல் சத்தம்கூட எழவில்லை. வில்லுக் கத்தியை விரித்து, சோபாவில் ஏற்றி, சர்ரெனக் கோடுகிழித்தார். நுரை மெத்தை பீறிட்டுக் கீழே கொட்டுப்பட்டது.

பயில்வான் வையாபுரியிடம் பழகிய வித்தைகள் திருமணமானபின் விசேடமாகப் பயன்படுவதை எண்ணி மெச்சினார். ஒரு மிடறு பியரை மறுபடியும் வார்த்துவிட்டு, "எடியேய் தமிழ்ச் செல்வி எழும்பிச் சோத்தைப் போடடி!" என்று கத்தினார். அடியின் அகோரத்தால் அவள் மயக்கமாகவே கிடந்தாள். பைப்பில் தண்ணீரைப் பிடித்து வந்து முகத்தில் விசிறினார்.

நடைக்குட்டிக்கு வாழ்க்கைப்பட்ட நாளிலிருந்தே தமிழ்ச்செல்வியின் சீவியம் இப்படியாகிப் போனது. தண்ணீராவது குளிர்ச்சியாகத் தெரிந்திருக்க வேண்டும், மெல்லக் கண்களைத் திறந்தாள். தலை விண்ணென்று தெறித்தது. எழுந்து சென்று சீலைத்துண்டை ஈரமாக்கி, ஓடும் இரத்தத்தை ஒற்றிவிட்டு, சிறிதாக பிளாஸ்டரை வெட்டி காயத்தின் வாயில் ஒட்டினாள்.

"நீயுமொரு மனிசனோ? கட்டின பெண்டாட்டியைக் கைநீட்டி அடிக்கிற பேடி!" என்று மனதிற்குள் திட்டினான். அந்தச் சொற்கள்

அவளிடம் அடிக்கடி பாவனையாகித் தேய்ந்து போயிருப்பது தெரிந்தது. இப்போதெல்லாம் தமிழ்ச்செல்வி எவ்வளவு அடிவிழுந்தாலும் வாய் திறப்பதேயில்லை. ஏதாவது கதைத்தால் தாக்குதல் மேலும் தொடரும். குசினிக்குள் போனாள். அவனுக்கு எதிலிருந்து சோறு வடித்துக் கொடுப்பதென்பது தெரியவில்லை.

குளிர்சாதனப் பெட்டிக்குள் தன்னந்தனியாக வெற்றுப் பால் பெட்டியொன்று தவம் கிடந்தது. அரிசி, வெங்காயம், உருளைக்கிழங்கு, கோழியென சமையலுக்கு எதுவுமில்லாமல் குசினியில் வெறுமை தலை விரித்தாடியது. ஐரோப்பிய நாடொன்றிற்கு வந்தபின்பும் அடுத்த நேரச் சோத்துக்கு வழியில்லாமல் போன குடும்ப வாழ்க்கையை யாரிடம் சொல்லி வெட்கப்படுவதெனத் தெரியாமல் நின்றாள்.

"எடியேய்! என்னடி பத்தினி வேசம் போடுறாய்? நானில்லாத நேரம் எவன் வீட்டை வந்தவன்? சீப்பிலை வேறை சென்ற வாசமடிக்குது. ஆரடி உன்றை கள்ளப்புரியன்?" வில்லுக்கத்தியோடு பாய்ந்து வந்தவர் இறைச்சி வெட்டும் பிளாஸ்டிக் கட்டையில் ஓங்கிக் குத்தினார்.

"மவளே குடல் வகுந்துபோடுவன்! இன்னம் ஒரு மணித்தியாலத்திலை கோப்பையிலை சோறுகறி இருக்கவேணும் இல்லாட்டி.. என்னடி பாக்கிறாய்? அ.. அ.. சிலம்பமாடியிடுவன்ரி.." கர்ஜனையுடன் போய் சோபாவில் முடங்கினார். சமைப்பதானால் பணத்திற்கு யாரிடம் போவது? அவளுடைய வங்கிக்காட் முதல்கொண்டு எல்லா ஆவணங்களுமே அவரிடம் பறிமுதலாகி விட்டன. எஞ்சியிருப்பது உயிருக்காகப் போராடும் வாழ்க்கை ஒன்று மட்டுமே. கூடையைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்கினாள். இன்றும் யாரிடமாவது கடன்பட வேண்டியதுதான்.

வெளியில் குளிர் காற்று நான்கு பக்கங்களாலும் மோதியது. மரங்களிலிருந்து இலைகள் வேகமாக உதிர்ந்து பறந்தன. தேகம் சில்லென்று ஓடி விறைத்தது. நாட்டிலிருந்து கொண்டு வந்த சட்டை இங்குள்ள குளிரைத் தாங்க முடியாதென என்றோ கைவிரித்து விட்டது. பழைய உடுப்புக் கடையிலிருந்து வாங்கிப் போட்டுக் கொண்ட பத்து குறோண் ஜாக்கட்டைத் தவிர அவளை மூடியிருப்பதெல்லாமே இலங்கையிலிருந்து கொண்டு வந்த உடுப்புகளே.

இப்படியே தினசரி கடைக்குப் போவதுதான் வாழ்வில் கிடைத்துள்ள ஒரேயொரு நிம்மதி. அங்கு போனால் அவளைப் போலவே அன்றாடங்காய்ச்சிகளான வேறு சில தமிழ்ப் பெண்களையும்

காண முடியும். ஒவ்வொருவரையும் சந்தித்து, அவர்களின் சோகக் கதைகளைக் கேட்கும்போது ''அப்பாடா நான் கொஞ்சம் பரவாயில்லையே'' என்று எண்ணத் தோன்றும். கடைக்கும் போகாவிட்டால் அந்த ஆறுதலும் இல்லை.

கடையில் சனக்கூட்டம் முட்டுப்பட்டது. நெரிசலின் முன்புறமாக பறுவதம் அக்காவைக் கண்ட பின்புதான் அன்று மலிவு விற்பனை நாளென்று அறிய முடிந்தது. இன்றும் அவள் இரண்டு கைகளிலும் வழிய வழிய சிங்கப்பூர் காப்புகளை அடுக்கியபடியே வந்திருந்தாள். பொருட்களை எடுத்தாலும் வைத்தாலும் காப்புகள் "கிலிங்! கிலிங்!" எனத் தாளம் போடும்.

பறுவதமக்காவைப் பார்த்த பிறகுதான் இங்கும் சில பெண்கள் குடும்பத்தில் அதிகாரத்தோடு இருக்கிறார்கள் என்பதை அவளால் நம்ப முடிந்தது. இருந்தாலும் நாட்டில் ஊரடங்குச் சட்டம் வரும் நேரம் வசதியுள்ளவர்கள் உணவுப் பொருட்களைத் தொகையாக வாங்கிப் பதுக்குவதைப் பார்த்திருக்கிறாள். பறுவதமக்கா வாங்கும் பொருட்களைப் பார்த்தால் இங்கும் ஊரடங்குச் சட்டம் வரப் போகிறதோவெனப் பயம் வரும்.

மேலும் அவள் இவ்வளவு பொருட்களை வாங்கும்போது புருசன் சிவசம்பு மட்டும் தெருத் தெருவாக நின்று பணிஸ் வாங்கிச் சாப்பிட்டுப் பசியாற வேண்டிய தேவையென்னவென்றும் புரியவில்லை. பொருட்களை வாங்குவதையே பொழுது போக்காக்கி, அவை மக்கிப் போக அள்ளி வீசிவிட்டு, மறுபடியும் மலிவு தேடி ஓடும் பறுவதமக்காக்கவை நினைத்தால் அவளால்கூட சிலவேளைகளில் சிரிக்க முடிகிறது.

"வணக்கம் தமிழ்ச் செல்வி அக்கா!" முதுகுக்குப் பின்னால் கருக்கரிந்ததுபோல ஓர் ஆண் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள் கவிஞர் முருகேசு.

"வணக்கம்! வணக்கம்!"

''என்ன தனிய நிண்டு சிரிக்குமாப் போலை கிடக்கு?'' பெண்களைக் கண்டால் உயிரைப் பிடி என்பது போல குழைவாகப் பேசுவது கவிஞரின் வழமை.

"ஒண்டுமில்லை அங்கிள்! நானெல்லோ ஒரு மடைவேலையைச் செய்து போட்டன்!"

“மடைவேலை காவிய காலத்திலை இருந்தே நடந்து வாறதுதானே! ராமன் செய்த மடைவேலை சீதை தீக்குளிக்க வேண்டி வந்தது. ம்! தமிழினம் ஒருவருக்கொருவர் உதவியாத்தானே இருக்க வேணும்! இனி நடைக்குட்டியண்ணனும் நமக்கு வேண்டியவர்!” நீட்டி இழுத்தார் கவிஞர். மாதத் தொடக்கத்தில் வங்கியில் உதவிப் பணம் விழுந்தால் போதும் கவிஞர் மோப்பம் பிடித்தபடியே வீடு வந்துவிடுவார். ஓசிக்குடியில் கண்ணகி, மாதவியென்று புலம்புவார் அது அவளுக்கும் பரிச்சயமானதுதான்.

“மணிப்பேசை விட்டிட்டு வந்திட்டன். ஒரு ஐம்பது குறோண் தந்தியளெண்டால் பின்னேரமா எடுக்கலாம்!” துணிந்து பொய் சொன்னாள். கவிஞரும் தப்பியோடிவிட்டால் கடன்பட இப்போதைக்கு வேறு சர்க்கரைவாயர்கள் அகப்படப்போவதில்லை.

கடன் என்றதும் கவிஞரின் முகம் அட்டதிக்குகளையும் நோக்கி கோணல்மானலாக இழுத்துக் கொண்டது. அவளையே கூர்ந்து நோக்கினார். அந்தப் பார்வையைவிட, “உனக்கும் ஒரு மணிப்பர்ஸ் இருக்கிறதா?” என்றே கேட்டிருக்கலாம்.

பணத்தைக் கொடுக்காவிட்டால், கேவலம் ஐம்பது குறோணுக்கு வக்கில்லாமல் போவிட்டமே!” என்று நடைக்குட்டியே கொழுவலைப் போடலாம். இதற்குள் அவருடைய கவிதைத் தொகுதியொன்றும் அச்சில் கிடப்பதால் தற்சமயமாவது பகையைத் தவிர்ப்பது நலமென எண்ணி, ஐம்பது குறோணரை எடுத்து நீட்டினார். கவிஞரின் முதலாவது கவிதைத் தொகுதியை விற்ற பணத்தை நடைக்குட்டியிடம் சிகரட் வேண்டியே கழிக்க நேர்ந்ததை கவிஞர் சோகத்துடன் நினைவு மீட்டியிருக்கலாம்.

“பின்நேரம் நான் வீட்டிலை நிக்கமாட்டன் மனிசி நிக்கும் மறக்காமல் குடுத்திடுங்கோ!”

“ஓம்! ஓம்!” கடைக்கு வந்த கவிஞர் பணத்தைக் கொடுத்ததும் வேண்டா வெறுப்பாக வேறெங்கோ திரும்பிப் போவது தெரிந்தது. இவள் கடைக்குள் பிரவேசித்தாள். ஒரே சுற்றில் பொருட்களை வாங்கிக்கொண்டு வெளியே வந்தாள். வாசலில் அவளுக்காகவே நளினா காத்து நிற்பது தெரிந்தது. அவளின் சிவந்த முகத்தை யாரோ பிறாண்டியிருந்தனர். உதட்டோரம் வெடிப்பு. கருமை பூசாமலே கவலை கண்களைச் சுற்றி நிழல் போலப் படர்ந்திருந்தது. இவளுக்கு மட்டுமல்ல அடுத்த தெரு மேரிக்கும் வாய்த்த சோகம் தமிழ்ச்செல்வியைப் போன்றதுதான். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத்தான் மூவரும் நீண்ட நாட்களாக வழி தேடிக்

கொண்டிருக்கிறார்கள். கடைகளின் ஓரமாக நின்று கதைத்துக் கொள்கின்றனர்.

''கொஞ்சம் அவசரம் நான் சொன்னதெல்லாம் நினைவிருக்குத்தானே?"

''பயப்பிடாதையுங்கோ உங்களுக்குப் பிறகு நான்தான்! அதிருக்கட்டும் ஏன் அவசரப்படுறியள்?"

"சமையலுக்கு ஒருமணித்தியாலம் அவகாசம், அதுதான்!"

" உம்மட்டை ஒரு கேள்வி கேக்கவேணும். டயானா என்றால் யார்?" நாலு பக்கங்களும் பார்த்தாள்.

"ஏன் என்ன விசயம்?"

'டயானா செத்துப்போனாவெண்டு சாமசாமமாக் கத்திக்கொண்டு கிடந்தவர். கடைசியிலை எல்லாம் உன்னாலைதான்டி எண்டபடியே, எனக்குத்தான் அடிச்சவர். நீரும் தலையிலை பிளாஸ்டர் போட்டிருக்கிறீர் உங்கவீட்டையும் டயானாப் பிரச்சனையோ?'' என்றாள். அப்படியும் ஒரு பிரச்சனைவர வழியிருப்பதை இப்பொழுதுதான் தமிழ்ச் செல்வி புரிந்தாள். நடைக்குட்டிக்கு இதுவரை டயானா என்றால் யாரென்றே தெரியாதிருப்பதை எண்ணிக் கவலைப்பட்டவள், இப்போது சந்தோசமடைந்தாள்.

டயானா ஒரு டேனிஸ்காரியல்ல என்பதையும் அவளுக்கு இங்கிலாந்து தேசத்தில் முடியுரிமை மறுக்கப்பட்ட கதையையும் சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

வீடுவந்து சோறும் கறியும் ஆக்கி முடிக்க விதித்திருக்கும் காலக் கெடுவான ஒரு மணிநேரம் தாண்டிவிட்டது. சாப்பாட்டுக் கோப்பைக்குள் சோறுபோட, படுத்துக் கிடந்த நடைக்குட்டி எழுந்து வருவது தெரிந்தது. சோறு கறியை சட்டிகளோடு எடுத்து வந்து மேசையில் வைத்தாள்.

"வர வர உனக்குக் கொழுப்பேறிப் போச்சு! பொரியல் இல்லாமல் சமைச்சிருக்கிறாய். அவனுவனுக்கு மனிசிமார் முட்டையும் ஈரலுமாப் பொரிச்சுக் கொட்டுறாளுகள். ம்! என்னையும் சொல்லு!" எலும்புகளை கடகடவென்று கடித்துத் துப்பினார். சோற்றை அள்ளி உவியும் போதே, "சர் சர்" என வரும் நெடிய ஒலி எங்கும் நிறைந்தது.

padippakam

நடைக்குட்டியை அறியாதவர் அங்கு யாருமே கிடையாது. பத்து வருடங்களுக்கு மேலாக இங்கு வாழ்ந்து வருபவர். அவருடைய உண்மைப் பெயர் திருநடனசபாபதி. இங்கு எல்லோருமே காரில் ஓடித் திரிய, இவர் மட்டும் நீண்ட காலமாக நடந்தே திரிவதால் நடைக்குட்டியென்பது பட்டப் பெயரானது. பிறகு அதுவே நிரந்தரப் பெயராகிவிட்டது. டேனிஸ்காரர் அவரது பெயரை நாடிக்கூடி என்று இழுக்கும்போது சந்தம் குழைந்து வரும்.

வெலிக்கடைச் சிறையில் இரண்டு வருடங்கள் இருந்தர் என்பது அவரது விசேட தகமை. எங்காவது பிரச்சனைகள் வந்துவிட்டால் போதும் "டேய்! நான் வெலிக்கடைச் சிறையையே பாத்தவன்ரா!" என்று ஆரம்பித்துவிடுவார். அந்த நேரங்களில் நெஞ்சை நிமிர்த்தி தன்னை ஓர் சிறைமீண்ட செம்மலாகக் காட்டிக்கொள்வார். இதனால் நிறையப் பேருக்கு அவரைக் கண்டாலே பயம்.

தமிழ்ச்செல்விக்கும் அவர் சிறை சென்ற காரணம் முதலில் தெரியாது. சிறைமீண்டபோது எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தில் தாடி மீசையுடன் காட்சியளித்தார். அந்தத் தோற்றம் செக்கிழுத்த சிதம்பரனார் போல இருந்ததனால் அவள் மேலதிகமாக எதையும் கேட்கவில்லை. திருமணத்தின் பின் அவரது செக்குமாட்டு வாழ்க்கையைப் பார்த்த பிறகுதான் சந்தேகம் கிளம்பியது. விசாரித்துப் பார்த்ததில் விசயம் இப்படியிருந்தது.

ஊரில் பக்கத்துவீட்டுச் சிவசுந்தரத்திற்கும் இவருக்கும் இடையில் தீராத பகை. அந்த நேரம் அயலூரில் அரசியல் பிரச்சனையால் ஒருவர் சுடப்பட்டிருந்தார். அவர் யாரென்பதோ அந்தச் சம்பவம் எதற்காக நடைபெற்றதென்பதோ நடைக்குட்டிக்குத் தெரியாது. இருப்பினும் தானே அவரை மேல்லோகம் அனுப்பியதாக கள்ளுக்கொட்டியில் பீற்றிக் கொண்டிருந்தார். அது அடுத்த பனையோடு குந்தியிருந்த எதிரியான சிவசுந்தரத்தை குலைநடுங்க வைக்குமென எதிர்பார்த்தார். ஆனால் இருட்டில் இன்னொரு பனையோடு நின்ற வேறு சிலரால் அதை அப்படி விளங்கிக்கொள்ள முடியவில்லை. காலையில் ஜீப் வண்டிகளில் வந்து அவரை அள்ளிக்கொண்டு போனார்கள். அதனால் அரசியல் என்பது சுண்டங்காயோ, வெண்டிக்காயோ என்று நினைத்துக் கொண்டிருந்த நடைக்குட்டியும் இரண்டு வருடங்கள் கம்பங்களியோடு மாமியார் வீட்டுச் சாப்பாடு சாப்பிட நேர்ந்தது.

இப்போது அவர் சாப்பிட்டிருப்பதைப் பார்த்தால் சிறைச்சாலையில் எற்பட்ட பசி இன்னும் அடங்கவில்லை போலிருந்தது. தமிழ்ச்செல்விக்கும் ஒரு வயிறு படைக்கப் பட்டிருப்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது வெறுமையாகிக் கிடந்த சட்டிகளில் தெரிந்தது.



படிப்பகம்

சமைக்கும்போதே கொஞ்சம் கொஞ்சமாகச் சுவை பார்த்து அரை வயிற்றை நிரப்பிவிட வேண்டுமென பூரணமக்கா சொன்னது நினைவிற்கு வந்தது. தன்னைத்தான் கவனிக்காவிட்டாலும் வயிற்றுக்குள் நீந்திக் கொண்டிருக்கும் குழந்தைக்குத் தன்னும் ஆகாரம் வேண்டுமென நினைக்காதவனை அவளால் வெறுக்கத்தான் முடிந்தது.

சட்டிகளை எடுத்துச் சென்று கழுவினாள். தலை சுற்றியது. கைகள் சோர்ந்து நடுங்கின. கோப்பித்தூள் போத்தலை எடுத்துப் பார்த்தாள். அடியில் சிறிது கோப்பித்தூள் கட்டிகள் ஒட்டிக் கிடந்தன. அதற்குள்ளேயே சிறிது சுடுதண்ணீரை ஊற்றிக் கோப்பியாக்கினாள். அதைக் குடித்ததும் சிறிது தெம்பு வந்தது. ஆனாலும் அடுத்த நேரச் சாப்பாட்டிற்காக வந்து கொண்டிருக்கும் இரவு மறுபடியும் அவளைப் பயமுறுத்தியது.

நடைக்குட்டி ஏன்தான் இப்படி மிருகமாகிப் போனான் என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவன் மட்டுமல்ல சாதாரண மனிதர்களாகக் காணப்படும் வேறு பலரும் மதுவை ஊற்றாமலே திடீரெனக் குழம்பிப் போவதும் ஏனென்றே தெரியாதிருந்தது. அவனோடு வாழத் தொடங்கிய இரண்டு வருடங்களில் அவள் சுமக்கும் சுமை சாகும்வரைக்குமே போதும் போது மென்றாகிவிட்டது.

பக்கத்து நகரத்தில் இருந்த செல்விக்கும் இப்படித்தான் வாழ்க்கையென்று அறிந்தாள். இப்போது அவள் பொலீஸ் பாதுகாப்பிலிருக்கும் வீடொன்றில் தனியாக வசித்து வருவதாகச் சொன்னார்கள். அவளுடைய கதை மிகவும் சோகமானது. ஒரு நாளிரவு அவளைப் பலாத்காரம் செய்ய வந்த இருவர் நோக்கம் நிறைவேறாமல் போக, அவள் கையை அடித்து முறித்ததும், பின் புருசன் மாறன் வந்து அவளையே குற்றவாளியாகக் கண்டு சுடுநீரை ஊற்றியதும் ஊரறிந்த கதையாயிருந்தது.

அந்த இருவரையும் ஏவிவிட்டது மாறன்தானென்று இப்போது சிலர் கதைக்கிறார்கள். இருந்தாலும் அதை நம்பும் பக்குவத்தை தான் இன்று வரை எட்டவில்லை என்று நினைத்தாள். செல்வியுடன் போயிருக்கலாமா என்றும் யோசித்தாள். வாழும் வாழ்க்கை அவளை அப்படி அழுத்தியது. இரவுச் சமையலுக்கு இன்னொருவரிடம் கடனுக்குப் போக அவளுக்கு விருப்பமில்லை. அதற்குள் ஏதாவது ஒரு முடிவெடுத்தாக வேண்டுமென உறுதியானாள்.

குசினியை விட்டு வெளியே வந்தாள். நடைக்குட்டி நிறைவெறியில் உறங்கிக்கிடப்பது தெரிந்தது. படுக்கப் போகுமுன்பு அவளுடைய தாய் பறுவதாபத்தினியின் புகைப்படத்தையும் அடித்து

padippakam

நொருக்கியிருந்தான். கண்ணாடி சிதறி, போட்டிருந்த மாலையும் அறுந்து கொட்டுப் பட்டிருந்தது.

தாய் பறுவதம் சம்பிரதாயங்களால் கட்டப்பட்ட பழைய ஒருத்தி. தமிழ்ச்செல்வி இங்கு புறப்படும்போது, "சந்தோசமாய்ப் போய்ட்டு வாம்மா! கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருசன். எப்பவும் அவற்றை மனங்கோணாமல் நடந்துகொள்!'' என்று சொல்லியனுப்பினாள். இவள் இங்குவந்து ஆறுமாதங்களில் பறுவதத்தின் வாழ்க்கை முடிந்துவிட்டது. அவளின் உடைந்த படத்தையும் கண்ணாடிகளையும் ஒவ்வொன்றாகப் பொறுக்கி ஒரு பழைய பையில் போட்டாள்.

வீட்டில் அந்தப் புகைப்படம் ஒன்றுதான் உடையாமல் கிடந்தது. இன்றோடு அதுவும் சரி. இந்த நரக வாழ்க்கையைத் தேடித்தந்தாலும் ஏனோ தாயை அவளால் வெறுக்க முடியாதிருந்தது. அதே வேளை அவள் வியாக்கியனப்படுத்திய வாழ்க்கையை அவளால் ஏற்றுக்கொள்ளவும் முடியாமலிருந்தது. இந்த அடிமை வாழ்க்கையைத்தான் கோடம்பாக்கத்துச் சினிமாக்களில் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போயிருந்தாள். எல்லாத் துன்பங்களையும் தீர்க்க ஒரு கதாநாயகன் வருவானெனக் காத்திருந்து, ஓர் நாள் செத்துப்போகும் களைத்துப்போன வாழ்வை வாழ்ந்து, தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலையாகிவிட அவள் விரும்பவில்லை. தனது விடிவை தானே கண்டுகொள்ள வேண்டுமென்ற உண்மையை அனுபவம் தினசரி சொல்லிக் கொண்டிருந்தது. இந்த அறியாமை வாழ்வை உடைப்பதற்கு யாராவது ஒருவர் துணிந்து காலை முன்வைக்காவிடில் மாற்றுவழி கிடைக்காதெனவும் விளங்கிக் கொண்டாள்.

போன வாரமே வாங்கி மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணைக் கானைத் தூக்கினாள். கூடவே தீப்பெட்டியையும் எடுத்தாள். தற்கொலை, விவாகரத்து, இன்னொரு ஐரோப்பிய நாட்டிற்குத் தப்பியோடுதல், அல்லது போட்டிக்கு இன்னொரு நடைக்குட்டியை மறுமணம் புரிதல் போன்ற ஏற்கனவே தோற்றுப்போன முடிவுகளில் ஏதோ ஒன்றைத் தேர்வுசெய்ய அவள் விரும்பவில்லை.

நடைக்குட்டியின் அறையிலும் கீழே போட்டிருந்த காப்பற்றிலும் மண்ணெணையை ஊற்றினாள். படுக்கையுடன் பஞ்சு மெத்தையும் நனைத்தாள். பெண்கள் தொடர்பாக நடைக்குட்டியிடம் உருவாகியுள்ள நச்சுக் கருத்தியலுக்கு வித்திட்ட சினிமாப்படக் கசற்றுக்களையும் அள்ளிப்போட்டு அவற்றின்மீதும் எண்ணெய் வார்த்தாள். தீப்பிடித்ததும் தப்பியோட வசதியாக அறையின்



படிப்பகம்

padippakam

வெளிப்பக்கக் கதவோடு ஓர் கதிரையைப் போட்டு உட்கார்ந்தாள். தட்டிவிடத் தயாராக கையில் தீப்பெட்டி.

நடைக்குட்டியோடு அவர் வளர்த்துக் கொண்ட போலியான பார்வைகளும், ஆதிக்க சிந்தனைகளும், வெற்றுச் சம்பிரதாயங்களும் தீயில் ஆழ்ந்துபோகும் நேரம் நெருங்கியிருந்தது. இதற்குப் பிறகாவது பரவலான மாற்றம் நிலவுமென எதிர்பார்த்தாள். தவறினால் ஒருசில மாதங்களில் நளினா வீட்டிலும்; அதற்குப்பின் மேரி வீட்டிலும் இதே காட்சிகள் அரங்கேற இருப்பது மனதிற்கு நம்பிக்கை தந்தது. மாற்றுவழியற்றோரின் இந்த அதீத முடிவு மாற்றுவழியற்று நிற்கும் சமூகத்தை நகர வைக்குமெனவும் நம்பினாள்.

மண்ணெண்ணை நெடி மூக்கைக் குடைந்திருக்க வேண்டும். எண்ணெயில் ஊறிய நடைக்குட்டி விழித்துக்கொண்டு எல்லாவற்றையுமே நோட்டம் விட்டார். ஏற்றிவைத்திருந்த, "சூர்" நொடிப்பொழுதில் கலைந்தது. அசைந்தால் அவள் நெருப்பைத் தட்டிப் போட்டுவிடுவாள் என்பதால் கல்லாய்ச் சமைத்து கிடந்தார்.

அவரைப் போன்றவர்களின் தவறுகளை அவள் ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டிச் சென்றாள். அந்த நேரம் அவளிடம் மரியாதைத் தன்மையை மருந்திற்கும் அவரால் அவதானிக்க முடியவில்லை. நம்பவும் முடியாமல் எழுந்து ஓடவும் முடியாமல் தடுமாறினார்.

இந்த இக்கட்டான நிலையில் தன்னை நோக்கியே கேள்வி கேட்பதைவிட அவருக்கு வேறுவழி தெரியவில்லை. அவளை இந்த அவலத்திற்குள் தள்ளிவைத்திருக்கும் தனது ஆழ்மன அசிங்கத்தை நினைத்து வெட்கப்பட்டார். இப்படிப்பட்ட இழிமையைத் தாங்கியபடியே ஒரு சமூகம் தொடர்ந்தும் நடக்க முடியாதென்பதை விளங்கிக் கொண்டார். சில விடயங்களை இந்த நூற்றாண்டிற்குள் தீ மூட்டிவிட வேண்டுமென்ற கோபம் அவள் கண்களில் தெறிப்பதை அவதானித்தார்.

கடிகாரம் "டிக்! டிக்!" என அடித்துக்கொண்டே, அடுத்த நூற்றாண்டை நோக்கி ஒவ்வொரு வினாடியாகத் தத்தித்தத்திப் பாய்ந்தது. நடைக்குட்டி திருந்தி வாழ மீண்டும் ஓர் சந்தர்ப்பம் கிடைக்குமா? அல்லது அந்த அறையை மூடி, தீ பரவப்போகிறதா? முடிவு தெரியாதவராக அவள் விரல்களில் தயாராகி நின்ற தீக்குச்சியின் கூர் முனையையே வெறித்தபடியிருந்தார். மாற்றம் ஒரு விநாடிக்குள்தான் மறைந்திருந்தது.

(யாவும் கற்பனை)



படிப்பகம்

# பாட்ஷா – 2

வெள்ளிக் கிழமை என்றால் ஆறு மணிக்கே ரெஸ்ரூரண்ட் களை கட்டிவிடும். அங்கு குட்டியப்பா வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரந்தான் ஆகியிருந்தது. புதுமைக்காகவேனும் சில நிமிடங்கள் முன்னதாகவே போய்க் காட்டிவிட ஆசைப் பட்டுக் கொண்டார்.

''சனியன் பிடிச்சது!'' ஜாக்கட்டின் ஜிப் தொண்டையை நன்னியபோது திட்டிக்கொண்டார். கீழ இறங்க முன் சுவரில் தொங்கும் மனைவி, பிள்ளைகளின் புகைப் படத்தைக் கவலையோடு பார்த்தார். அவர்களைக் குடும்பத்தோடு வெளிநாடு இழுப்பதற்கு இவர் இங்கு மாடாக உழுதுதள்ள வேண்டியிருந்தது.

“கிறிங்..! கிறிங்!” தொலைபேசி மணி. “எப்ப பார் நானும் கீழை இறங்கிற நேரந்தான் உதுவும் அடிக்கும்!” எடுப்பதா? விடுவதா? என்பது தெரியாமல் சில வினாடிகள் தாமதித்தார். மணியடிப்பு ஓய்ந்தபாடில்லை. ஒரு வேளை கொழும்பிலிருந்து மனைவி நாகமணி எடுக்ககூடும். ஓடிவந்து தூக்கினார். மறு முனையில் பேசியது வியாகர். குரல் கரகரப்பாயிருந்தது.

“என்னண்ணே! வேலைக்கு நேரமாச்சு! சட்டெண்டு விசயத்தைச் சொன்னால் நல்லம்!”

“நேரம் என்னடாப்பா நேரம்? இண்டையோடை என்ரை கதை சரி! வியாகன் பரலோகம் போகப் போறான்ரா! க்.. க்..”

“அண்ணே! என்னண்ணே சொல்லுறியள்? வியாகண்ணே!” நீண்ட நேரம் மௌனம்.

"அ..அ.. குட்டியப்பா! நாக்கெல்லாம் வறளுது. கண் செருகுது! தூ.. நா.. நா..ன் நஞ்சு குடி..ச்சிட்டன்!" ஒரு நொடிதான் குட்டியப்பாவிற்கு கையும் காலும் ஓட மறுத்துவிட்டன. இந்த மனுசன் ஏன் இந்த வேலையை செய்திருக்கென்று தெரியாமல் தடுமாறினார். வேலைக்கு வேறு நேரமாகி விட்டது.

"அண்ணே! நீங்க எங்கையிருந்து கதைக்கிறியள்? அதைச் சொல்லுங்கோ! இந்தா வந்திட்டன்? எல்லாம் நேரிலை கதைப்பம்."

"குட்டி.. ஆப்பா..! இந்த உலகத்திலை எனக்கு ஆர் இருக்கா? நீ ஒருதன்தான் என்னோடை மனுசனாய்ப் பழகினாய்! போக முந்தி உன்னோடை கதைக்க ஆசைப்பட்டன்! கதைச்சிட்டன். நான் ஏதாவது பிழை செய்திருந்தா என்னை மன்னிச்சுடுங்கோ! எல்லாரும் நல்லா இருங்கோ! நான் எங்கை அ... அ... செத்துக் கிடகிறனெண்டு... விவரமா எழுதி கடுதாசி போட்டிருக்கிறன். நீயே வந்து சவத்தை எடுத்து" அணைவதற்கு முன்பு சுடரும் விளக்குப் போல குரலில் தெளிவிருந்தது.

"வியாகண்ணே! பெண்டில் பிள்ளையளை விட்டுப் போட்டு இதென்னை வேலை செய்திருக்கிறியள்? கோத்தையாணை சொல்லிப் போட்டன் இருக்கிற இடத்தைச் சொல்லிப் போடுங்கோ!"

"கோத்தையும் பணியாரமும்! எடேய் குட்டியப்பா! கேக்கிறியோடா? அ.. கேள்! கேள்! உனக்கிருக்கிற துடிப்பு அவளுக்கும் பிள்ளையளுக்கும் இருந்தா நான் ஏன் சாகிறன். நீ துடிக்கிறதை பாத்தால்தான் ஏன் நஞ்சைக் குடிச்சனெண்டு... வ்.. வாக்... தூ! கவலையாக் கிடக்கு! (அழுகிறார்) என்னை செய்ய விதி ஆரைத்தான் விட்டுது? கையெடுத்துக் கும்பிட்டன் சவத்தை மட்டும் கிறிக் கிழிச்சுப் போடாதையுங்கோ! அந்தியட்டி, ஆட்டத்திவச.. குட்.. பா..ய்" டெலிபோன் விழுந்து கேட்கிறது. சிறிது நேரத்தில் தொடர்பு துண்டானதும் கேட்கும். "கீக்! கீக்!" ஒலி.

"அண்ணே! அண்ணே!" குட்டியப்பா அடிவயிற்றில் தம்பிடித்துக் குளறினார். மறு முனையில் பதில் இல்லை. நேரத்தைப் பார்த்தார் ஆறு மணி. எப்படியாவது வேலைக்கு இறங்கியாக வேண்டும். கடகடவென்று வியாகரின் மனிசிக்கு போனை அடித்தார். யாரும் எடுக்கவில்லை. நினைத்தவுடன் போவதற்கு அவர்களின் வீடு அருகிலும் இல்லை. முப்பது கி.மீ. தொலையில் இருந்தது.

வியாகர் ஊரில் பக்கத்து வீடு. வெளி நாட்டிலும் நீண்ட காலமாக அவருடன் பழகியவர். "வேலை பெரிதோ?" அறிஞ்ச மனுசனின்ரை உயிர் பெரிதோ?" போராடினார். கடைசியில் றெஸ்ரூரண்டுக்கு

போனை அமத்தினார். ஒருமணி நேர லீவிற்காக மன்றாடினார். முதலாளியிடம் நிலமையை சரியாக விளக்கிக் கூறவும் அவரால் முடியவில்லை. ஏற்கெனவே பாடமாக்கி வைத்திருந்த வயிற்று வலிக்குரிய வசனத்தையே இன்றும் தேய்ந்துபோன குரலில் ஒலித்துக் கொண்டார். மறு முனையில் பதில் இல்லை. மௌனம் சம்மதம் என்று நினைத்துக் கொண்டே வேகமாக இறங்கி ஓடினார்.

"பாழ்படுவான் எங்கையிருந்து போன் பண்ணியிருப்பான்? ஒருவேளை வீட்டுக்காரர் எங்கையும் வெளியாலை போனதாலைதான் இந்தக் கூத்து நடந்ததோ எண்டும் தெரியேல்லை. கதைச்ச மாதிரியிலை பாத்தால் சீவன் பிரிய கன நேரம் எடுக்காது போலை? எதுக்கும் முதலிலை அவற்றை வீட்டுக்கே போறதுதான் சரியென." நினைத்துக்கொண்டார். அதற்குள் ஐந்து நிமிடத்துளிகள் கரைந்து அழிந்துபோயின.

"அட! நானொரு நாசமறுவான்! வெளிக்கிட முந்தி அங்கினேக்கை ஆருக்காவது போனடிச்சால் அவங்களும் தேடிப் பாப்பாங்கள் தானே?" தன்னைத்தானே திட்டியபடி மறுபடியும் இரண்டு இரண்டாகப் படிகளில் தாவி வீட்டுக்குள் புகுந்தார். கார் புகை கக்கியபடியே ஸ்ராட்டில் நின்றது.

வெள்ளிகிழமை, காலைப் பொழுது. ஒருதரையும் பிடிக்க முடியவில்லை. இந்த விசயத்தை எல்லாவற்றை காதிலையும் போடுறதும் அவ்வளவு நல்லதில்லை. நல்லவேளையாக கனகசபை மட்டும் அகப்பட்டான். விஷயத்தைச் சொல்லி அவரின் பெண்சாதி பிள்ளைகளை எங்காவது தேடிப்பிடிக்க முயலும்படி கூறிவிட்டு, பின் பொலிசிற்கும் தகவல் கொடுக்கலாமா? என்று நினைத்தார். இருக்கும் இடம் தெரியாமல் அவர்களிடம் சொல்லி என்ன புண்ணியம்? போனை வீசிவிட்டு, பாய்ந்து சென்று காரில் ஏறினார். சிறிது நேரம் லைற்றும் போட மறந்தபடியே வேகமெடுத்தார். முன்னால் வந்த வாகனக்காரன் கோண் அடித்து, நடுவிரலையும் காட்டினான். அதன் பின்புதான் லைற்றையும் தட்டிவிட்டார்.

எண்பது கி.மீ. ஓடவேண்டிய வீதிகளிலும் நூற்றி இருபது கி.மீ.யில் மிதித்துக் கொண்டு பாயந்தார். "பாவம்! அந்த மனிசனுக்கு என்னென்ன கஷ்ட துன்பங்களோ? விசர் மனிசன்! வெளிநாடு புறப்பட்டு கடலிலை சாகுதுகள்! பனிச் சேத்திலை புதையுதுகள்! உவன் பாவி உங்கை வந்து நஞ்சைக் குடிக்கிறானே! வெளிநாடு வந்தால் படிச்சவங்கடை மூளையிலையும் சிலந்தி கூடுகட்டியிடுதப்பா!"

"இனி மனிசன் செத்துத் துலைஞ்சால் சனம் சும்மா விடப்

padippakam

போகுதே? மனிசிக்காறி வயசாளியெண்டாலென்ன? அவளின்ரை நடத்தையிலையும் ஒரு கதைகட்டாமல் விடப்போகுதுகளே? பண்டி எலும்பு சப்புற வாயளெல்லே?ம் ஒண்டுக்கு ரெண்டு குமர்ப் பிள்ளையள் இனி அதுகளை ஆருக்காம் கட்டிக் குடுக்கிறது? கலியாணமெண்டு வந்தால் பெடியன் எத்தினை பூராயம் பிடிக்கிறாங்கள்!" வியாகர் பெண்டில் தலைவிரி கோலமாக ஒப்பாரி வைக்க.. பிள்ளைக் குட்டிகள் நிலத்திலை விழுந்து புரள.. சனம் அங்கங்கு கண்டமேனிக்குக் கதைச்சுத் துலைக்க.. குட்டியப்பா வாழ்க்கையில் முதல்தரமாக பொலீசுக்கு வாக்கு மூலம் கொடுப்பதுபோல அவலமான காட்சிகளே தாறுமாறாக வந்து போயின. காரை மேலும் வேகமாக மிதித்தார்.

திடீரென கண்களை வெட்டுவது போல இளநீல ஒளி மின்னலாய் அடிக்க, காதை அடைக்கும் ஒலி பக்கமாகக் கேட்டது. அம்புலன்ஸ் வண்டியாக இருக்கலாம் "ஒரு வேளை விழுந்து கிடக்கும் வியாகரைத்தான் தூக்கப் போறாங்களோ தெரியயேல்லை!" என்றபடி காரை ஓரமாக ஒதுக்கி வழிவிட்டார். அதற்குள் ஒரு வெள்ளைக்கார் வெளிச்சம் அடித்தபடியே அவரின் காரின் குறுக்காக வந்து நின்றது. அது அவர் நினைத்தது போல அம்புலன்ஸ் வண்டியல்ல.

வெளியே குதித்த இரண்டு பொலிஸ்காரர் அவரைக் காரை விட்டுக் கீழே இறங்குமாறு கத்தினார்கள். லைசென்சை வெடுக்கெனப் பிடுங்கிப் பார்த்தார்கள். காரை சுற்றிச் சுற்றி நோட்டம் விட்டார்கள். அவரால் விளங்க முடியாதவாறு வேகமாகக் கதைத்தார்கள். கும்பிட்டு மண்டாடி லைசென்சைக் காப்பாற்றிக் கொண்டார். கடைசியில் ஓவர் ஸ்பீட்டுக்காக இரண்டாயிரம் குறோண் தண்டம் கட்ட வேண்டுமென எழுதிக் கொடுத்து, எச்சரிக்கையும் செய்து புறப்பட்டனர்.

கஷ்டகாலத்தை நினைத்தால் குட்டியப்பாவுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. உள்ளதைத் திரட்டி மனுசிக்கு அனுப்பிப் போட்டு உருளைக் கிழங்கோடையும் வெள்ளைப் பாணோடையும் சீவியம் போகுது. இதிலை ரெண்டாயிரத்துக்கு ஆற்றை படலையைப் பிடுங்கிறதென்றும் தெரியாமல் தவித்தார். காரை நிதானமாகச் செலுத்திக் கொண்டே வியாகரின் வீடு வந்து சேர்ந்தார். அதற்குள் கனகசபை எல்லாரையும் கச்சிதமாகப் பிடித்து வந்துவிட்டான் – வியாகரைத் தவிர.

அவரின் மனைவி சவுந்தரி குத்துக் கல்லுப் போல பேசாமலே இருந்தாள். குட்டியப்பா நடந்ததை எல்லாம் மூச்சிரைக்க எடுத்துக்கொட்டினார். இதற்குள் வேறுசிலரும் தட்டுத் தட்டென்று வந்து சப்பாத்துக்களைக் கழற்றி வீசிவிட்டு, ஜாக்கட்டுக்களையும் உருவியபடியே உள்ளே பாய்ந்தனர். மனைவி பிள்ளைகளைப் பிடித்து



படிப்பகம்

padippakam

வா என்றால் கனகசபை ஊரையே கூட்டிவைத்துவிட்டு குந்தியிருப்பதைப் பார்த்தால் எரிச்சலாக வந்தது. அங்கிறுதத்தி என்று மனதிற்குள் திட்டிக்கொண்டார்.

வந்து சேர்ந்தவர்கள் வசமாக சோபாவில் சரிந்து கொண்டு, ஆளுக்கு ஆள் வெற்று வேட்டு யோசனைகளை பினாத்திக் கொண்டிருந்தனர். அனேகர் எதையாவது புலம்பி அது சரிதானா என்று பரிசோதிக்க முயல்வதும் தெரிந்தது. காரியம் எதுவும் ஆனபாடில்லை. மணிக் கூட்டைப் பார்த்தார். நிமிடத் துளிகள் வேகமாகக் கரைந்தன. வியாகர் மயங்கி விழுந்து நாற்பத்தைந்து நிமிடங்கள் பறந்து விட்டன.

யார் செய்த புண்ணியமோ நெட்டையான ஒருவர் ஏகாந்தமாக உள்ளே பிரவேசித்தார். எல்லோரையும் விலத்தியபடி நடு மண்டபத்திற்குள் வந்தார். கையில் ஓம்முருகா படம் போட்ட பை. உள்ளே, “வீடிஓ” கசற்றுக்களை அடைத்து வைத்திருந்தார். அவர் மட்டுந்தான் பிரயோசனமான தகவலொன்றைத் தந்தார். அதன்படி, நேற்று மாலை வியாகர் யாரோ ஒருவருடன் ஸ்டேசனடியில் நின்று தண்ணியடித்திருக்கிறார். ஓம்முருகா பை வைத்திருந்தவருக்கும் வியாகருக்கும் ஏதாவது கொடுக்கல் வாங்கல் இருந்திருக்குமோ? நினைத்துப் பார்க்கவும் நேரம் இடம் தரவில்லை.

ஸ்டேசன் பக்கம் போகலாமா? சவுந்தரியின் முகத்தைப் பார்த்தார். அவள் “கம்!” மென்று இருந்தாள். முகம் கருங்கல்லாய் இறுகிப் போயிருந்தது. விழிக் கடையில் மட்டும் ஒரு துளி நீர். “இந்தளவு தூரம் மனங்கள் இறுகிப் போச்செண்டால் பிரச்சனை பெரிசுதான். ஊரிலை இருந்தம் எவ்வளவு அன்பைப் பாசத்தைக் காட்டினம். இஞ்சை வந்து இவ்வளவு வன்மங்களை வளத்துப் போட்டம்! அதுதானே எங்கை பாத்தாலும் தற்கொலையளாக் கிடக்குது.” குசினிக்குள் நின்று கிழவி குரல் கொடுத்தது.

குட்டியப்பாவால் அமைதியாக இருக்க முடியவில்லை. தானே வியாகருக்கு உரிமைக்காரன் போல உணர்வு. ஏதாவது வேகமாகச் செய்தாக வேண்டுமென நினைத்தார். “இவ்வளவு தூரம் வந்தாச்சு ரெண்டாயிரம் குற்றப் பணம் வேறை கட்டவேணும்! அந்தக் காசை மனுசி பிள்ளையளுக்கு அனுப்பினாலும் சந்தோசமா தின்னுங்களே! ம்! எப்படியோ மனிசன்ரை உயிரையெண்டாலும் காப்பாத்திப் போடவேணும். ஆளைக் காப்பாத்தினால் அந்தக் காசை தராமலே விடப்போறார்?” கனகசபையையும் கூட்டிக் கொண்டு ஸ்டேசன் பக்கமாக ஓடினார். இடையில் யாரோ ஒரு முன்யோசனைகாரர்



படிப்பகம்

ஓடிவந்து வியாகரின் புகைப் படத்தைக் கொடுத்தார். படத்தைக் காட்டியாவது ஆளை விசாரிக்கலாம் அல்லவா?

திருநீற்றுப் பூச்சு, நடுவில் அப்பிய குங்குமம், தங்கப் பிறேம் போட்ட மூக்குக் கண்ணாடி, மாம்பழ நிறத்தில் பட்டுச் சால்வை சாத்தி, மனுசன் புகைப் படத்தில் பழுத்த பழமாக ஒழுகிநின்றது. அவரைத் தற்கொலைக் கோலத்தில் பார்க்க குட்டியப்பாவால் முடியாதிருந்தது.

ஸ்டேசன் வெறிச்சோடிக் கிடந்தது. எதிர் பார்த்தபடி எந்தக் தகவலும் கிடைக்கவில்லை. தூரத்தே ஒரு குருவிக்காரன் பியர்ப் போத்தலுடன் நின்றான். கையிலிருந்த படத்தைக் காட்டிக் கேட்டபோது, பலமாகச் சிரித்தான். பிறகு கறுவலான பெடியன் ஒருவனுடன் நேற்றுப் பார்த்தாகக் கூறினான். புகைப்படத்தைக் தனக்குத் தரும்படி கேட்டான். பிறகு தருவதாகக் கூறியபோதும் அவன் விடுவதாயில்லை. ஒருவேளை இந்தப் படந்தான் அந்தியட்டிக்குத் தேவைப்படுதோ ஆர் கண்டது. கடைசியில் இருபது குறோணை தெண்டங்கட்டியே அவனிடமிருந்து கழற்றிக் கொள்ள முடிந்தது.

“ஆரப்பா அந்தக் கறுவல்? தமிழராத்தானிருக்க வேணும்.” நினைத்துப் பார்த்த போது குட்டியப்பாவும் கனகசபையும் தங்களின் நிறங்களை மறந்து போயிருந்தனர். நாலைந்து கறுவல் தமிழர்களின் பெயர்கள் இருவரின் வாய்களிலும் வந்து போயின. நீளமாகத் தலை வளர்த்து, தோடு குத்தி, கைகால் நடுக்கமெடுத்து, வியாகர் போன்ற தாடி நரைத்தவர்களுடன் தண்ணியடிக்கும் கறுவல் யாரென்றால் கடைசியாக மிஞ்சியது கருணை ஒருவன் மட்டுந்தான். அவன் காலையில் ஜேர்மன் போய்விட்டதாக கனகசபை சொன்னான். அப்படியானால் வியாகர் கருணையின் வீட்டில் இருந்துதான் இந்த வேலையைச் செய்திருக்க வேணும். “ஐயோ இத்தறுதி மனுசன் செத்துத் துலைஞ்சுதோ?” மனம் ஓலமிட்டது. “டொங் டொங்!” கென்று பின்னணி இசை ஒன்று யாரும் வாசிக்காமலே காதிற்குள் குடைந்தது.

ஸ்டேசனில் நின்றபடியே இருவரும் பல இடங்களுக்கும் போன் செய்து ஒருவாறு கருணையின் இலக்கத்தை எடுத்து விட்டார்கள். அங்கு போன் செய்த போது, தொலைபேசி வேலை செய்யவில்லை. “கிளிங் கிளிங்!” என அடித்தது. போன் சரியாக வைக்கப் பட்டிருக்கவில்லை. அதிலிருந்து வந்த சத்தம் வியாகர் விழுந்தபோது வந்த சத்தம் போலவே கேட்டதால் வியாகர் அங்குதான் என்பதை உறுதியாக நம்பினார் குட்டியப்பா. போகும் இடத்தை வியாகரின் மனைவிக்கும் தெரிவித்துவிட்டு, மீண்டும் காரை வேகமாக மிதித்தார். கைக் கடிகாரம் “கீக்! கீக்!” என்று, வியாகர் விழுந்து சரியாக ஒரு மணிநேரம் என்பதைத் தெரிவித்தது.

வேகமாக வந்து தாவித்தாவி மூன்று மாடிகளையும் கடந்து வந்து கதவைத் தட்டியபோது முதலில் யாரும் திறக்கவில்லை. சிறிது நேரத்தின் பின் யாரோ தள்ளாடியபடி வந்து திறந்தது தெரிந்தது. அதே களையிழந்த முகம். வியாகர் அவர்களை எதிர்பார்த்திருந்திருக்க வேண்டும். "அண்ணே என்ன வேலை செய்து போட்டியள்!" என்றபடியே குட்டியப்பா அவர் மீது பாய முனைந்தார். ஆனால் அவர் அதற்கு இடம் கொடுக்காது சட்டென விலகிக் கொண்டார்.

"குட்டியப்பா! என்னை நெருங்காதை! கிட்ட வந்தியெண்டால் நஞ்சைக் குடிச்சிடுவன்." போத்தலை வாய்க்குக் கிட்டக் கொண்டு போனார்." அண்ணே! குடிச்சிடாதையுங்கோ!" அலறியபடியே விலகி நின்றார். குட்டியப்பாவின் மூளை மீண்டும் வேலை செய்ய சிறிது நேரமெடுத்தது.

"இந்த மனுசன் என்னம் நஞ்சைக் குடிக்கேல்லையே? அப்ப எப்பிடியாம் கீழை விழுந்திச்சுது?" குழப்பமேறியபடியே அறையைச் சுற்றி நோட்டம் விட்டார். திரும்பின திசையெல்லாம் வெறுமையான 'விஸ்கி' 'பியர்' போத்தல்கள். கல்லோயாச் சாரயப் போத்தல் ஒன்று அரைவாசி காலியாகி நின்றது. வியாகர் அதைத்தான் குடித்துவிட்டு விழுந்திருக்கிறார் என்பது தெரிந்தது. அறை நிறைய எரிந்த சீக்கிரட் கட்டைகள். புளித்த கள்ளின் வாசனை போல பியர் மணம் திரண்டு வந்து, ஆளை கொலரில் பிடித்து மேலே தூக்கியது. கனகசபையும், குட்டியப்பாவும் அவர் கைகாட்டிய இடத்தில் வேறு வழியின்றி கைகட்டி, வாய் பொத்தி அமர்ந்து கொண்டனர்.

வியாகர் நீண்டநேரமாக தனது இளமைக் கால வாழ்வின் விருத்தாந்தங்களை அழுதழுது பேசிக் கொண்டிருந்தார். மூக்கைச் சிமிந்தி சுவரில் துடைத்தார். சில நேரங்களில் பழைய பாடல்களைப் பாடினார். கேட்கக் கேட்க குட்டியப்பாவிற்குக் குளறி அழவேணும் போலிருந்தது. தான் வேலைக்குப் போகவேண்டி யிருப்பதையும், வியாகர் வீட்டிலும் எக்கச்சக்கமான சனம் கூடியிருப்பதையும் சொல்லி, வீட்டுக்குப் புறப்படும்படி கேட்டுக் கொண்டார்.

"நான் வரமாட்டன்! இனி அது என்ரை வீடில்லை. குட்டியப்பா! நீ மட்டும் என்ரை சோகங்களைக் கேட்காமல் போனியெண்டால் இப்பவே நஞ்சைக் குடிப்பன்!" போத்தலை மீண்டும் வாய்க்குக் கிட்டக் கொண்டு போனார். இருவரும் பயத்துடன் அமர்ந்து கொண்டனர். வியாகர் தொடர்ந்தார்.

"அந்தப் பிரச்சனை இந்தப் பிரச்சனையெண்டு அறுவத்திநாலு பிரச்சனையளைக் கதைக்கிறியள் என்ரை பிரச்சனையளை ஆர்

padippakam

கதைக்கிறியள்?" மேசையில் குத்திவிட்டு அதன் மேலேயே ஏறி அமர்ந்து கொண்டார். மனைவி பிள்ளைகளைத் திட்டித் தீர்த்துக் கொண்டார். முன்பின் சம்மந்தா சம்மந்தமில்லாமல் உளறிக் கொட்டினார். தான் ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி என்று நூறு தடவைகளுக்கு மேல் உச்சரித்தார். தலை மயிரைக் கோதி விட்டுக் கொண்டு அங்கும் இங்குமாக நடந்தார். உலகத்தைச் சுற்றிப் பார்க்க தனக்கிருக்கும் ஆசையைச் சொல்லி பத்தாயிரம் கடன் கேட்டார். நாலு நாட்களில் திருப்பித் தருவதாகவும் சொன்னார். நேரம் செல்லச் செல்லச் அவரிடம் நஞ்சைக் குடிக்கும் யோசனை இல்லையென்பது தெரிந்தது.

வசமாக மாட்டிக் கொண்டதாக எண்ணிய குட்டியப்பா சிறுவர்களை மட்டுமல்ல பெரியவர்களையும் சினிமா எப்படிப் பாதிக்கிறதென விளங்காமல் விளங்கிக் கொண்டார். வர வர மற்றவர்கள் சோகங்களைக் கேட்போர் இங்கு ஏன் அருகிப் போகிறார்கள் என்பதும் தெரிந்தது.

ஊரில் குடித்துவிட்டுப் புலம்பித் திரிந்த மயில் மேத்திரி, நடு ரோட்டில் நின்று வாகனங்களை மறித்து சண்டித்தனம் காட்டும் நெத்தலிமாமா போன்றவர்கள் நினைவிற்குள் வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் மன உழைவுகளைப் புலம்பி, முட்டுக்களைத் தீர்த்துக் கொள்ள ஊர்த் தெருக்கள் வழங்கியிருந்த சுதந்திரத்தை ஐரோப்பியத் தெருக்கள் வியாகர் போன்றவர்களுக்கு வழங்கவில்லை. அதனால் உருவாகியிருக்கும் புதிய புலம் பெயர் நோயே இப்படிப்பட்ட தற்கொலை நாடகங்களா என்பதையும் அவரால் கணக்கிட முடியவில்லை.

இங்கு குடித்து விட்டு தெருவில் நின்று புலம்பினால் அதை யார் கேட்பது? வாகனங்களை மறித்துச் சத்தமிட்டால் பொலீஸ்காரன் அள்ளிவிடுவான். யாரைப் பார்த்தாலும் நேரமில்லாத வாழ்வு. இப்படிப்பட்ட பினாத்தல்களை எப்படி எங்குதான் செலுத்துவது? இதுதான் எயிட்சுக்குப் பிறகு ஐரோப்பாவின்ரை புதிய நோய்! என்று எங்காவது போய்ச் சொல்ல வேண்டும் போலுமிருந்தது. மறுபக்கம் வேலைக்கு போகவேண்டிய அவசரம், கட்ட வேண்டிய தெண்டம், மனைவி பிள்ளைகளென தொடரா்க நினைத்த போது குட்டியப்பாவின் மனம், "ஆண்டவனே?" என்று அலறியது.

அவர் அலறல் ஆண்டவனுக்குக் கேட்டதோ இல்லையோ? யாரும் எதிர் பார்க்காதபடி "தடா" லென ஒரு சத்தம் மட்டும் கேட்டது! வியாகரின் மனைவி கதவை உதைத்தபடி புயலாக உள்ளே புகுந்தாள்.



படிப்பகம்

அவளைப் பார்த்து கதவைப் பூட்ட மறந்ததும் நல்லதாகப் போயிற்று என்று நினைத்துக் கொண்டார்.

'கிட்ட' வராதையடி! வந்தால் நஞ்சைக் குடிப்பன்! இண்டைக்கு உன்ரை சாயத்தைக் கழட்டுறன் பார்!"

"குடயடா! குடியடா! முதலிலை செத்துத் துலையடா! நீ செத்தா நான் ஆக்கின சோத்தை இன்னமொருக்காப் போட்டுத் தின்னுவன்!" வேகமாக வந்த சவுந்தரி வியாகரைப் பாய்ந்து பாய்ந்து அடிக்கத் தொடங்கினாள். நஞ்சுப் போத்தல் கீழே விழுந்தது. கனகசபை மின்னல் வேகத்தில் பாயந்து போத்தலைத் தூக்கினான். அவன் பாய்ந்து உருண்டதில் மெத்தைக் கட்டில் இரண்டாக முறிந்து சரிந்தது. நாரியில் பலத்த அடி! வேதனையால் குளறினான்.

போத்தலைப் பறித்து, மணந்து பார்த்தார். "இருமல் சிறப்!" என்று எழுதியிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்கக் குட்டியப்பாவுக்கு அழுகையும் சிரிப்பும் ஒன்றாக வெடித்துக் கொண்டு வந்தன. நேரத்தைப் பார்த்தார் மூன்று மணி நேரம் சுத்தமாக நாசம்.

மேற்கொண்டு எதுவுமே பேசாமல் தன்னந் தனியாக வெளியே ஓடினார். "அடிக்காதை இந்த பாட்ஷா ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி!" என்று வியாகர் அலறுவது படிகளின் வழியே கேட்டது. காரை எடுத்துக் கொண்டே ரெஸ்ரூரண்டை நோக்கி ஓடினார். "ஐயோ! ஏன் இப்படி! இந்த மன அழுத்தங்களுக்குக் காரணம் என்ன?" அவரால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஐரோப்பா முழுவதும் இப்படிப்பட்ட நோய் கடலின் அடியில் போகும் ஆழ நீராக ஓடிக் கொண்டிருப்பதாக எங்கோ படித்தது இப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. "சாய்!" இதை முந்தியே யோசிச்சிருந்தால் உவ்வளவு சீரழிவு பட்டிருக்கத் தேவையில்லை" எனவும் அலுத்துக் கொண்டார்.

பின் பக்க வழியால் ரெஸ்ரூரண்டிற்குள் பிரவேசித்து, வேலைத்தல உடைகளை அணிந்து கொண்டு, பதுங்கிப் பதுங்கிப் போய், தனது பங்கிற்கு வெட்ட வேண்டிய சலாட் தலைகளை உருட்டி எடுத்து, "சடசட!" வென வெட்ட ஆரம்பித்தார்.

ஒரு சலாட் தலையை கொத்தி முடித்திருக்க மாட்டார். அதற்குள் ஒருவர் வந்து அவரை முதலாளி கூப்பிடுவதாகச் சொன்னார். கத்தியையும் கீழே போட மறந்து, தலையை மன்றாடும் பாவனையில் ஒடித்துப் போட்டபடியே ஓடினார். "இந்தா பாரும் நீர் எந்த உலகத்திலை இருக்கிறீர்? வெள்ளிக் கிழமை பரபரப்பான நாள். இப்படி திடிரென லீவு எடுத்தால் எப்படி ரெஸ்ரூரண்டை நடத்துறது?" என

padippakam

ஆத்திரப் பட்டார். வேறு வழியில்லாததால் அவரின் இடத்திற்கு இன்னொரு தமிழரை நியமித்துவிட்டதாகவும் கூறி வருத்தப்பட்டார்.

குட்டியப்பா எவ்வளவோ மன்றாடிப் பார்த்தார். மனைவி, பிள்ளைகள், ஒரு இலட்சம் வட்டிகடன் போன்றவற்றையெல்லாம் சொல்லி மன்றாடினார். பலன் கிடைக்கவில்லை. அதெல்லாம் தன்னுடைய பிரச்சனையில்லையென்று முதலாளி அடியோடு கையை விரித்துவிட்டான். சொற்ப நேரம் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றார். வியாகரை ஒரு நொடி நினைத்தார். மனம் "பாட்ஷா!" என்று உரக்கக் கத்தியது. கையிலிருந்த கத்தியை விட்டெறிந்துவிட்டு, எங்கோ கால் போன போக்கில் நடந்தார். அந்த நடையின் வேதனையையும், நிஜமான புலம் பெயர் அவலத்தையும் ஸ்லோ மோஷனில் எடுத்து, மற்றவர்களுக்கும் காட்ட கையில் ஒரு அருமையான கமேரா இல்லாமல் இருந்தது.

(யாவும் கற்பனை)



படிப்பகம்

# இடிந்தவீடுகள்!

"என்ன கோதாரியடாப்பா! இதெல்லாம் எதுக்கு? முதலிலை இஞ்சத்தையிலுள்ள வாழ்க்கையை ஒழுங்காப் பதிவு செய்யுங்கோடா!" சினிமாவில் வந்தது போல செல்லமாகத் திட்டி, சிறுகதைப் பிரதியை மேசையில் வீசினார் மானாகானா.

கதையும் கத்திரிக்காயும்! அப்படியே கிழித்து வீசிவிடலாமென்று தோன்றியது. பெரிய எழுத்தாளர். இனி அவருக்கு முன்னாலேயே அப்படிச் செய்துவிட்டால் முகத்திலடித்தது போலிருக்காதா? வீண் பகைக்குப் பயந்து வந்த கோபத்தை நாலாக முறித்து, தானாகவே அடங்கிக் கொண்டான்.

புறப்படமுன் நறுக்குத் தெறித்தாற்போல நாலுதுண்டு வார்த்தைகளை வீசிவிட நாக்கு துடிதுடித்தது. அப்படிச் செய்தால் சும்மா கிடந்த மானாகானாவை வலியப் போய் சொறிந்ததாகப் போய்விடும் என்று அஞ்சினான்.

"அப்ப மறுபடியும் சந்திக்கிறன்!" புறப்படமுன் படைப்பாளி பஞ்சவர்ணத்தின் முகவரியையும் கேட்டு வைத்துக் கொண்டான்.

"சும்மாதானே போறாய்?" அந்த குப்பைப் பையையும் எடுத்து வழியிலை கொன்ரேனரிலை போட்டிட்டு போ" என்றார். முகம் கொடுக்க முடியாத நாற்றம். பையை தூக்கிக் கொண்டு நடக்க மனதில் ஏதோ தட்டியது. தாழ்மையாகத்தான் கேட்டான்.

"பிறந்த மண்ணிலை நாங்கள் சந்திக்க நேர்ந்த அவலங்களையும், உயிர்தப்பி அகதியாய் போனது வரையான அனுபவங்களையும் ஏன்

padippakam

இலக்கியமாக்கக் கூடாது? இது புலம்பெயர் இலக்கியத்துக்கு இருக்கிற முக்கிய கடமையளிலை ஒண்டெல்லோ?"

''எடேய் விசரா! கடமை சமூகத்துக்கு முன்மாதிரியா வாழவேண்டியது! இதெல்லாம் மணிக்கொடி காலத்து எழுத்தாளரோடை போயிட்டுது. இப்ப ஜஸ்ட் படைப்புகள் அவ்வளவுதான். "சிகரெட் புகையையும் வெற்றிலையையும் ஒன்றாகச் சப்பி, சன்னல் வழியாகப் பீய்ச்சியடித்தார்.

பைக்குள் கட்டியிருந்த நேற்றைய பழைய மீன் குடல்களும், தலைகளும் அவனை மேலும் இலக்கியம் பேச விடவில்லை. "சடக்" கென கதவைச் சாத்தினான்.

❖ ❖ ❖

''எங்கையடாப்பா மிலாந்துறாய்?'' வீட்டு வளவில் புல்லு வெட்டிக்கொண்டிருந்த பஞ்சவர்ணத்தார் குரல் வைத்த போதுதான் இரண்டு மூன்று வீடுகளைத் தாண்டி வந்துவிட்டது தெரிந்தது.

பியர் கேசையும், சிகரட் பக்கட்டுகளையும் மடைபரப்பி, அவருடன் புலம்பெயர் இலக்கியங்கள் பற்றிப் பேசத் தொடங்கினால் இலக்கியம் பரவசக் கூத்தாடும். அங்கை அந்தக் குரூப்! இஞ்சை இந்தக் குரூப்! இரத்தத்தின் பிரிவுகள் போல புலம்பெயர் இலக்கியத்திலும்.

மாதக்கடைசி பணம்விடும் நிலையில் இவன் இல்லை. எழுதிய சிறுகதையை மட்டும் காட்டி, திருத்தங்களைக் குறித்துக் கொண்டாலே போதுமென்றிருந்தது.

புல்லு வெட்டும் கைவண்டியைக் கிடப்பில் போட்டுவிட்டு, தலைப்பாகையைக் கழற்றி முகம் துடைத்துக் கொண்டார். கோடை வெயில் தோட்டத்தில் கிடந்த பிளாஸ்டிக் கதிரையில் இருவரும் அமர்ந்து கொண்டனர்.

"பானு! ரெண்டு டீ.. எங்கையடியப்பா சத்தத்தைக் காணேல்லை?" குரல் வைத்தார். பாத்ரூமிலிருந்து பதிலுக்கு ஒரு குரல் அடைப்பாகக் கேட்டது. இந்த வீட்டிலை எந்த நாளும் சமுத்திர தீர்த்தந்தான்" என்றபடியே எழும்பினார். இவன் மறித்துக் கொண்டான். முதலில் வந்த விடயத்தை விலாவரியாக எடுத்துச் சொன்னான்.

"சிறுகதையே? கொண்டா பாப்பம்! படிச்சுக் கனநாள்! அ.. சொன்னாப்போலை போன மாதத்து குளம் சஞ்சிகை படிச்சனியே?"

"ஓ! நேற்றுத்தான் கிடைச்சுது! உங்கடை தன்னைப் புகழாத கம்மாளனும் கதை.."



படிப்பகம்

"எப்பிடி எழுதியிருக்கிறன் பாத்தியே? சூப்பர் சிறுகதை! கனடாவிலை வைகறைத் தேவனாக்களே வலுதிறமான கதை எண்டவங்களெண்டால் பாரன்!" இனி மனிசன் கதையைப் பற்றி ஏதாவது கேள்வி கேட்டுவிட்டாலும் என்று பீதியடைந்தான். அந்தச் சிறுபொழுதில் அவன் முகம் அடைந்த மாறுதலும் கொண்டுவந்திருந்த கதையின் தலைப்பைப் போலவே இருந்தது.

"இடிஞ்சவீடு! என்ன... அ பேரடாப்பா! சரிசரி நீ ஓடிப் போய் அந்தக் கோப்பி மெசீனைத் தட்டிவிடு. அதுக்குள்ளை நான் படிச்சு முடிச்சிடுறன். "இவன் குசினிப் பக்கமாகப் போக கடதாசியின் ஓரமாக விரலை ஓட்டியபடியே நுனிப்புல் மேயத் தொடங்கினார். கோப்பியுடன் திரும்பி வரமுன்னரே கதை முடிந்து புற்தரையிலும் போடப்பட்டுவிட்டது. கோப்பி குடித்ததும் மூளைத்தண்டில் ஒரு புதுத் தெம்பு குத்த, நிமிர்ந்து கொண்டார். என்ன சொல்லப்போகிறார்?" திக்..! திக்..! கென்றது.

"ம்...!" தலையை ஆட்டினார்.

"இப்ப சிறுகதையளிலை நல்ல நல்ல படைப்புகளெல்லாம் வந்திட்டுது. நாட்டுப் பிரச்சனை பற்றி ஏன் எழுதினனீ?

"இடிஞ்சது என்ரை வீடு! சம்பவங்கள் எல்லாம் நான் மட்டும் கண்ணாலை பாத்தவை! அதைத்தானே கதையாக்கியிருக்கிறன்?"

"எண்டு நீயெல்லோ சொல்லுறாய்! அதை மற்றவன் பாத்திருக்கவேணுமே? கனக்க ஏன் உதிலை கிடக்கிறதுகளை என்னாலையே நம்ம முடியேல்லையே?"

"எத்தினையோ நாட்டவங்கள் புலம்பெயர்ந்து வந்து உலகத் தரத்துக்கு இலக்கியம் செய்து போட்டாங்கள். அவங்களெல்லாம் தங்கடை தாய் நாட்டைப் பற்றி எவ்வளவு அழகா எழுதியிருக்கிறாங்கள்?"

"அவங்களெங்கே நாங்களெங்கை?" தாழ்மைப் படுத்திச் சலித்தார்.

"அனுபவ உலையிலையிருந்து வெளிவாறது பம்மாத்தெண்டால் ஒரு நல்ல சிறுகதைக்கு இலக்கணமென்ன? சொல்லுங்கோ பாப்பம்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது! இப்ப நான் விமர்சகன். முதலிலை விமரிசனங்களை ஏற்கப் பழகுங்கோ! கனக்க ஏன்! இப்ப என்ரை தன்னைப் புகழாத கம்மாளனும் கதையையே எடுத்துப் பார் என்னத்தை எழுதினன்?"

இடையில் யாரோ ஒரு இலக்கியக் குழு இவர் மீது வைத்த விமர்சனம் நினைவுக்கு வர அதைத் தாங்க முடியாது அவர்களைத் தாறுமாறகக் கிழித்து வீசத் தொடங்கினார். மார்க்ஸ், லெனின், மாவோ தொடங்கி அனைவருமே புலம் பெயர் பதிவுகளாகிக் கொண்டிருந்தனர்.

❖ ❖ ❖

பஞ்சவர்ணத்தாரிடம் தப்பி போஸ்ட் மாஸ்டர் வீடு வந்து சேரப் போதும் போதுமென்றாகிவிட்டது.

"ஏண்டா தம்பி! கம்பர் என்ன ராமனையும், சீதயையும் கண்ணாலை பாத்துப்போட்டே ராமாயணத்தைப் பாடினவர்? பாஞ்சாலியைத் துகிலுரியேக்கை பாரதியார் என்ன பக்கத்து வீட்டிலேயே குந்தியிருந்தவர்? அவன் பஞ்சவர்ணத்தான் சொல்லுறபடி பாத்தால் கம்ப ராமயணத்தை எழுதினதே பிழையெல்லோ? கர்ர்த்..தூ.." பேசனுக்குள் சளியைத் துப்பி தண்ணீரை ஓடவிட்டார்.

சந்தனப் பொட்டு, காதிலை பூ, பேய் பிசாசுகள் அண்டாமல் கழுத்திலும் கைகளிலும் கட்டிய நூல்கள். அறுபத்தேழு வயதிலும் மாஜி போஸ்ட் மாஸ்டர் சிறிதும் தளரவில்லை. மகளின் பராமரிப்பில் ஓடும் சீவியம். மருமகனுக்கோ இவர் இங்கு வேண்டாத விருந்தாளி.

அவர் இங்கு வந்த புதிதில் ஒரு நாள் இவன் பெறுமதி வாய்ந்த மலர்ச் செண்டை அன்பளிப்பு செய்ய, மனிசன் அதை அலட்சியமாகப் பார்த்து, பெறுமதி புரியாது தூக்கியெறிந்தது இன்றும் நினைவிற்குள் கிடந்ததால்; எச்சரிக்கையாக உப்பு பிஸ்கட் பெட்டியோடு வந்திருந்தான். அத்தோடு சிறுகதையையும் சேர்த்தே கொடுத்தான்.

கதையைப் படித்துக் கொண்டிருந்தவர் ஏதோ நினைத்தபடி இடையில் நிறுத்தினார். "புகழேந்தியும் ஒட்டக் கூத்தனும் என்ன செய்தவங்கள்? ஆளையாள் கடிபட்டதுதானே மிச்சம்? கதையெல்லாம் கிடக்கட்டும் சொன்னாப்போல உவன் தம்பிராசன்ரை மாமன்காரனும் என்னோடைதான் இஞ்சை வந்தவன். அவனுக்கே இப்ப சோசலாலை காசு குடுக்கிறாங்களாம்.. ம்.! அங்கை என்ரை பென்சன் காசை விட்டுப்போட்டு வந்து, உங்கை ஒரு முத்திரைக்குக் கூட உதுகளட்டை ஊம்பவேண்டிக் கிடக்கு!" சிறுகதை நடுவழியில் நின்றிருந்தது.

தாகமெடுத்திருக்க வேண்டும். தேநீர் போட அவருக்கு அங்கே அனுமதி இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளே போய் ஒரு பிளாஸ்டிக் கிண்ணம் நிறையத் தண்ணீர் கொண்டு வந்தார். அதை அப்படியே வைத்து மேசையைப் பழுதாக்கவும் மனமில்லை. எங்காவது பழைய

padippakam

கடதாசிகள் இருக்கிறதாவென நோட்டம் விட்டார். ஒன்றும் அகப்படாதிருக்கவே, படித்து முடித்த சிறுகதையின் தாள்களின் மீது அந்தப் பாத்திரத்தை, "லொடக்!"கென்று குத்தினார்.

"நீ குறுந்தொகை படிச்சிருக்கிறியே? அதிலை வாறதுகளெல்லோ சிறுகதையள். பிறகு வ.வே.சு. ஐயர் என்ன அழகா எழுதினார். அதுக்குப் பிறகு எங்கை உருப்படியான சிறுகதைகள் வந்திருக்கு சொல்லு பாப்பம்? எட! தொல்காப்பியத்தைத்தான் விடு, நன்னூலார் சொன்னபடி பாத்தாலே உன்ரை கதையிலை எக்கச்சக்கமான இலக்கணப் பிழையள் கிடக்கே. நல்ல வேளை இந்தக் கண்றாவியளை எல்லாம் பாக்காமல் இலக்கண விளக்கச் சூறாவளி சிவப்பிரகாச சுவாமிகள் போய்ச் சேர்ந்திட்டார்." குலுங்கி குலுங்கி அழுதார். அவரால் தொடர்ந்து சிறுகதையைப் படிக்க முடியவில்லை. சுவாமி அறைக்குள் போனார். தான் கடைசியாகப் பாடி முடித்திருக்கும் ஏதோ ஒரு ஊரிலுள்ள அம்பாள் மீதான பாடல்களை எடுத்து வந்தார். நீண்ட நேரம் இராகமாகப் பாடினார். மகளும் மருமகனும் இல்லாதது இராக ஆலாபனைக்கு வசதியாக இருந்தது. இடையிடையே அதே சளியும் துப்பலும், சோசல் காசும்..

எல்லாவற்றையும் விட்டுப் போட்டு சூட்டோடு சூடாக அந்தச் சுவையான அம்பாள் பஜனையை அச்சுவாகனம் ஏற்றி வைக்கும்படி இவன் கைகளில் கொடுத்துவிட்டு, உப்பு பிஸ்கட் பக்கற்றை மெல்ல உடைத்தார். இவன் தண்ணீர்ப் பாத்திரத்தின் கீழ் சிக்கியிருந்த கதையின் தாள்களை விடுவிக்கப் போராடினான்.

❖ ❖ ❖

அன்று வெள்ளிக்கிழமை கொழுந்தரின் தமிழ்க் கடை பரபரத்துக் கொண்டிருந்தது. பன்னிரண்டு மணிக்கே வேலை முடிந்து வரும் சனங்கள் ஆளுக்கொரு தமிழ்ப் படத்துடன் எங்கோ ஓடிக் கொண்டிருந்தனர். கழுத்திலும், கைகளிலும் பொன்னாபரணங்களைப் பட்டை பட்டையாகச் சாத்தி, கல்லு மோதிரங்கள் பளிச்சிட, பம்பரமாகச் சுழன்றார் கொழுந்தர்.

கடைசியாக குறும்பு சஞ்சிகையில் வெளிவந்த தனது "ஆலையில்லா ஊர்" சிறுகதையைப் பற்றி அங்கு வந்த சிலரிடம் விசாரித்துப் பார்த்தான். எல்லோருமே நல்ல கதையென்று வாயாரப் புகழ்ந்து சென்றது மனதிற்குத் தெம்பூட்டியது. ஒருசிலர் மட்டும் கண்ணாடி இல்லாமையால் வாசிக்க முடியவில்லையென்றும் தெரிந்தது. ஆனல் சொல்லி வைத்தாற்போல் எல்லோருமே அக்கதையில் அரைவாசி வரை மட்டுமே படித்திருந்ததாகக் கூறிப் போனதுதான் குழப்பமாக இருந்தது. இனி எல்லாவற்றையும்



படிப்பகம்

அரைவாசி வரை எழுதினால் என்ன? ஒரு கேள்வி மண்டையைக் குடைந்தது.

"மரக்கறி வந்திட்டுதே"

"இந்தா வந்து கொண்டிருக்கு!"

"நாளைக்கு அப்புவுக்கு அந்திரட்டை. நூற்றைம்பது பேருக்கு சாப்பாடு. வெள்ளையரிசி மூட்டையும், பூசணிக்காயும்.."

"சாம்பிராணி, ஊறுபத்தி, கோபால் பற்பொடி, விளைமீன், கணவாய் பெட்டி ஒண்டு, மின்சாரக்கனவு..." கடையிரைச்சலில் எல்லாமே குழம்பிக்கேட்டது.

மேலே பார்வையை ஓடவிட்டான்.

முற்போக்கு, நாற்போக்கு, தலித்து, மெஞ்ஞானம், சினிமா, புலம்பெயர் பதிவுகளென வண்ண வண்ணமாகச் சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் தூக்கிலிட்டிருந்தார்கள். ஒசியில் படிக்காமலிருக்க எல்லாவற்றின் கால்களிலுமே கிளிப்புகள் அடிக்கப் பட்டிருந்தன.

அவைகளைத் தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்க யாராவது வாங்குகிறார்களா? என்று நெடுநேரம் அவதானித்தபடியே நின்றான். இப்போது தீண்டாமை தன் இருத்தலை இலக்கியத்திற்குள் மாற்றிக் கொண்டிருப்பதாக எழுத்தாளர் சங்கரன் ஒரு பேட்டியில் புலம்பியது சரி போலவும் பட்டது.

சனம் இருக்கும் அவசரத்தில் தன் சிறுகதையாகப்பட்ட மகாமேன்மை தங்கிய இடிஞ்ச வீட்டை இனி யாரிடம் வாசிக்க கொடுப்பதென்றும் தெரியாது தடுமாறினான்.

வீடு வந்து சேர இருட்டிவிட்டது. தோய்ப்பதற்காகக் குவிந்திருக்கும் துணிமணிகளும், பிள்ளைகள் தாறுமாறாக்கி வைத்திருக்கும் மண்டபமும் வழமை போலவே வரவேற்றன. அவனைக் கண்டதும் இன்றும் அதே பழைய கோணல் இருப்புச் சட்டியை அடுப்பின் மீது ஓங்கி அடித்தாள் மனைவி. தொடர்ந்து யாழ்பாடிக்குக் கிடைத்த வசைமாரிகள் இன்றும்.

அவனும் யாழ்பாடியைப் போலவே நாட்டைவிட்டு வந்திருந்தாலும்; அதே யாழ்பாடியைப் போல வீட்டைவிட்டு ஓடும்

padippakam

வழி தெரியாது தவித்தான். இலக்கியங்களைக் கொண்டு இந்த உலகில் எங்கு யாரிடம் ஓடுவது? "இடிஞ்சவீடு" சிறுகதையைக் குப்பைக்குள் சுழற்றி வீசினான்.

அப்போதுதான் இடிஞ்சவீடு அல்ல "இடிந்தவீடுகள்" என்று வேறொரு சிறுகதையை எழுத வேண்டியிருக்கும் அவசியம் மூளையில் மின்னலாய் வெட்டியது.

(யாவும் கற்பனை)



படிப்பகம்

# உச்சம் என்பது....!

அவளை முதல் முதலாய் பார்த்ததும் நான் ஆடிப்போனேன். யௌவனம் அப்படி வீசி இழுத்தது. தேகம் எந்த இடத்திலும் ஒரு கிராம் அளவுகூட கூடியோ குறைந்தோ போகாமல் கூர்மையாகவும், பளபளப்பாகவும் சொட்டுச் சொட்டாய் செதுக்கியது போல வெளிப்பட்டு நின்றது. பட்டு கூந்தலுக்குள். 'பளிச்'சென்று மாம்பழமாய் நின்றாள். கண்களிரண்டையும் மெல்ல உதறிக் கொண்டேன்.

"உங்கடை பேர்..."

"மீனாட்சி.."

"வித்தியாசமான பேரா இருக்கே?"

"..............."

"...பரவாயில்லை. கோப்பி... ரீ...சோடா.. ஏதாவது.. நீங்கள் விரும்பினால்?"

"வேண்டாம்!"

"உங்களுக்குப் பத்து மணிக்குத்தான் கதைக்க நேரம் ஒதுக்கியிருக்கு. அதுவரை இந்தப் பேப்பர் புத்தகங்களைப் படிச்சுக் கொண்டிருக்கலாம். நான் வந்து திரும்பவும் கூப்பிடுறன்."

அவளுடைய பெயரை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டும் நான் அப்படிக் கேட்டது சரியா? மனம் பிழையென்றே கூறியது. முதலில்

பெயரைக் கேட்பது, பின்னர் அதையே கோதிக் கோதிக் கதையை வளர்த்தெடுத்துவிடும் என் பாணிக்கு அவள் தன் மௌனத்தால் ஒரு உருண்டையான முற்றுப் புள்ளி போட்டுவிட்டாள். பிடிவாதம் பிடித்துக்கொண்ட கண்கள் மறுபடியும் அவள்மீது ஒழுக்கக்குறைவாய் பாய்ந்தது. அதன் சுதந்திரப் பாய்ச்சலுக்குக் கடிவாளம் போட வழி தெரியாது கதவை மட்டும் இழுத்துச் சாத்திக் கொண்டேன்.

"பாவிப்பயல் கிரி இவளைப் போய் வேண்டாமென்று சொல்கிறானே? ஏன்.. இவளுக்கு என்னவாம் குறை?" அறிய வேண்டும் என்பது அந்தரமும் அவசரமுமாய் அலப்பாரித்தது. கடிகாரத்தைப் பார்த்தேன் பத்து மணிக்கு யுகங்கள் போல ஐந்து நிமிடங்கள் பாக்கியிருந்தன.

அவளைப் பற்றிய தகவல்கள் அடங்கிய சிறு குறிப்புரையை நேற்றே படித்துப் பார்த்துவிட்டேன். அவளின் டென்மார்க் வாழ்க்கையின் அகவை ஆறு மாதங்கள் மட்டுமே. கருத்துள்ள பெண், தான் நினைத்ததை சரியென வாதிடுமளவிற்கு படிப்பிருந்தது. சூழ்நிலைக்குள் இசைவாக்கம் பெற முடியாததால் அவளது இளைய மணவாழ்க்கை முறிவடைந்திருக்கிறது என்பன போன்ற தகவல்களை அதன் மூலம் மேலோட்டமாக அறிந்து வைத்திருந்தேன்.

இங்குள்ள தமிழர்களிடம் விசாரித்துப் பார்க்கவும் எனக்கு அதிக வாய்ப்பில்லை. டெனிஸ் மனைவி, கருப்புத் தலையும் வெள்ளரிப்பழ மேனியுமாய் ஒரு மகள். டெனிஸ் சமூகத்திற்குள் புதைந்து போன வாழ்க்கையென ஒதுங்கி இருக்கும் எனக்கு தமிழர்களோடு தொடர்பு குறைவு. இந்த மொழி பெயர்ப்பு வேலை ஒன்று மட்டும்தான் அடிக்கடி என்னைத் தேடிவரும் ஒரேயொரு தமிழ் நண்பன். அனெலீசாவும் நானும் காலையிலேயே அவள் கணவன் கிரியுடன் கடைசி முறையாகப் பேசி முடித்துவிட்டு வந்திருந்தோம். அவனின் முடிவில் எந்த மாற்றமுமே இல்லை.

மறுபடியும் சமூக சேவைகள் அதிகாரியின் அறைப் பக்கமாக நோட்டம் விட்டேன். உள்ளே யாரோ ஒரு பிரகிருதி மேசையில் அடித்துக் குத்தி சத்தமாகக் கொக்கரித்துக் கொண்டிருந்தது.

கோயில் மூலஸ்தானத்தை விட இந்த அறைக்கு மகிமை அதிகம். தங்கள் அந்தரங்கங்களையும், மற்றவர்களின் வாழ்க்கையையும் உள்ளே வந்தவுடனேயே பலர் அவிழ்த்துக் கொட்டிவிட்டு, அறையின் ஜோதியில் அப்படியே கலந்து போய் விடுவார்கள். இந்த அருள் பெற்ற அடியார்களின் கதையை வெளியில் சொல்ல முடியாதவாறு என்

வாயில் இரகசியக்காப்பு, சத்தியப் பிரமாணமென ஏகப்பட்ட இரும்புப் பூட்டுக்கள் கொழுவிக் கிடந்தன.

கையில் வெண் சுருட்டை ஏந்தியபடி யோசனைப் படிகளில் வழுக்கி வழுக்கி விழுந்து கொண்டிருந்தேன். சரியாகப் பத்து மணிக்கு அழைப்பு வந்தது. மீனாட்சியையும் கூட்டிக்கொண்டு அறைக்குள் போய் அனெலீசாவின் கையைப் பற்றி, ஒரு குலுக்குக் குலுக்கினேன்.

மீனாட்சியைக் கண்டதும் அனெலீசா எழுந்து நின்று சிரித்தாள். அவள் கையை இரண்டு தடவைகள் குலுக்கி கடைசியாக, “உனக்கு மட்டுமே” என்பது போல மேலதிகமாக ஒரு உன்னலுடன் கையை அழுத்தி வரவேற்றாள். பதிலுக்கு வந்த மீனாட்சியின் சிரிப்பிற்குள் அனெலீசாவிற்கான வணக்கம் மரியாதையோடு வந்து போனது.

மூவரும் ஒன்றாக அமர்ந்து கொண்டோம். உரையாடலின் வழிநெடுகக் கற்களையும் முட்களையும் தூவி, பாதி வழியிலேயே வேதனைப்பட்டுப் போகும் அதிகாரிகளைப் போலல்லாது நோகாமலே பேசும் திறமை படைத்தவள் அனெலீசா. அவளுடைய சொற்கள் ஒவ்வொன்றும் பட்டுக் கம்பளத்தில் நடத்திச் செல்வது போல வருத்தமின்றி கூட்டிச்செல்லும்.

மீனாட்சியின் காலடிக்குள் அவள் ஒரு மிருதுவான வெல்வெற் கம்பளத்தை விரித்து விட்டதை என் அனுபவத்தால் கண்டேன்.

பத்து வருடங்களாகத் தமிழர்களை கரைத்துக் குடித்திருக்கும் அனெலீசாவின் நீலக் கண்களில் இப்பொழுது ஒரு புதிய மூக்குக் கண்ணாடி கெம்பீரமாகக் குந்தியிருந்தது. என்னை ஒருமுறை சரிந்து பார்த்தாள். வழமையான சாத்துப் படிகள் முடிந்துவிட்டதை அந்தப் பார்வைக்குள் கண்டு கொண்டு, மொழி பெயர்ப்புக்காகக் குரல் வளையை உரசிக் கொண்டேன்.

“உமக்கும் கிரிக்கும் திருமணத்திற்கு முன்பே பழக்கமிருந்ததா?”

“இல்லை”

“அவர் உமக்கு உறவினரா?”

“இல்லை.”

‘‘அப்படியானால் அவர் உம்மை என்ன அடிப்படையில் திருமணம் செய்ய முன்வந்தவர்?

padippakam

“நான் அழகா இருந்திருக்கலாம்.”

அனெலீசா அவளைக் கூர்ந்து பார்த்தாள். அவள் அழகிதான் என்பதை ஆமோதித்துக் கொண்டே, “வெறும் அழகை மட்டும் மூலதனமாக வைத்துக் கொண்டு, திருமணத்தை நடத்திவிட முடியுமா?” என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

“எங்கடை சமூகத்திலை பெரும்பான்மையான ஆட்கள் அழகு, பணம் இவை இரண்டையும்தான் திருமணத்தின் அடிப்படை என்று நினைக்கிறார்கள்.”

அனெலீசா சரியா என்ற வினாக்குறியோடு என்னைக் கூர்ந்து பார்த்தாள். நான் வெறும் தமிழ் டெனிஸ் அகராதியாகவே இருந்தேன். சொந்தக் கருத்துக்களைக் கூறி வயிற்றுப் பிழைப்பில் மண்ணள்ளிப் போடாத இளித்தவாய்ச் சிரிப்பை என் முகம் முழுவதும் பூசி வைத்திருப்பதைக் கண்டு, மறுபடியும் மீனாட்சியின் பக்கமே திரும்பிக் கொண்டாள்.

“உம்முடைய அழகை கிரி எப்படிக் கண்டு கொண்டார் என்றாவது நான் அறியமாலா?”

“வீ.டி.ஓ.! கசற் மூலம்தான் அவர் என்னை முதல் முதலா பார்த்தவர். எந்த விழாக்குப் போனாலும், கலியாண வீட்டிலை அரசாணி மரம் நட்ட மாதிரி அதைத்தான் நடுவிலை வைச்சிருப்பினம். தலையிலை இருந்து கால்வரை படமெடுக்கிற நரக வேதனைகளை இதைப் பார்த்தால் நீங்களும் விளங்கிக் கொள்ளலாம்.” என்றபடி ஒரு ஒளி நாடாவைப் பையிலிருந்து எடுத்து நீட்டினாள். அதை வாங்கிய அனெலீசா உடனே அதை போட்டுப் பார்க்க ஆயத்தமானாள்.

அது ஒரு திருமண நிகழ்ச்சி. எங்கேயோ ஒரு கோயிலில் நடந்திருக்கிறது. முகங்கள் தெரியாத உடல்கள். உடல்கள் இல்லாத முகங்கள் என்று ஒரு வயது வந்தோருக்கான சினிமாவே எடுக்கப்பட்டிருப்பது தெரிந்தது. மீனாட்சி கண்களை மூடி, கைகள் இரண்டையும் தலைக்கு மேலாக உயர்த்தி வணங்கியபடியே நின்றாள். தருணம் பார்த்த வீ.டி.ஓ. படப்பிடிப்பாளர் மனம் போல அவள் உடலெங்கும் மேயந்து தள்ளியிருந்தார். அதற்கு மேலால் முக்கலும் முனகலுமாக ஒரு அசிங்கமான சினிமாப் பாடல் பதிவாகியிருந்தது. ஒரு அழகான பெண்ணை ஆபாசப் படத்தோடு பார்த்து, அதே அசுர வேகத்தில் இந்தத் திடீர் திருமணம் அரங்கேறியிருப்பதைக் கண்டுகொண்டேன். மீனாட்சி நிற்குமிடங்களை மட்டும் திருப்பித் திருப்பிப் பார்த்திருப்பதால் அந்த இடங்களில் மட்டும் காயம் பட்டது போல ஒளிநாடாவில் கோடுகள் விழுந்திருந்தன.



படிப்பகம்

கலாச்சாரம் பற்றி நிறையப் பேசுகிறீர்கள் இந்த மாதிரி வீ.டி.ஓ. கலாச்சாரமும் உங்களுடையதுதானா என்று கேட்பது போல அனெலீசா ஒரு பார்வையை வீசினாள். அந்தச் சவுக்கு என்னையும் ஒரு சுற்றுச் சுற்றிப் பாட்டமாக விழுத்தியது. தொலைக் காட்சியை அணைத்து விட்டு மறுபடியும் வந்து அமர்ந்து கொண்டாள்.

"இப்படியான வெறும் படத்தை மட்டும் பார்த்துவிட்டு ஒரு திருமணமே நடந்தும் முடிஞ்சிருக்கு மற்ற விசயங்களைப் பற்றி உம்முடைய பெற்றோர் ஆராய்ந்து பார்க்கவில்லையா?"

"இல்லை! அதைத் துருவித் துருவி ஆராஞ்சால் மற்றவைக்கு விசயம் தெரிஞ்சுபோடும்... பிறகு அதே சனமே முடைஞ்சு விட்டுக் கலியாணத்தையும் குழப்பிப் போடுங்கள். எங்களைப் பொறுத்தவரை கலியாணம் முடியும்வரை எல்லாம் காதும் காதும் வைச்சபடிதான். மீனாட்சி சொன்னதை அனெலீசா கூர்மையாகக் கேட்டபடியே சுவரில் ஒட்டியிருந்த சிறு விளம்பரத்தையும் ஒரக்கண்ணால் பார்ப்பது தெரிந்தது.

குழந்தையின் படமொன்றுடன் கூடிய அந்தச் சுவரொட்டியில், "பெற்றோரின் ஆளுமையே பிள்ளையின் அத்திவாரம்." என்று எழுதியிருந்தார்கள். அவசரக் கலியாணங்கள் பிரசவித்த அந்தக் குழந்தையின் கையறு நிலையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இதையும் ஒரு காரணத்தோடுதான் ஒட்டியிருக்கிறார்கள் என்ற நினைவுகளில் அமிழ்ந்தவன் இடையில் அனெலீசா ஏதோ கூறத் தொடங்கவே மறுபடியும் விழித்துக் கொண்டேன்.

"நீங்கள் முதல் பிழையையே பெரிய பிழையாக விட்டிருக்கிறியள். இந்தப் பத்திரிகையைப் பாரும்." என்று கொழுவியிலிருந்த வாரப் பத்திரிகை ஒன்றை எடுத்து வந்து மேசையில் புரட்டிப் போட்டாள். அதில் ஒரு பக்கம் முழுவதும் இவ்வாரம் திருமணம் செய்தவர்களின் புகைப்படங்களே நிறைந்திருந்தன.

சிறிது நேரம் அதையே பார்த்த படியிருந்த மீனாட்சி, "நிறையத் தம்பதிகளுக்கு நாற்பது வயது தாண்டியிட்டுது. எல்லாமே வயசு கழிஞ்ச திருமணங்களாக கிடக்கு," என்று தனது கருத்துக்களைக் கூறியபடியே பத்திரிகையை ஒரமாக மடித்து வைத்தாள்.

"திருமணத்தை விளங்காத வயதில் திருமணமும், பிள்ளை வளர்ப்பை அறியாத நிலையில் குழந்தையும் ஆபத்தானவை என்ற தெளிவு திருமணத்திற்கு முந்தியே வரவேணும். ஆனால் நீரோ எந்தவிதமான முன் ஆராய்வுமில்லாமல் திருமணம் செய்திருக்கிறீர்.!

padippakam

ம்.. கிரி ஏற்கனவே ஒரு டெனிஸ் பெண்ணோடை வாழ்ந்திருக்கிறார்.. என்ற செய்தியாவது உமக்குத் தெரியுமா..?"

"ம்ஹம்..! அதை நான் அறிய முந்தியே எல்லாம் முடிஞ்சது. அப்பிடிப்பட்ட விஷயங்களை கலியாணத்துக்குப் பிறகு ஆராய்ந்தால் இருக்கிற வாழ்க்கையும் நரகமாய் போயிடுமே..? உண்மையாக கிரியின்றை பழைய கதையைக் கேள்விப்பட்ட உடனேயே நானும் ஒரு வழி தவறின ஆணுக்கு வாழ்வளிச்சிருக்கிறனே என்று எனக்குள்ளேயே நினைச்சுத்தான் ஆறுதலடைஞ்சனான். ஆனால் கிரியோ.." என்று இடையிலேயே நிறுத்திக் கொண்டாள். அவள் சொல்லாமலே விட்டுவிட்ட செய்திகளெல்லாம் கண்களின் சுரப்பிகள் வழியாக நீராகி வெளியே கசிவது தெரிந்தது.

"இதிலை உம்முடைய பாஸ்போட் இருக்கு.. இது உமக்கான ஒரு வழிப் பயண விமான ரிக்கற்.. இது வழிச் செலவுக்கான பணம். நாளை காலை சரியாக ஏழு மணிக்கு உமக்கு விமானம்." என்று சட்டென விஷயத்திற்குள் பாய்ந்தாள் அனெலீசா. இதுவரை தமக்குள்ளேயே பந்தை உதைத்துக் கொண்டிருந்த அணியொன்று திடீரென்று பந்தை வேகமாக எதிரணிக்குள் உதைத்தது போல, கோல் போடும் எல்லைக்குள் அவள் தலையை நீட்டிவிட்டது தெரிந்தது.

மீனாட்சிக்கு ஒருவேளை இது அதிரடியாக இருந்திருக்கலாம். அவள் கேவிக் கேவி அழுதாள். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தாள். அவள் கன்னங்களின் திட்டுக்களில் இரத்தம் சுண்டித் தெறித்தது. கண்களைத் துடைக்கத் துடைக்க நீர் கட்டுப்படாது பெருகியது. ஏனென்று தெரியாது எனக்குள் எழுந்த கோபம் யாராவது ஒருவரின் கன்னத்தில் ஓங்கி விளாச வேண்டும் என்று துடியாய்த் துடித்தது.

"குமார் இதிலை கிரி சொன்ன குற்றச்சாட்டுக்கள் எல்லாம் வரிசைக் கிரமமாக எழுதியிருக்கு. எதற்கும் அதையும் ஒருக்கா வாசிச்சுக் காட்டும்." என்று ஒரு "ஏ நான்கு" அளவுத்தாள்களைக் கொண்ட கட்டை என் எதிரில் போட்டாள். அவற்றை வடிவாக வாசித்து விட்டு அவளிடம் சாராம்சத்தை மட்டும் எடுத்துச் சொன்னேன்.

"ஒன்று: எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் நீர் கிரி விரும்பின வாழ்க்கை முறைக்கு இசைவாக்கம் அடையவில்லை. இரண்டு: உம்முடைய ஊரைச் சுற்றியிருக்கிற எந்தக் கோயிலில் கொடியேறினாலும் நீர் விரதம்தான். உம்மாலை வேலைக்குப் போற அவரும் விரதம். செவ்வாய், வெள்ளி, சனி மூன்று நாட்களும்



படிப்பகம்

மரக்கறி.. இதைவிட ஆவணி ஞாயிறு, ஐப்பசி வெள்ளி, கார்திகைத் திங்கள் என்று வருசம் முழுதுமே விரதங்கள். இவைகளாலேயே அவர் நிறையக் களைத்துப் போனார். மூன்று: கிரியின் டெனிஸ் நண்பர்களோடை உம்மாலை சரிவரப் பழக முடியேல்லை. நான்கு: பப்படம், வத்தல் மிளகாய், சுண்டங்காய்ப் பொரியல், தோசை, இட்டலி என்று சாப்பாட்டு முறைகளைக் கூட நீர் இதுவரை மாற்றயமைக்கவில்லை... உமக்கு ஒரு டெனிஸ் சாப்பாடு கூடதயாரிக்க முடியாது." என்று அடுக்கிக் கொண்டே போனேன். அவள் என்னை இடையில் மறித்துக் கேட்டாள்.

"இதெல்லாம் நான் சின்ன வயிசிலே இருந்தே தெரிந்தோ தெரியாமலோ பழகின பழக்கங்கள். பழக்கங்களை காலத்துக்கேற்ப மாற்றத்தான் வேணும். ஆனால் எல்லாத்தையுமே எப்பிடி ஒரேயடியாக கைவிடுறது? எதுக்குமே கொஞ்சக் காலம் எடுக்கு மெண்டாவது யோசிக்க வேண்டாமோ?"

"நீர் சொல்லுற நியாயத்தைக் கிரியும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் பாலியல் கல்வியை பாடசாலையிலை படிக்காமல் வாழமுற்படுற வாழ்கையில் ஒரு முழுமை பெறமுடியாது என்று அவர் வாதாடுறார். பாலியல் கல்வியை சின்ன வயசிலேருந்தே படிச்ச ஒரு டெனிஸ் பெண்ணோடை அவர் வாழ்ந்திருக்கிறார். பிறகு அதே வாழ்க்கையை உம்மோடையும் தொடங்கின பிறகுதான் மலைக்கும் மடுவிற்குமான ஒரு பெரிய இடைவெளியை அவர் கண்டிருக்கிறார். உம்முடைய ஆசாரங்களுக்குள்ளாலை இந்த உச்சங்களை அடைய உம்மாலை முடியாது. அவரை அனுசரித்துப் போக முடியாத உம்மோடை தொடர்ந்து வாழ்வது பயனற்றதென்றே அவர் உறுதியாக சொல்லுறார். நீங்க ரெண்டு பேரும் பிரிந்து போறதிற்குப் பிரதான காரணமே இதுதான்." என்று கூறிமுடித்தேன். அவள் இம்முறை என்னையே பார்த்தபடி தன் கேள்வியைக் கேட்டாள்.

"இந்தக் குறிப்பை நீங்கள் படிச்சுக் காட்ட முந்தி, கிரி ஏன் அந்த டெனிஸ் பெண்மணியோடை வாழ முடியாமல் போனது..? என்ற கேள்விக்கும்விடை சொல்லியிருக்க வேணும்." என்றாள். நான் அதை மொழி பெயர்த்தேன்." கேட்டவுடன் அனெலீசா வருத்தமாகச் சிரித்துக் கொண்டாள்.

"அந்த டெனிஸ் பெண்ணையும் நாங்கள் விசாரிச்சிருக்கிறம். உம்மை என்ன காரணத்திற்காக கிரி வேண்டாமென்றாரோ அதே காரணத்திற்காகத்தான் அவளும் கிரியை வேண்டாம் என்றிருக்கிறாள்." என்றபடி அனெலீசாவின் குரல் மெல்லப் பதுங்கி, பூனைபோல என் முன்னால் வந்து குத்தியது.

"எலியைப் பூனை வருத்தும், பூனையை நாய் வருத்தும் என்ற மாதிரித்தானே எல்லாம் நடந்திருக்கு... இதிலையிருந்து நீங்களாவது சில விஷயங்களை விளங்கியிருக்க வேணும்.?" என்று அவள் சற்றுக் காட்டமாகக் குரல் கொடுத்துக் கேட்டாள். அனெலீசா பதிலின்றி மௌனமாக இருந்தாள். ஒரு சில வினாடிகளில் மீனாட்சியே பதிலையும் கூறினாள்.

"திருப்திக்கு உச்சுப் புள்ளி கிடையாது. உச்சங்களையும் திருப்திகளையும் தேடி நாங்கள் டென்மார்க் வரை வந்தது முதல் பிழை. இங்கை வந்ததும்; உச்சத்திற்கு முற்றுப் புள்ளி கிடையாது என்பதை கண்டு பிடிக்க முடியாமல் அலையிறது அதைவிடப் பெரிய பிழை!" என்று கூறிவிட்டு எழுந்தாள்.

இப்பொழுது அனெலீசாவின் வைரத் தோடுகள் போன்ற கண்களில் ஒளி தெறித்தது. கண்ணாடியைக் கழற்றிவிட்டு மீனாட்சியையே பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்தாள். மலிவு விலை விளம்பரப் பத்திரிகைகளில் மறைந்து போகாத ஒரு தமிழ்ப் பெண்ணின் முகத்தைப் பார்த்த திருப்தியை அவளின் கண்களிலிருந்து என்னால் தெளிவாக வாசிக்க முடிந்தது.

இப்படிப்பட்ட ஒருத்தியே இங்கு தேவையானவள் என்று ஒரு வேளை அனெலீசா நினைத்திருக்கலாம். "நீர் இந்த நாட்டில் தொடர்ந்து வாழ விரும்புகிறீரா..?" என்று அவளைப் பார்த்து ஆதரவாகக் கேட்டுக் கொண்டாள்.

"கேட்டதற்கு நன்றி.. உங்கடை சட்டப்படி இனி எனக்கு இந்த நாட்டிலை இருக்க அனுமதி கிடையாது. நான் ஊர் திரும்பச் சம்மதம் தெரிவிச்சுக் கையெழுத்தும் வைச்சிட்டன்."

"நீர் இங்கை இருந்தது கொஞ்ச நாட்கள்தான்; ஆனால் அனுபவங்கள் நிறைய என்று நினைக்கிறன்..!"

"உண்மைதான் இங்கை நிறையப் பேர் நாட்டை விட்டு மட்டுந்தானே புலம் பெயர்ந்திருக்கிறம் என்று பத்து வருஷங்களா நினைச்சுக் கொண்டிருக்கினம். இது பெரிய பிழை. உண்மையிலை இப்ப நாங்கள் எங்கடை இனத்தை விட்டும் புலம்பெயரத் தொடங்கியிட்டம்...!" என்று ஆணி அடித்தது போலச் சொன்னாள். அவள் முகத்திலும் தொனியிலும் நிதானம் கூர்மை பெற்றிருந்தது. கண்ணீர் வெள்ளத்தில் அடிபட்டுப் போய்விடாது அவள் நிமிர்ந்து நின்றாள். வழியற்ற நானும், அனெலீசாவும் வழமைபோல ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

padippakam

"கடைசியாக நீர் கிரிக்கு ஏதாவது சொல்ல விரும்புகிறீரா?" இதை அனெலீசா தயங்கித் தயங்கியே கேட்டாள். அது போலவே நானும் தயங்கித் தயங்கியே சுவை கெடாத தமிழில் எடுத்துச் சொன்னேன்.

"இனி என்னத்தைச் சொன்னாலும் அது பயனில்லாத விஷயந்தான். இருந்தாலும் பாலியல் கல்வியை பரீட் சார்த்தமாகப் படித்த கிரியின்ரை மேதைத்தனத்திற்கு முன்னாலை நான் ஒண்டுமே தெரியாத பாமரப் பெண்ணா நிக்கிறதிலை பெருமைப்படுறன் என்றதை மட்டும் மறக்காமல் சொல்லிடுங்கோ..!" என்றுவிட்டு ஒரு கடித உறையை முன்னாள் நீட்டினாள். அதை அப்படியே வேண்டி அனெலீசாவிடம் கொடுத்தேன். அதற்குள் அவளின் மூன்று சோடிக்காப்புகள் இருந்தன. எதற்கு என்பது போல அனெலீசா ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"கிரி வந்தால் இந்தக் காப்புகளையும் அவரட்டைக் கொடுத்திடுங்கோ.! இந்தப் பிளைட் ரிக்கட்டுக்காக அவரட்டை நான் கடமைப்பட விரும்பேல்லை.. ரூசன்ரக் போ ஜெல்ப்.. போவெல்..! சிரித்தாள். இது மட்டுந்தான் ஆறுமாதமா நான் பழகின டெனிஸ் வணக்கம்." என்றபடி அவள் கடைசிப் புகைவண்டிபோல கடகடவென படிக்கட்டுக்களால் இறங்கி மறைந்து விட்டாள்.

அனெலீசா எஞ்சியிருக்கும் என்னை மட்டும் பார்த்தாள். என்னிடம் பேச மொழியில்லை. புலம்பெயர் வாழ்க்கை இன்னொரு பண்பாட்டுப் புலம் பெயர்தலுக்குள் இடம் மாறி விட்டதா? மேலங்கியையும் தொப்பியையும் எடுக்க மறந்து போய் காற்றில் பறக்கும் கடதாசி போல எனது காரை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

●



படிப்பகம்

padippakam

# கடன்பட்டார் நெஞ்சம்!

“ஏதோ இருநூறு முன்னூறெண்டால் போகுது. இது இருவத்தையாயிரம் குறோணர். இலங்கை கணக்குப்படி பார்த்தால் ரெண்டுக்கு மேலையெல்லோ போகுது... வடுவாப்பயல்! ஏன்டா செம்பரி உவன் கனகனைக் கண்டனியே?” வங்கியின் வாசலில் நின்று உறுமிக் கொண்டிருந்தான் தங்கவடி.

அவனைப் போல வேறு சிலரும் வங்கிக்கு முன்னாலும், பின்னாலும் சென்றி போட்டிருந்தனர். தூரத்தே கருப்பாகத் தலைகள் தெரிந்தாலே போதும் கொக்கு போல கழுத்தை நீட்டுவார்கள். சம்பளம் விழுந்தகையோடு ஆட்களை மடக்கினால் மடக்கியது. இல்லாவிட்டால் அடுத்த மாதமோ பின் அதற்கும் அடுத்த மாதமோ..

கனகுவை அங்கு அதிகமானவர்களுக்குத் தெரியும். சோலியில்லாத சீவன். தானுண்டு தன் வேலையுண்டென்று அமைதியாக வாழ்பவன். அவனுக்கு என்னென்ன கஷ்டங்களோ? ஊரில் தாய் தகப்பனுக்கோ, அல்லாவிட்டால் சகோதரங்களை வெளியில் கூப்பிடுவதற்கோ கடன் பட்டிருக்கலாம். யாருக்குத்தான் பணக்கஷ்டமில்லை.

“விசரன் போயும் போயும் உவன் தங்கவடியட்டைக் கடன் பட்டிருக்கிறான் பார். அவன் நடுத்தெருவிலை வைத்தே மானத்தைக் கப்பலேத்தக் கூடியவன்.” எடுத்து வந்த பணத்தை உள்பொக்கற்றுக்குள் பத்திரமாகச் செருகிக் கொள்ளும்போது இப்படியாக நினைத்தான்.

“ஏனண்ணே! அவன் கனகு பொறுப்புள்ள பெடியனல்லோ?”

“என்னடாப்பா பொறுப்பும் கத்தரிக்காயும். அவனைப் பற்றித்

படிப்பகம்

தெரியாதே எனக்கு? நானொண்டும் ஒளிச்சு மறைச்சுக் கதைக்கேல்லை. எல்லாத்தையுமே பப்ளிக்காத்தான் பேசுறன். நீ வேணுமெண்டால் போய்ச் சொல்லிப்பார்." மற்றவர்களைப் பற்றி அழுகிப் போன வார்த்தைகளைப் பேசுவதும், கேட்பதும் சுகமாகத்தானே இருக்கிறது. சிதம்பரி இனிவாகக் கேட்டுக் கொண்டிருந்தான். தங்கவடியும் பொரிந்து தள்ளினான்.

"நீங்கள் சொல்லுறதை ஏன் சொல்லுவான் அதிலை பாதியைச் சொன்னால் போதாதே அடிதான் விழும்."

"அடிச்சுப் போடுவானோ? எங்கை எனக்கு மேலை ஒருக்கா கைவைக்கட்டும் பாப்பம். அதுக்குப் பிறகு என்ன நடக்குதெண்டு பாரன்!" இதற்குள் கடைகளுக்குப் போன வேறு சிலர் புதினம் பார்க்க வந்து விட்டார்கள். "பஸ்சுக்கு நேரமாச்சு! பிறகு கதைக்கிறனே!" என்றபடி மெல்ல விலகுகிறான் சிதம்பரி.

"எடேய் செம்பரி! ஓராம்நம்பர் பஸ்சே? நானும் அதிலைதான் போகவேணும். வா கதைச்சுக்கொண்டே போவம். "தங்கவடியும் அவனோடு தொற்றிக் கொண்டான். முருங்கை மரத்தில் தொங்கிய வேதாளத்தை தோளில் ஏற்றியதைப் போல பயத்தோடு நடந்தான்.

பஸ் தரிப்பிடத்தில் அதிக சனம் இல்லை. இப்போதெல்லாம் அவனைப் போல ஒரு சில தமிழர்களே பஸ்சில் போகிறார்கள். மற்றவர்கள் கார்களை மாற்றும் போட்டிக் கோதாவில் குதித்திருப்பதால் பஸ்களை நாடுவது குறைந்து போயிருந்தது.

கோ.சி. ஆனர்சன் வழியைக் கடக்கும் போது துருக்கிக் கடையில் யாரோ ஒரு தமிழ்த்தலை வாழைப்பழங்களை பையில் அடைவது தெரிந்தது. எட்டிப் பார்த்தான் அது கனகுதான். மனது, "திக்திக்" என்று அடித்தது. அவன் மட்டும் தங்கவடியிடம் அகப்பட்டு விட்டால் நடு ரோட்டில் மானம் போவது நிச்சயம். அதுவும் வெள்ளைக்காரரின் நடுவில் நின்று கொடுக்கல் வாங்களுக்காக அடிபடுவதென்றால்.. அவனுக்கு அதை எண்ணிப் பார்க்கவே கூச்சமாக இருந்தது.

ஆனால் அவன் வேண்டியதுபோல எதுவும் நடக்கவில்லை. தங்கவடியும், கனகுவும் ஒருவரை ஒருவர் கண்டுவிட்டார்கள். "அங்கைபார் வாழைப்பழம் வாங்கிறான். தின்னடா தின்! இண்டைக்கு ரெண்டிலை ஒண்டு பாக்காமல் விடமாட்டடன்!" தங்கவடி சண்டிக்கட்டை மடித்துக் கட்டாத குறை. வாழைப்பழங்களை அப்படியே பையோடு போட்டுவிட்டு, சுவரோரம் நிறுத்தி வைத்திருந்த சைக்கிளை அவசரமாக இழுத்தெடுத்தான் கனகு. பூட்டை

padippakam

அங்குமிங்கும் இழுத்து திறந்து கொண்டான். மின்னலாகப் பாய்ந்து ஏறியதோடு சரி; எப்படி மறைந்தானென்று தெரியாது. அவன் லவுக்லவுக்குசன் வழியாகத்தான் ஓடியிருக்க வேண்டும். துரத்திப்போன தங்கவடி ஏமாற்றத்துடன் திரும்பினான்.

"வடுவாயப்பயல் வறுகிட்டான்! பஸ் வந்து நின்று 'ஆ'வென வாயைத் திறந்தது. இருவரும் ஏறிக்கொண்டனர். தங்கவடி அதற்குப் பிறகு சற்று உற்சாகமாகி மேலும் சில விசேட அடைமொழிகளைச் சேர்த்து சுவைபடத் திட்டிக்கொண்டு வந்தான்.

பஸ்சில் இருந்தபடியே விரைவாக லூதாசின் தேவாலயம் வரவேண்டுமென உருக்கமாக வேண்டுதல் செய்தான் சிதம்பரி. அங்குதான் அவன் இறங்க வேண்டும். அதையும் விட்டால் தங்கவடியிடமிருந்து தப்ப வேறு வழியில்லை.

இடையில் யாரோ ஒரு கிறீன்ட்லாந்துக்காரியும், பச்சை ஜாக்கட் அணிந்த டெனிஸ்காரனும் அடிபட்டுக் கொண்டே பஸ்சில் ஏறினார்கள். இருவரும் போதையில் இருந்திருக்க வேண்டும். டெனிஸ்காரனின் மூக்கில் ஓங்கிக் குத்த அவள் பல தடவைகள் முயற்சித்தாள். அவன் உயரமாக இருந்ததால் தலையைப் பின்புறமாகச் சரித்துக்கொள்ள முடிந்தது.

தமிழர்கள் மட்டுமா அடிபடுகிறார்கள்? இந்த நாட்டுக்காரரிலும் எத்தனையோபேர் இப்படித்தானே நடக்கிறார்கள் என்பதை நினைத்த போது சிதம்பரியின் தமிழ் மனம் சிறிது ஆறுதலடைந்தது.

தங்கவடியின் செயலுக்காக அவன் வெட்கப்பட்டாலும், ஏனோ சிலர் அவனையும் வீரனாகப் போற்றுவது சரியாகவும் பட்டது. சிதம்பரியும் சிலருக்குக் கடன் கொடுத்து ஏமாந்துபோயிருக்கிறான். தங்கவடியைப் போல அவர்களைத் தாறுமாறாகக் கிழிக்க முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டான். எனினும் பத்துவீத வட்டிக்குவிடும் சோமண்ணையும், சம்சாரமும் பேசும் தமிழை தங்கவடி போன்றவர்கள் சுவைத்தால் ஒரு வேளை திருந்த இடமுண்டென்றும் நினைத்தான்.

"அது சரி! பத்து வட்டியோ, பதினைஞ்சு வட்டியோ நாமேன் கைநீட்டி வாங்கவேணும்? விரலுக்கேத்த வீக்கம் வேணுமெல்லோ காசைக் கண்டதும் கணக்கு வழக்குத் தெரியாமல் வாழுறதும் பிழைதானே?" என்றும் அலுத்துக் கொண்டான். இதற்குள் தங்கவடி ஒரு புகையிலைக் காம்பை நுள்ளி வாயில் போட்டுச் சப்பி, சாறையும் உவிந்து, உசார் பெற்றான்.



படிப்பகம்

இப்போது கிறீன்ட்லாந்துக்காரியும் டெனிஸ்காரனும் அமைதியாக இருந்தனர். உன்னை மாதிரி ஆட்களால் எனக்கு ஜென்மக்களை போட்டுவிட்டதென்று அவன் முணுமுணுத்தது இரண்டொரு தடவைகள் கேட்ட்தோடு சரி. இனி அவர்கள் மறுபடியும் உறவுகொள்வார்களோ பிரிந்து போவார்களோ தெரியவில்லை.

லூதாசின் தேவாலயம் தெரிந்தது. பெல்லை அடிக்கலாமென்று எழும்பினான் அதற்குள் பஸ் தானாகவே தரித்துக் கொண்டது. யாரோ ஒரு தமிழ்ப்பெண் பிள்ளைக்கூடையுடன் ஏறுகிறாள். சிதம்பரி அவளுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றான். அது அவனுடைய பழைய ரூம்மேட் நவத்தின் மனைவிதான். சிரித்துக்கொண்டான்; தங்கவடிக்கோ அவன் தப்பிட்டானே என்பது கவலை.

இனி வீடு போய் புட்டுக்கு மா அவித்து, ஊறவைத்திருந்த பன்றி இறைச்சியை குழம்பாக்கி, சட்டி பானை கழுவி... நினைக்க விசராக இருந்தது. மனைவி எப்பொழுது வரப்போகிறாளோ என்று மாதங்களை எண்ணிப் பார்த்தான்.

முன்பு அவனோடு நவம், பேரின்பம், சிவம் மூன்று பேரும் ஒரே வீட்டில்தான் இருந்தார்கள். நால்வரும் தவணை முறையில் சமைத்ததால் வேலை பாரமாகத் தெரியவில்லை. இப்போது அப்படியல்ல, அவர்கள் மூவரும் திருமணமாகி போய்விட்டார்கள்.

அவர்கள் கொடுத்து வைத்தவர்களாக இருக்கலாம். கடவுள் தனது பரிசுகளை மனைவிகள் வடிவில் பார்சல் செய்திருப்பதாக நினைத்துக் கொண்டான். இல்லாவிட்டால் அவர்களின் மனைவிகளில் ஒருத்தி ரீச்சராகவும், இன்னொருத்தி பாங்கிலும், மற்றவள் எக்கவுண்டஸ் கிளர்க்காகவும் பெரிய பெரிய வேலைகளைச் செய்தவர்களாக இருந்திருக்க முடியாது. அப்படிபட்ட வேலைகளையே உதறியெறிந்துவிட்டு முன்பின் தெரியாத இவர்களைத் தேடி அவர்கள் வந்திருக்கிறார்களென்றால் அது அவனுக்குச் சாதாரண விடயமாகப் படவில்லை.

அவர்கள் மூவரும் இங்குவந்து முழுதாக ஒரு வருடம்கூட ஆகவில்லை. அதற்குள் மூவரின் மனைவிமாருக்கும் மூன்று பிள்ளைச் செல்வங்களையும் பார்சல் செய்திருக்கும் ஆண்டவன் அருளை மெச்சிக் கொண்டான். இருந்தாலும் அவர்களின் மனைவிமார் கோயில்களில் வந்து மனமிரங்கி மேலும் எதையோ வேண்டி உருகுவதைப் பார்த்தபோது குழப்பமாகவும் இருந்தது. எதற்கும் முன்னெச்சரிக்கையாக தனக்கு வரும் மனைவியைப் பற்றி உண்மைகளை

மட்டுமே கூறிக்கொண்டான். அது மற்றவர்களுக்குச் சப்பென்றோ அல்லது இங்குள்ள வழமைகளுக்கு மாறாவோ இருந்திக்கலாம். நவத்தின் மனைவியை பஸ்சில் பார்த்தபின் இப்பிடிச் சில வில்லங்கமான எண்ணங்கள்.

"டேய் சிதம்பரி..!" யாரோ தமிழில் கூப்பிடுவதைப் போலிருந்தது. யாராக இருக்கும்? பயத்துடன் திரும்பிப் பார்த்தான். சைக்கிளை உருட்டியபடியே கனகு வந்துகொண்டிருந்தான்.

"எங்கையவன் தங்கவடி? என்ன என்னைப்பற்றித் தாறுமாறாக அண்டிவைச்சிருப்பனே முகத்தைப் பாத்தாலே தெரியுதே?"

"இல்லை கனகு அந்தாள் அப்பிடியொண்டும் சொல்லேல்லை. கடைசியாக வந்த குத்துச் சண்டையையும், காதைக் கடித்துத் துப்பியதையும் பற்றித்தான் கதைச்சுக்கொண்டு வந்தனாங்கள். "வீண் வம்புக்குப் பயந்து கனகுவிற்குச் சம்மந்தமில்லாத குத்துச் சண்டையைப் பற்றிக் கூறிவிட்டோமோ என்றும் யோசனையாயிருந்தது. ஒரு வேளை இவன் தன்னிடம் கடன் கேட்டுவிட்டால் எப்படித் தப்பித்துக்கொள்வதென்றும் தெரியாது, அவசரமாக மூளையைப் பல இடங்களுக்கும் துரத்தினான்.

"எனக்குத் தெரியும் நீ என்ன யோசிக்கிறாயெண்டு! அவன் என்னைப்பற்றி ஏதோ சொல்லக் கூடாததையெல்லாம் உன்னட்டைச் சொல்லிப் போட்டானெல்லோ! மறைக்காதை."

"கனகு ஏன் இப்படியெல்லாம். கரைச்சல் தாறான்? இவனட்டையும் ஏதோ கள்ளமிருக்கவேணும். இல்லாவிட்டால் ஏன் இப்படித் துருவித்துருவிக் கேக்கவேணும்?" என்றும் யோசித்தான் சிதம்பரி.

"சொல்லுறனே எண்டு கோபிக்க கூடாது. கடனை வேண்டுவானேன்? இப்பிடி ஓடி ஒளிப்பானேன்? அவன் ஒருமாதிரியானவன். அவனட்டைப்போய்க் கடன் வாங்கியிருக்கிறியே ஏமாத்திறதெண்டால் ஆரும் என்னைப்போல விடுபேயரையெல்லோ பிடிக்க வேணும்:" சிதம்பரி தன் இயலாமையையும் சேர்த்தே வருந்தினான்.

கனகுவிற்குக் கோபம் வந்திருக்க வேண்டும் "என்னடாப்பா புதுக் கதைவிடுறாய்? கடன் குடுத்தது நானோ? அல்லாட்டி அவனோ? இருபத்தையாயிரத்தை வாங்கிப்போட்டு ஒருவாரியமா ஏமாத்தித் திரியிறான். நானென்ன வட்டிக்கு விடுறனோ? வீடுவீடா ஏறிப் பேப்பர்

போட்டு உழைச்ச; காசெல்லே?" சொல்லி முடித்தபோது அவனுக்கு இலேசாகக் கண் கலங்கியிருப்பதும் தெரிந்தது. சிதம்பரிக்கு அடி தலை புரியவில்லை. ஏதோ தேவையில்லாத வம்பில் கால்வைத்துவிட்டது தெரிந்தது. கனகு சுத்துறானோ என்றும் இடையில் ஒரு சந்தேகம்.

"அப்பிடியெண்டால் ரவுணிலை அவனைக் கண்டதும் ஏன் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடினனீ? அதைப் பாத்தால் நீதான் கடன்காரனென்டது சொல்லாமலே தெரியுதே..?"

"நினைச்சன்! உனக்கு அப்பிடித் தெரியுமெண்டபடியால்தான் எங்கையெல்லாமோ சுத்தி கடைசியா இஞ்சை வந்திருக்கிறன். கடன் வாங்கினவன் ஒடுறதும், தூக்குப் போடுறதும் பாலும்பழமும், பாசமலரும் காலத்திலெல்லோ இப்ப பிஸ்தா, பில்லா காலமெல்லோ அதுதான் கடன்குடுத்திட்டு ஓடித்திரியிறன். கடன் குடுத்தா எவ்வளவு தொல்லையள் வருமெண்டு பாத்தியோ? கனகுவைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. மேலும் தமிழர்களை கறுப்பு வெள்ளை சினிமாப் படக் காலத்தவர், வண்ணப்பட சினிமாக் காலத்தவரென்று பிரிப்பது அதைவிடப் பரிதாபகரமாகத் தெரிந்தது.

"சரி ஒப்புக்கு நீதான் குடுத்ததெண்டு வைச்சாலும் நீ அவனைக் கண்டு ஓடி ஒளியவேண்டியது நியாயமில்லையே? அது பிழையெல்லோ?" கனகு இவனை வினோதமாகப் பார்த்துக்கொண்டே, நான்கு புறமும் தலையைச் சுழற்றி தங்கவடி வருகிறானா என்றும் அவதானித்துக் கொண்டான்.

"எல்லாம் காரணத்தோடைதான். உன்ரை மனசாட்சியைத் தொட்டுச் சொல்லு பாப்பம். அவன் என்னைப் பற்றி இல்லாததையும், பொல்லாததையும் எவ்வளவு கேவலமாக சொல்லித் திரியிறான். அவன் சொன்ன வசவுகளை உன்னாலை திருப்பிகூடச் சொல்ல முடியேல்லையெண்டால் பாரன்?" சத்தியமாகவே கனகு தன்னுடைய வாயைப் பிடுங்கிவிடுவானென்றே நினைத்தான். சும்மா தலையாட்டினால் போதும் பிறகு தங்கவடி கரகமெடுத்தபடியே இவன் படலைக்கு வந்துவிடுவான்." அதுசரியப்பா கடன் கொடுத்தவன் வயித்தெரிச்சலிலை நாலைப்பத்தைப் பேசத்தானே செய்வான்!" சோலியிலிருந்து நழுவினான் சிதம்பரி.

"சரி நீ எனக்குப் பயமில்லை. அதுதான் என்ரை பக்கம் கதைக்கிறாயில்லை. என்னட்டை அவன் ஒரு அடியெண்டாலும் வாங்கவேணும் அதுக்குத்தான் காத்திருக்கிறன் எண்டாவது சொல்லியிருப்பனே! கொம்மா சத்தியம் உண்மையை மறைக்காதை" சிதம்பரியின் உச்சந்தலையில் பட்டென்று அடித்தான்.

padippakam

"ஓம்!" சிதம்பரி அதை மட்டும் ஒப்புக் கொண்டான். யாரோ வேண்டிய கடனுக்காக புதுக் குடியிருப்பிலிருக்கும் தாய் புவனேஸ்வரி சிவபதமடைவதை அவன் விரும்பாதிருந்திருக்கலாம்.

"அப்பிடி வா வழிக்கு! அவன் என்னைப்பற்றிச் சொல்லித் திரியிற வெண் சொல்லுகளை உன்னைப் பார்த்து நான் சொன்னால் நீ சும்மாயிருப்பியே? கனகு கேட்டான்.

"இல்லை! கண்டிப்பா அடிப்பன்!"

கனகுவின் முகத்தில் மெல்லிய சிரிப்புத் தெரிந்தது. "இப்ப நீ சொல்லுறமாதிரியே அவனுக்கு நானும் அடிச்சனெண்டால் பிறகு என்ன நடக்கும் தெரியுமே?" கனகு ஒரு சீக்கிரட்டை பற்றவைத்துக் கொண்டான்.

"அடிவாங்கினதும் வாங்கின காசை திருப்பித்தர மாட்டெனெண்டு துணிச்சலாகச் சொல்லக்கூடும்."

"அதைவிட வேறை ஏதாவது செய்ய வழியிருக்கோ தெரிஞ்சால் சொல்லுபாப்பம்?"

"இந்த நாட்டிலை அடிக்கச் சட்டமில்லை. அடிச்சால் பொலீசிலை முறைப்பாடு குடுக்கலாம். பொலீசுக்குப் போனால் சட்டப்படி காசைக் குடுக்காதபடியால் நீதான் குற்றவாளியெண்டும் வரும். ஒருக்கா குற்றப்பட்டால் அதைத்தொட்டு, எத்தினையோ சிக்கல்கள் அ.. நீ சிற்றிசெனுக்குப் போட்டிட்டியோ? என்ன போட்டிட்டியோ அப்ப வேறை வில்லங்கமே தேவையில்லை."

"இப்ப விளங்குதே! நான் ஏன் ஓடி ஒழிச்சனானெண்டு? நான் அவனுக்கு ஒரு அடியெண்டாலும் அடிக்கவேணும். அதை உன்னைப் போல சாட்சி சொல்லக் கூடிய ஒருத்தன் கண்ணாலை பாக்கவும் வேணும். இதுக்குத்தான் அவன் என்னை பேசித்திரியிறான். இப்படியெல்லாம் வருமெண்டு முந்தியே தெரிஞ்சிருந்தால் கடனைக் குடுத்து, முட்டாளுமாகியிருக்க மாட்டனே." என்று சத்தமாகப் புலம்பினான் கனகு.

இப்பொழுதுதான் சிதம்பரிக்கு உண்மையாகவே தலை சுற்றியது. மனிதன் பூமியில் எப்படித்தான் வாழுவதென்றும் தெரியாதிருந்தது. உண்மையான கஷ்டத்தின் காரணமாக தன்னிடம் கடன் கேட்டிருந்த ஒழுங்கானவர்கள் மீதும் அவன் சந்தேகப்படத் தொடங்கினான். எல்லாவற்றையும்விட தங்கவடியின் விரல்களில் புகையும் மற்றக்கோன்



படிப்பகம்

padippakam

சிக்கிரட், புத்தகப் பையில் தினசரி ஒளிந்திருக்கும் தங்கமுலாம் போடப்பட்ட விஸ்கிப் போத்தல் யாவும் கண்முன் ஆடின. கனகுவிடம் ஒரு சிக்கிரட் கடன் வாங்கிப் பற்றவைத்துக் கொண்டான். எப்போதாவது மூளை அடைப்பாக இருக்கும் நேரங்களில் மட்டும் இப்படிக் கடன்பட்டு புகைவிட்டுக் கொள்வான்.

புகை ஊத சிறு தெம்பு பிறக்க, சொன்னாலும் வில்லங்கம், சொல்லாவிட்டாலும் வில்லங்கம் என்ற நிலையில் ஏதாவது கேள்வி கேட்பதே சிறந்ததென் நினைத்தான். " இப்படியே ஓடி ஒழிச்சால் குடுத்த காசைத் திருப்பி வேண்ட ஏது வழி?" என்றும் வீறாப்பாக கேட்டான்.

"அதையும் உன்னட்டைத்தான் கேட்க வேணும் அதுக்குத்தானே வந்திருக்கிறேன்!" சைக்கிளை மரத்தோடு சாத்திவிட்டு சிதம்பரியின் கைகளை ஆவலோடு பற்றிக்கொண்டான் கனகு.

*(யாவும் கற்பனை)*

●



படிப்பகம்

padippakam

# காத்தான்குட்டி கைலாசம்போன காதை!

அ.. கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி.. சிறீமான் பொது சனத்திற்கு முன்னாடி சாஸ்டாங்கமாக விழுந்து தெண்டனிட்டு, ஆதியாக, அமுதமாக, விழுமிய முனிவரர் விழுங்கும் கோதில் கனியாக இப்புவி வாழ அவதரித்த மெய்யடியார் காத்தான்குட்டி கைலாயமேகிய கதையை மாணிக்கவாசகங்களால் எழுதப்படவேண்டிய அவர் வாழ்க்கையை ஊன் கலந்து, உயிர்கலந்து, நான் கலந்து பாட....அ....

மெய்யடியார்களே! முன்னொரு காலத்திலே நகுலமுனிவர் வணங்கவும் அவர் கீரிமுகம் மாற்றி மனித முகம் கொடுத்தருளிய கீரிமலைப்பதிக்கு தென்புறத்தே கருடவில் என்னும் ஓர் திருப்பதியிருந்தது. அங்கே மாத்தான் என்னும் மெய்யடியாரும், சருவலோகம் என்னும் நாச்சியாரும் நீண்ட காலமாக இனிதே இல்லறமென்னும் நல்லறமியற்றி வந்தனர்.

இப்படி வாழ்ந்துவரும் காலத்தே எம்பெருமான் படைத்தருளிய கற்பகதருவில் வடித்த பனம்பாலருந்தி, தினசரி மதிமயங்கி தெருத் தெருவாக தேவாரம் பாடித் திரிந்த அடியவர் மாத்தானுக்கும் சந்தைகள் பல சென்று வியாபாரமியற்றி, அகுத விலை கேட்டு அடம்பிடித்து, ஒரு வாசகத்திற்குமே உருகாதோரையெல்லாம் தன் திருவாகசத்தால் உருகவைத்த செந்தமிழ் திருமாட்டி சருவலோகம் அம்மையாருக்கும் நீண்ட நாட்களாக பிள்ளைக் கனியமுது இல்லாததே பெரும் குறையாயிற்று என்க.

பிள்ளைச் செல்வம் வேண்டி ஏறாத கோயிலில்லை. குளிக்காத குளமில்லை. கண்ணீர் ததும்பி, வெதும்பியுள்ளம் கவன்று, கல்லோயா வெட்டிரும்பு, வடிசாராயமென சகலதும் அடித்து மாத்தானார் மறுகிய

படிப்பகம்

அக்காலை; முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் பயனாய் இப்புவியில் ஞானப்பனுவலாக, கவிக்குரவராக அவதரித்தார் காத்தான்குட்டி என்னும் நம் மெய்யடியார்.

குழந்தையின் அழகு கண்டு, பெற்றோரும் மற்றோரும் இது மனிதப்பிறப்பல்ல; "திருஅவதாரமே!" என்று மகிழ்ந்தனர். மொழு மொழுவென வளர்ந்த குழந்தை புன்னகை பூத்து, சிறுகை வீசி, நிலத்திடை தவழ்ந்து, குறுநடை பயின்று மூன்றாவது அகவையை அடைந்த போது ஓர்நாள் தந்தையாருடன் கூவில் என்னும் திருப்பதிக்குச் சென்றருளினார்.

கூவில் திருப்பதி மெய்யடியார் திருக்கூட்டம் நிறைந்த தலம். அடியார் பலரின் புண்ணிய பாதம் பட்ட அப்பதிக்கு, செல்வோர் திருக்குளத்தில் குளித்து கற்பகதருவை வணங்கி தூய ஞானப்பானம் அருந்தி உய்வது வழமை.

அவ்விதமே கூவில் பதி சென்ற மாத்தானார் குழந்தை நல்லானை குளத்தங்கரையில் இருத்தி சிறுபொழுது, "தும்!" மென நீரின் அடியில் மூழ்கினார். ஜலக்கிரீடை புரியும் தந்தையாரைக் காணாது திகைத்து, கண்களில் நீர் அருவியாய் பெருக பெருங்குரலெடுத்து" அம்மையே அப்பா!" வென அலறினார்.

அவரின் அழுகுரல் தந்தையாரின் காதில் விழவில்லை. ஆனால் தோணியப்பர் என்னும் மெய்யடியார் காதுகளில் விழுந்தது. ஞானப்பால் அருந்தப் பணமின்றி, திருட்டு முட்டியிறக்க பனை மரத்தின் வட்டில் அமர்ந்திருந்த தோணியப்பர் குழந்தை தன் தவறான செயலை அறிந்துதான் ஓலமிடுகிறதென அஞ்சியபடியே முட்டியுடன் வேகமாகக் கீழே இறங்கினார்.

அழும் திருக்குழந்தையை அருளோடு நோக்கி, அதன் அழுகை தணிக்க எண்ணி பொன்மயமானதும், சிரட்டை என்னும் திருப்பெயர் கொண்டதுமான சிறு கிண்ணத்தில் முட்டியிலிருந்த ஞானபானத்தை பொழிந்து, குழந்தைக்கு ஊட்டினார். பானம் அருந்திய குழந்தை அழுகை மறந்து சிரித்தது. "குழந்தாய் நீ மட்டுமல்ல எல்லோரும் சிரிக்க உயரமாக எழுந்தருளியிருக்கும் கற்பகதருவின் புகழே புகழ்!" எனப் போற்றி, மறுபடியும் மரத்தில் ஏறினார்.

திருக்குளத்தில் மூழ்கி கரை வந்த மாத்தானார் குழந்தையைக் கூர்ந்து நோக்கினார். என்னே கொடுமை! அதன் கடை வாயில் பால் வழிந்திருப்பதைக் கண்டார்; கோபமுற்றார். இச்செயலைப் புரிந்தவர் யாரெனக் கேட்டு குழந்தையை வைதார். கண்ணீர் விட்டழுத

padippakam

காத்தான்குட்டி தனக்குத் திருவமுது ஊட்டிய தோணியப்பரைக் காணாது கற்பக மரத்தைக் காட்டி அழுதார்.

விண்ணுயர எழுந்தருளியிருக்கும் அம்மரத்தைப் பார்த்தார் மாத்தானார் அங்கே சர்வலோகமும் போற்றும் வண்ணம் அலங்கார பூசிதார காட்சியளித்தார் ஞானப்பால் பொழிந்த வள்ளல் தோணியப்பர். அவர் கையில் இருந்த முட்டியைக் கண்டதும் எல்லாம் அவன் செயலென்ற உண்மையைப் புரிந்து அக்கணமே தான் யார் என்பதும் மறந்து போக, 'அரகர அரகர" என்றபடி குழந்தையுடன் நிலந்தனில் வீழ்ந்து, நமஸ்காரம் புரிந்தார்.

அவ்வமயம் வானத்திலிருந்து ஓர் அசரீரி எழுந்தது என்க. "யாமே ஞானவடிவாகத் தோன்றி குழந்தைக்கு அமுதபானம் ஊட்டினோம்!" என உரைத்து மறைந்தது அக்குரல். அவ்வமயம் ஞானப்பாலின் கிறுக்கு தலைக்கேறிய குழந்தை காத்தான்குட்டி தாயார் சருவலோகம் கறிக்கடைதனில் பாடுவதுபோல செந்தமிழின் கனிஇடுங்கி பாடியருளிய தேவாரத்தை செவிமடுத்துக் கேட்க முடியாது இரு கண்களாலும் காவேரி நீர் திரண்டு பெருக நடுநடுங்கி நின்றார் மாத்தானார்.

கூவில் பதியில் நடந்த இத்திருக் காட்சிக்குப் பின்னர் குழந்தை காத்தான்குட்டியின் புகழ் அகிலமெங்கும் பரவியதென்க. பொற்தாளம் கொண்டு, பொற்சிவிகை பூட்டி, சென்றார் போல அக்காலத்து கோப்பிரேசன் பதிகளெல்லாம் சென்று பாடல்கள் பல பாடி, அர்த்த ராத்திரிகளில் குடைபிடித்தாடி, பேரும் புகழும் பெற்று இருபதாவது அகவையை அடைந்தார்.

இக்காலத்தே யானையேற்றம், குதிரையேற்றம், மற்போர், விற்போர், உட்பட ஆயகலைகள் அறுபத்தி நான்கையும் கற்றுத் தேர்ந்துவிட்ட இளைஞரான காத்தான்குட்டிக்கு மணமுடிக்க பெற்றோர் விரும்பினர். இக்காலத்தே மணங்கொண்ட புத்தூர் என்னும் பதிக்கப்பால் உள்ள, "வள் அலை" என்ற சிற்றூரில் தந்தையார் சிவபதமடைந்து, தாயார் அகிலாண்டேஸ்வரியுடன் வாழ்ந்து வந்த ஒரே மகள் அல்லிராணி என்னும் மங்கை நல்லாளின் கரம் பற்றினார்.

அகிலாண்டேஸ்வரி அம்மையார் யாருமற்றவர். பிட்டு விற்று சீவனம் நடாத்தி வந்தார். மருமகனாராக வந்த காத்தான்குட்டிக்கு உணவிட உதிர்ந்த பிட்டுக்களை அளித்து ஞானமே வடிவாக நின்ற அவருக்காக அல்லும் பகலும் புட்டவித்து மாய்ந்தாள் என்க.

மெய்யடியார் காத்தான்குட்டி வாய்ந்த வேலை மண் அள்ளுவது. கிணறுகள் வெட்டும் இடம் சென்று மண்ணை அள்ளுவார் பின் கீழே



படிப்பகம்

போடுவார். சிறுபொழுது நடனமாடுவார். மாமி கொடுத்த பிட்டை வாயில் போடுவார். திடீரென எங்கோ ஓடுவார். இப்படியாக ஐந்து ஆண்டுகளில் ஆறு குழந்தைகளை ஈன்றருளினார்.

காவேரி ஆறு பெருகியது போல பிள்ளைச் செல்வத்தை பெருக்கி, ஞானக்கலை ஆடித்திரிந்த மெய்யடியார்க்கு வாழ்க்கைப்பட்டு, அதன் பயனாய் இடித்து, குத்தி பாடுபட்ட அல்லிராணியின் மணவாழ்க்கையே கந்தரகோளமாய்ப் போய்க் கிடந்தது.

ஆனால் ஞானம்முற்றிய அடியார் ஏதறிவார். "எல்லாம் அவன் செயல்" என்ற உண்மையை அறிந்து, மேலும் மேலும் பிள்ளைச் செல்வம் இயற்ற வேண்டி, இடித்துக் குத்தி வாழ்ந்த அல்லிராணியை அடித்துக் குத்தி ஆய்க்கினை செய்து, தினசரி சட்டிபானை உடைத்து, பஞ்ச புராணங்கள் பாடுவதே வேலையாகப் பொழுதொழித்தார்.

இவ்வமயம் பெருகும் குழந்தைச் செல்வங்கள் அணையுடைக்கப் போகிறதே! என்று மனங்கலங்கினாள் அகிலாண்டேஸ்வரி. வீட்டில் எல்லோருக்கும் தான் ஒருத்தியே புட்டவித்து உணவிடும் கொடுமையை எண்ணிக் கலங்கினாள். வீட்டில் தேநீருக்குச் சீனியில்லை. கூழுக்கு உப்பில்லை என்று குடும்பமே அழ மேனிக்குப் பஞ்சணை தேடும் காத்தான் குட்டியார்க்கு பிரம்பெடுத்து உபதேசிக்க கூன்பாண்டிய மன்னன் இல்லையே என்று பல நாட்கள் அழுதாள். பின் வேறு வழியின்றி தானே அவருக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசிக்க ஆசை கொண்டாள்.

சீவியெடுத்த சிங்காரமான விளக்குமாறு கொண்டு மருகனாரின் பித்தம் தெளியுமாறு மேனியெங்கும் நல்லபடி சாற்றி, முத்திரை பொறித்து மனம் ஆறினாள். அடியின் அகோரம் தாங்கமுடியாது கண், வாய், மூக்கு போன்ற நவ துவாரங்களாலும் கழிவு நீர் பாய, தலையிலிருந்து ஆணிக்கடை பிடுங்கிய பேய் போல கிரீச்சிட்டு அங்கிருந்து, குதிக்கால் குடுமியில் முட்ட ஓடி மறைந்தார். இத்துடன் காத்தான் குட்டி புராணம் பாகம் ஒன்று முற்றிற்று. இனி பாகம் இரண்டு அவர் டென்மார்க்கில் புரிந்த அற்புதங்களை எடுத்தியம்பும் என்க.

❖ ❖ ❖

அன்றொருநாள் தேவலோகத்திலே கமலினி, அனிந்திதை என்னும் கன்னியரை மனந்திரிந்து நோக்கியதால் வன்தொண்டராகிய சுந்தரர் பூவுலகில் வந்து சங்கிலியார், பரவையாரை எப்படி மணக்க நேர்ந்ததோ? அது போல முன்னர் சிவபெருமானுக்கு பூப்புடுங்கும் தோட்டத்திலே தொண்டு செய்து, சில பல கன்னியரை மனந்திரிந்து

padippakam

நோக்கினர். அவ்வடியாரில் சிலரே பாவப்பிணி போக்க ஐரோப்பா வந்தனர் என்க. அஃது போலவே நம் காத்தான் குட்டியும் மேலைநாடு வந்தருளினார் என்று எங்கோ சில வடமொழிப் புராணங்களில் பாடப்பட்டுள்ளதாக குறிப்பிடுவர்.

இப்படியே புகை வண்டியின் அடியில் படுத்தபடி டென்மார்க் வந்திறங்கிய அடியாரை பொலீஸ் வண்டியில் "கூ கூ!" வென ஒலியெழுப்பும் வெண்சங்கு பூட்டி முழங்கி, சாமரம் வீசி, சிறுகுடை பிடித்து, அழைத்துச் சென்று விசாரித்தனர். அவ்வமயம் அனைவரும் மயங்கி அவரது அகதி அடைக்கலத்தை உடனே ஏற்கும் வண்ணம் தேனினுமினிய "மாமியார் தட்டி திருப்பதிகம்" பாடியருளினார். "மாமி அடித்தாளே!" என்று அவர் அடியெத்துப் பாடிஅழ, சிறு மந்தம் அடைத்த காது படைத்த மொழிபெயர்ப்பாளன், "ஆமி அடித்தானென" மாற்றி மொழிபெயர்த்த புதுமை கொண்டதே மாமியார் தட்டிய திருப்பதிகமென்பார் பெரியோர்.

மாமியார் பதிகம் கேட்டதும் மேனி புல்லரிக்க பொலீசார் அவர் தேகமெல்லாம் தடவிப் பார்தனர். என்னே அதிசயம் வெளிப்புறத்தே சிறு அடையாளம் கூட தெரியாமல்; உட்புறத்தே வரிவரியாக இரத்தம் கண்டிக் கிடப்பது கண்டு வியந்தார். விளக்குமாற்றடியின் விபரம் புரியாது ஆய்வுகள் பல செய்தார். இப்படியொரு வினோத ஆயுதம் அமெரிக்காவில் கூட அறிமுகமாகவில்லையென அதிசயித்து நின்றார். பயங்கர ஆயுதத்தால் தாக்குண்ட அவருக்கு விஷேட அகதி அந்தஸ்தும் வழங்கப் பட்டது. யாகம் புரிவதற்கும் ஓமகுண்டத்தில் நெய் வார்ப்பதற்குமாக எல்லா உதவிகளும் இறைவனருளால் அவர் கண்முன் தோன்றிய புதுமையை தமிழில் பாட வார்த்தையுண்டோ அம்ம.

சொற்ப நாட்களிலே ஆறடிக் கூந்தல் அள்ளி முடிந்து, காதிலே குண்டலம் தாங்கி, முழங்கைக்கு மேலே செப்பிலே வங்கிகள் என்னும் ஆபரணம் பூண்டு, தோள்களிலே வாகுவலயம், துறவிகள் போல கிழிந்த ஆடையாம் டெனிம் பூண்டு, தலையில் பல வர்ணங்களில் திருச்சாயமிட்டு, பழுத்த செழுந்தமிழ்ப் புலம் பெயர் பழமானார்.

அவ்வமயம் எல்லா மக்களும் இன்புற்றிருக்க நடுச்சாமங்கள் தோறும் ரெலிபோன் மணி கிலுக்கி அகப்பட்ட வீடுகளிலெல்லாம் ஆறுகாலப் பூசைகளை பக்தி சிரத்தையுடன் நடத்தி, தொலைபேசி என்பது தொலைவில் உள்ளவர்களுடன் பேசுவது அல்ல: அது, "தொல்லை பேசி!" என்னும் தத்துவத்தை மக்கள் உய்யப் பாடியருளி பரகுஞ்சர சுரமஞ்சரியானார்.

இக்காலத்தில் நாடுமுழுதும் காத்தான்குட்டியின் மெய்யடியார்கள் பலர் பக்திமுத்தி, ஆழ்கை மூழ்கைகள் பல புரிந்து,



படிப்பகம்

ஆங்காங்கு தீர்த்த மடங்கள் பல திறந்து, போற்றி சய சய போற்றியென காட்சும் கம்மாறிசும், மணலும், பிடியுமாக நின்று தவமியற்றி வந்தனர். அவ்வடியார்களின் திரு மடங்களெல்லாம் காத்தான்குட்டியார் எழுந்தருள வேண்டுமென பூசைகள் பல புரிந்து வந்தனர் என்க. இவர்களில் முதலானவர் குயிலு என்ற மெய்யடியாராவார். அன்னார் கட்டை ஊதும் கலையில் கைதேர்ந்தவராதலால் "அப்பு ஊதி அடிகள்" என சிறப்பு நாமமிட்டு அழைப்பாரும் உண்டு.

ஓர் நாள் காத்தான்குட்டி அப்பூதியடிகள் திருமடம் எழுந்தருளினார். மது நெடி மூக்கிலறையும் அவர் தம் திருப்பதி ஏகி, சில தினங்கள் உபதேசம் புரிந்தார். அப்போது அதிசயத்திலும் அதிசயமாக; கற்பக மரத்தின் பூங்கொம்பு போல; அவர் தேவலோகத்தில் மனந்திரிந்து நோக்கிய பெண்ணானவள் இங்கு சுசேனா என்ற டெனிஸ் மாது வடிவாகி அவதரித்திருக்கக் கண்டார். முற்பிறவியின் வினைப் பயனாக சுசேனா காத்தான்குட்டியை நோக்கி உருக இவர் அம்மாதுவைக் கண்டு மறுக காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி கடைசியில் அப்பூதியடிகளின் வாயிலும் கண்களிலும் மண்ணள்ளிப் போட்டு, விடிந்ததும் அவர் வாயிலும் வயிற்றிலும் குத்திப் புரள, இவர்கள் இருவருமோ இரவோடிரவாக மறைந்து பின் மணவாளக் கோலத்தில் தோன்றிய திருக்காட்சியை பாடுவோர் வாயில் பாரிசாத மலர் மணக்கும்.

நூலிடை கொண்ட கனிந்த கனியான சுசேனா அம்மையாருடன் பல தலங்கள் ஏகி வாழ்ந்த அக்காலை காஸ், கட்டை, சோமபானமெனத் திளைத்து, சூலை நோயால் பீடிக்கப்பட்டு வருந்தினார். வயிற்றிலே ஒரு வித வடவைத் தீ பற்றியெரிந்தது. அவ்வமயம் பல சமய கோளரிகளாக வலம் வரும் தமிழ் மெய்யடியார்கள் அவரை மதமாற்றி மெய்ச்சமயம் சேர்ப்பித்து, புதிய மனிதராக்க, இவரும் "பலசமயகோளரி" என்னும் திருப்பெயர் சூடினார் என்க. நாட்டிலோ மனைவி காதில் தோடும் இழந்து, வறுமைப்பிணியில் வாட உற்றோர் பெற்றோரெல்லாம் பரதேசிகளாகப் போக ஆத்தை தெருவில் பிச்சைக்கு அலைய பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் குடுத்த கதைபோல இங்குள்ள தமிழருக்கு உடன் விமோசனம் தேடி இவர் சமய வாதுகளில் ஈடுபட, அது கேட்டு பல விடுகாய்கள் கழுமரமேற, தமிழரெல்லாம் தமிழீழப் போரை மறந்து, சமயப் போர்களில் குதித்து தீர்த்தமாடும் திருக்காட்சியைக் காண கண் கோடி வேணுமம்மா.

இவ்விதமாக அற்புதங்கள் பல நடத்தி அவர் பெற்ற புகழ் கண்டு நாடே தொழுது நிற்க, கலைவிழாக்கள் நடாத்தி கலை வளர்ப்போர் நீ பெரிதோ நான் பெரிதோ என்று வாது பொருதி அவற்றைக் குழப்ப ஆளுக்காள் நல்ல குழப்பக் குதிரைகள் இல்லாது பெருந்துயர்

அடைந்தார். அவ்வமயம் காத்தான்குட்டியாரே முன் வந்து அவர்களிடம் நிதிபெற்று, பின் அப்பணத்தை விஸ்கி நீரில் கரைத்து, கட்டையில் எரித்துப் புகையாக்கி, வந்த சாம்பலை நெற்றியில் பூசி நடனம் புரிந்து, செல்வத்தின் நிலையாமையை அனைவர்க்கும் உணர்த்தி மகிழ்ந்தார். பின் கலைவிழாக்காரர் கோபமடைய இவர் இறைவனை வேண்டியழுதார். இறைவன் அருளால் காட்டிலே வாழ்ந்த நரிகளெல்லாம் பரிகளாயின. அவற்றை அழைத்து வந்து, கலைவிழா காண வந்த மக்களாகிய குதிரைகளோடு இக் குதிரைகளையும் அமர்த்தி மகிழ்ந்தார். நேரம் போகப் போக பரிகளெல்லாம் சோமபானம் பருகத் தொடங்க, தாமெல்லாம் இப்போது பரி என்னும் குதிரைகளாக வேடமிட்டிருக்கிறோமே என்பதை மறந்து, "கூ..கூ!"வென அங்குமிங்குமாக ஊளையிட பார்வையாளப் பரிகள் வெருண்டு ஓட நரிகள் அவற்றையெல்லாம் விரட்டிக் கடிக்க, கலைவிழாவே குழம்பிப் போனது. இதன் நினைவாகவே இன்றும் மேலைப் புலங்களில் எங்கெங்கு கலைவிழாக்கள் நடைபெற்றாலும் அங்கங்கு பரிகள் நரிகளாகி ஊளையிடும் திருக்காட்சியை தமிழரெல்லாம் கண்டு இன்புற்றிருக்காத நாளும் உண்டோ சொல்லம்மா.

இதன் பின் அவர் கையில் காசில்லாத போது கந்தசஷ்டி விரதங்களியற்றி, காசு கைக்கு வரவும் துடித்தெழுந்து எதிரிகளை இடங்குறித்துப் போருக்கழைத்து சூரன் போர்கள் பல நடத்தி, கடைசியில் ஓர் நாள் திருக்கைலாயக் காட்சியைக் காண அவாவுற்றார். அங்கு போவதற்காக 'குடியுரிமை' என்னும் திருவைந்தெழுத்தை தினசரி ஓதி வந்தார். அவர் அதையே நினைத்து அழுது அரற்றிட, ஈற்றில் டெனிஸ் வெளி நாட்டமைச்சும் அவருக்கும் கைலாயம் காட்ட எண்ணி, குடிமை என்னும் புஸ்பக விமானத்தை அனுப்ப, தேவர்கள் சிற்றிசென் மரங்களில் மலர் பறித்துப் பூமாரி பொழிய, சுசேனா அம்மையாரை விரட்டியடித்து, அனேற்றா என்னும் அம்மையாரை பல குழந்தைகளுடன் றெடிமேற்றாக திருக்கரம் பற்றி, பச்சைக்கூடும் மணவாள கோலமுமாக கைலாயம் ஏகிய காட்சியைப் பார்க்க பதினாறு கண்கள் வேண்டும்.

இது இவ்விதமாயிருக்க இனி காத்தான் குட்டி கைலாயம் போன காதையை ஒரு வேளை தம்முடைய காதையோ எனத் தவறாக எண்ணி சில அடியார் குத்தி முறியாமலிருக்கும் பொருட்டு, நல்ல வேளாயக சில அறிஞர் முன் வந்து; காத்தான் குட்டி கைலாயம் போன கதையென்பது புலம் பெயர்ந்தோர் திருவிளையாடலின் ஒரு குறியீட்டு விளக்கமேயென இலகுநடையில் அருவரிப் புத்தகம் போல பொழிப்புரை செய்து உதவினர் என்க. அதே வேளை வேறு சில தான் தோன்றிக் கவிராயர்கள் காத்தான்குட்டியார் கதை இதுவெனில் இன்னும் செருமனி, பிரான்சு, இங்கிலாந்து, கனடா, நோர்வே, சுவிசு

போன்ற நாடுகளில் வாழும் மெய்யடியார்களின் புராணங்களைப் பாடுவது எங்ஙனமென்றறியாது ஒருபடி மேலே சென்று பதறினர். மற்றோர் பிரிவினரோ இதையெல்லாம் பதியதோர் பெரிய புராணமாகப் பாட இனி சேக்கிழார் சுவாமிகளே எழுந்தருள வேண்டுமென ஆனந்தக் கண்ணீர் சொரிய, அவர்கள்மீதும் ஓர் புராணம் பாட காலமிஃது என்பதால் இந்தளவில் இக்கதையை நிறைவு செய்து வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழரெனப் பாடிப்பரவி.. அ... அ... தனனா..

●

padippakam

# ஒரு பயணமும் இரண்டு சித்திரங்களும்

மின்னல் வேக ரெயின். தூய வெண்மை நிறத்தோடு உடைந்து போகாத அழகிய முட்டைக் கோது போல வார்ப்படமாகியிருந்த அதன் நேர்த்தியைத் தொட்டுக் கும்பிடலாம் போலிருந்தது.

குமரேசனுக்குச் சீற் இலக்கம் 56. ஏறியபோதுதான் அதன் உட்புற அமெரிக்கை அதைவிட அமர்க்களமாய்த் தெரிந்தது. கற்பக மரத்தின் பூங்கொம்பில் சயனித்த சொகுசு. மூலைச் சீற்றை முதுகுப்புறத்தால் ஒரு தடவை உரிமையோடு அழுத்தினான். நுரைமெத்தை பதிலுக்குக் காற்றூதியது.

அதன் அரசு வேகத்திற்கும் சோடனைக்கும் கடுகதி வண்டியென்ற தமிழ்ச் சொல்லின் மிடுக்குப் போதியதாகப் படவில்லை. வேறு ஏதாவது தமிழ்ப் பெயர் இருக்கிறதா? என்று துருவினான்.

கீழே கிடந்த வயலின் பெட்டி தற்செயலாகக் காலில் தட்டிய போதுதான் நேற்றைய சங்கதிகள் ஓடோடி வந்து நின்றன. “நமது கலைகளையும்,பண்பாட்டையும் பேணும் பொன்னான நிகழ்ச்சி. நீங்கள் கண்டிப்பாக வர வேண்டும்!” என்று கூப்பிட்டிருந்தார்கள்.

நம் தமிழ்க் கலைகளல்லவா? மறுப்புச் சொல்ல முடியவில்லை. இரண்டு நாட்கள் லீவு. வயலினையும் தூக்கிக் கொண்டு பிராங்பேட் வந்து சேர்ந்தான். அருமையான கச்சேரிதான். இருந்தாலும் பயணக் களைப்பு மட்டும் தேகத்தில் கனிந்தே கிடந்தது. களைத்துப் போன உடலை மெல்லத் தளர்வு படுத்திக் கொண்டான்.

ஏனோ புகைவண்டியும் பதினைந்து நிமிடங்கள் தாமதமாகவே புறப்பட்டது. ''எண்டைக்குச் சுவரை உடைச்சு ரெண்டு

படிப்பகம்

ஜேர்மனியையும் ஒண்டாக்கினாங்களோ அண்டையிருந்து எல்லாமே லேட்தான்!" கிழக்கைச் சேர்த்துக் கொண்டதால் மேற்கின் புகழ் குன்றிவிட்டதாக ஒரு தமிழர் கலைவிழாவில் அங்கலாய்த்திருந்தது காதைக் குடைந்தது.

வசந்தகாலம். சூரியன் முழு வோல்ரேஜில் வேலை செய்ததால் பிராங்பேட் கட்டிடங்களின் அடர்த்தி கண்களைப் பரவசத்தில் வீழ்த்தியது. அந்த அழகின் கடைசி விளிம்பில் யாரோ ஒரு கருக்கலான மனிதன் அமர்ந்திருப்பது தெரிந்தது.

வெண்மை சுட்டுப்போன நாலு முழ வேஷ்டித் துண்டு. வல்லை நெசவில் அடித்த துவாய், சல்யூட் அடிக்கும் முன்வாய்ப் பற்கள் இரண்டு. சீமெந்துக் கலவையால் அரித்தெடுக்கப்பட்ட கால்கள் உட்பட எல்லாமே அப்படியே. சந்தேகமேயில்லை கண்டனேதான். வல்வெட்டி மீனி வளவுக் கண்டனை நினைவுகள் ஏனாம் பிராங்பேட் வரை தூக்கி வந்திருக்கின்றன?

கண்டன் பகல் பொழுதில் மாத்தான் மேஸ்திரிக்கு முட்டாள் வேலை செய்பவன். இரவில் சிறந்த நாடக நடிகன். சிவாலிங்கத்தின் மணிச்சட்டை, தலையில் புளியங்கொட்டைச் சிலுப்பா. அதன் மேல் ஒரு தகரக் கிரீடமுமாக மேடையில் தோன்றும் போது அவன் பல தேசங்களுக்கு இராசாதான்.

"இராஜாதி ராஜ...ராஜ மாத்தாண்ட ... ராஜ குலதிலக அயோத்தி நாட்டு ராஜா வருகிறார்... வருகிறார்... பராக்! பராக்!!" எப்போதுமே கண்டனின் நாடகங்களில் காவலாளி குமரேசன்தான். வேல் பிடித்துப் பிடித்து தேய்ந்துபோன கையால் ஒரே ஒரு தடவை மட்டும் சின்ன மேளகாரி ஆவரங்கால் கமலாசினியின் கையைப் பிடித்து இழுத்தான். அத்துடன் குமரேசனின் நாடக வாழ்வும் சரி.

அன்றைய நாடகத்திலும் கமலாசினிதான் கதாநாயகி. நாடகம் நல்ல படியாக நடந்து முடிந்தது. மேடையையும் பிரித்துக் கொண்டு போய்விட்டார்கள். உச்சிப் பொழுது, முகத்தில் பூசிய முத்து வெள்ளை வியர்வையில் கரைந்து ஒழுக, ஆர்மோனியப் பெட்டியின் மீது குந்தியிருந்தாள் கமலாசினி. அருகில் பாகவதர் சிவக்கொழுந்து தலையில் கைவைத்தபடி.

சின்னமேளகாரிக்குப் பேசிய பணத்தைக் கொடுக்க நாடகம் வசூலாகவில்லை. அயோத்தி ராசாவாக நடித்த கண்டன் தலை மறைவாகிவிட்டான்.

"நீங்களே சொல்லுங்கோ பாப்பம்! கூத்தாடினதுக்குத்தான் கூலி

padippakam

தர வேண்டாம். கடைசி கார் பிடித்துவந்த காசையாகிலும் தரவேண்டாமோ?" சுற்றி நின்றவர்கள் கமாலாசினியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது தடுமாறினர். சிலர் கூத்தாடிகளென்று செருப்பைக் கழற்றி அடிப்பதற்குப் பதிலாக வார்த்தைகளால் விளாசினர்.

கடைசியில் வில்லன் நடிகன் கனகசிங்கந்தான் எங்கெல்லாமோ தேடி அலைந்து ஒருவாறு கண்டனைப் பிடித்து வந்தான். எவ்வளவு வாதாடியும் கண்டன் முழுப்பணத்தையும் தானே பொறுப்பெடுக்க மறுத்து விட்டான்.

முடிவாக கமலாசினியை ஆறு தடவைகள் கட்டிப் பிடித்தமைக்காக கண்டன் அறுபது ரூபாவும், கற்பழிப்புக் காட்சியில் வில்லன் கனகசிங்கம் மூன்று தடவைகள் ஆரத் தழுவியமைக்காக முப்பது ரூபாவும், இளவரசியைக் கைது செய்தபோது காவலாளி குமரேசன் வெறும் கையை மட்டும் பிடித்தமைக்காக ஐந்து ரூபாவும் கொடுத்து கமலாசினியை அனுப்பி வைத்தனர்.

கண்டனின் தாய் மணியாச்சிதான் காதுத் தோட்டை அடைவு வைத்து கமலாசினியின் பணத்தைக் கொடுத்துவிட்டு குடைக்கம்பால் கண்டனைச் சுழரச்சுழர அடித்தாள். "உங்களுக்கெல்லாம் நாடகமொரு கேடோடா?" என்று கேட்டு அவள் பேசிய தூஷணங்களைச் சகிக்க முடியாமல் குமரேசன் கண்களைச் சிலிர்த்துக் கொண்டான்.

"பாவி.... ! இதையெல்லாம் சொல்லி பெண் கலைஞர்களை இழிவுபடுத்தவா பார்க்கிறாய்? பெண்ணுரிமை என்னாவது?" என்றபடி யாரோ ஒரு நவயுக விமர்சகர் கண்முன் தோன்றுவது போலிருக்கவே பயக்கெடுதியுடன் அந்த நினைவுகளை ஒரு இருட்டறைக்குள் போட்டு மூடிக்கொண்டார்.

ஐயையோ.. அழகான சூரியகாந்திப் பூந்தோட்டங்கள், துள்ளியோடும் ரைன் நதியின் கிளைகள். இயற்கையின் வசீகரத் தோற்றங்களையெல்லாம் கோட்டை விட்டு விட்டோமே? பாழ்பட்ட கண்டனின் நினைவுகள் அற்புதமான பொழுதுகளைப் பறித்து விட்டனவே?" என்று அங்குமிங்கும் பாய்ந்து அலப்பாரித்தான்.

தொலைந்து போன ஒன்பது வருடங்களாக கனவிலும் தோன்றியிராத கண்டன் இன்று மட்டும் எதற்காக வந்தான்? என்பதற்கு ஒருவாறு விடை கிடைத்தது.

நேற்றிரவு தமிழ்க் கலைகளைப் பேணும் மாலையிலே நடைபெற்ற தனது வயலின் கச்சேரியும், பிரயாணச் செலவும் கிடைக்கப்


படிப்பகம்

பெறாத இன்றைய புகைவண்டிப் பயணமும் கண்டனோடும், கமலாசினியோடும் எவ்வளவு அழகாகப் பொருந்திவிடுகிறதென்பதை நினைத்ச் சிரித்துக் கொண்டான்.

அப்படியே புகைவண்டி ஓடும் தாளலயத்தைக் காது கொடுத்துக் கேட்டான் அது, "கண்டம் விட்டுக் கண்டம் போனாலும் கண்டன் கண்டன்தான்!" என்றே பாடுவதைப் போலிருந்தது. புகையிரத்தில் தானும் தாளம் போட்டபடியே நினைவுகளில் மூங்கிப் போனான்.

"குமேரசா! நீ உன் எண்ணங்களால் தமிழ்க் கலைகளை இம்சிக்க நினைக்கிறாயா?" மறுபடியும் அந்தப் பாழாய்ப் போன நவயுக விமர்சகரின் குரல் சன்னமாகக் கேட்டது.

"இல்லை ஐயா நமது கலைகளும், வாழ்வும், அவைகளுக்கான விமர்சனமும் எப்போதும் ஒரே கல்லிலேயே தடக்கித் தடக்கி விழுந்து கொண்டிருப்பதை.." என்று இவனும் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் குளிர் நீரை கண்ட விசர் நாய் போல விமர்சகர் வானத்தில் மறைவது தெரிந்தது. வெளியே பார்த்தான். காசல் என்ற தரிப்பு நிலையம் தனது பயணிகளுக்காக புகையிரதத்தை நிறுத்தி வைத்திருந்தது.

அங்குதான் முன்ஸ்டரும் அவர் மனைவியும் ஏறிக் கொண்டார்கள். முன் இருக்கைகள் கால் போட முடியாதவாறு பறி போய்விட்டாலும் குமரேசன் மரியாதையின் பொருட்டு ஒன்றுக்கு இரண்டு தடவைகள் தலையைக் கீழ் நோக்கி விழுத்தி எடுத்தான்.

எங்கெங்கோ புலம் பெயர்ந்து போனாலும் தேடிவந்து ஒட்டிக் கொள்ளும் சிறுமைச் சங்கதிகளோடு மல்லாடியபடியே வந்தவனுக்கு முன்ஸ்டரின் சந்திப்பு உலகத்தின் வேறொரு பக்கத்தைத் தூக்கிக் காட்டியது.

அழுக்குப் படராத இரண்டு துல்லியமான நீல விழிகள் கூரையைத் தொட்டுவிடும் உயரம். 65க்கும் 70க்கும் இடைப்பட்ட வயது. அவர் கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்தவர். ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி. சின்னச் சின்னச் சொற்களால் மாலை கட்டும் அளவிற்கு ஆங்கில அறிவு. ஆங்கிலம் தெரியாததால் அங்கு அவர் மனைவி மௌன விரதம் அனுஷ்டிக்க வேண்டியிருந்தது.

முன்ஸ்டர் ஒரு சிறிய சொக்கிலேற்றை சம்பிரதாய பூர்வமாய் நீட்டியதிலிருந்து ஆரம்பித்த சம்பாசனை கோப்பி அருந்தியபடியே பேசிக் கொள்ளுமளவிற்கு நீட்சி பெற்றிருந்தது. ஒரு ஜேர்மனியருடன்

இவ்வளவு விட்டாத்தியாகப் பேச முடியுமென முன்னர் அவன் நினைத்திருக்கவில்லை.

"நீர் டென்மார்க்கில் எத்தனை வருடங்களாக வாழ்கிறீர்..??"

"ஏறத்தாழ ஒன்பது வருடங்கள்!"

"உம்முடைய வேலை...??"

தெரியாத மனிதன்தானே வயலின் மேதை! திருமிகு. புகழ்தரு. குகக்குமரேசனார் என்று ஒரு இழுப்பு இழுத்துவிட மனது அகோரமாய்த் துடித்தது. எனினும் சிறு சில்மிஷங்களை அடக்கிக் கொண்டு, "காடு வெட்டுவது!" என்று ஊதியம் தரும் தன் தொழிலை விபரித்தான்.

"காடுகளை வெட்டாதே! ஒரு மரத்தைத் தறித்தால் பதிலுக்குத் தலையில் ஒரு முடி விழும்!' என்று வேடிக்கை செய்தார். குமரேசனும் தன் தலையை ஒரு முறை தடவிக் கொண்டான். அதில் நிறையக் காடுகளைத் தறித்து விட்டதுபோல ஒரு மெல்லுணர்வு தெரிந்தது.

முன்ஸ்டர் எங்கு பிரயாணம் செய்கிறார்? அவருடைய சகோதரியை 50 வருட இடை வெளிக்குப் பின் சந்திப்பதற்காகப் போய்க் கொண்டிருக்கிறார். கண்களில் அந்தப் பரபரப்பு தெரிந்தது. ஆனால் முகத்திலோ திட்டுத் திட்டாக சில வருத்தங்களும் இல்லாமலில்லை.

அடுத்த பக்கமாக இருந்த ஆசனத்தில் தெங்கம் பனை போன்ற ஒருவன் மல்லாந்து கிடந்தான். கண்களைக் கறுத்தச் சீலைத் துண்டால் மூடிக் கொண்டு, உறங்க முயற்சித்துக் கொண்டிருந்தான். அவனுடைய காதில் வேரோடியிருந்த இரத்த நரம்புகள் அவன் உறங்கமுடியாத சுய பிரச்சனைகளில் மூழ்கியிருப்பதைக் காட்டியது.

"இரண்டு ஜேர்மனியும் இணைந்த பின் உங்களுடைய இடர்ப்பாடுகளெல்லாம் முடிவடைந்திருக்குமென நினைக்கிறேன்..." என்று ஆரம்பித்த குமரேசனை மறித்துக் கொண்டு, இப்படியும் அப்படியும் என்பது போல தோள்களைக் குலுக்கினார்.

"ஒரு மேற்கு ஜேர்மனியனுக்கு முன்னால் நீ எத்தகைய கணிப்புப் பெறுகிறாயோ அதே மதிப்புத்தான் எனக்கும். மேற்கு ஜேர்மனியில் எனக்கும் உனக்கும் பெறுமதி ஒன்றுதான்?" வார்த்தைகளில் வருத்தம் மெழுகியிருந்தது.

''உங்களுடைய வருத்தத்தோடு வரலாறும் கலந்திருக்கு.. ஏனென்றால் எனக்கும் கொஞ்ச வரலாறு தெரியும் ஒரு சந்தேகம் கேட்கலாமா...?''

"ம்... தாராளமாக..!"

"ஜேர்மனியர்தான் கலப்படமில்லாத ஆரியர்! உலகத்திலேயே உயர்ந்த இனம்! என்று ஹிட்லர் பேசியதை ஒரு காலத்தில் ஜேர்மனியர்கள் நம்பினார்கள். அதை நீங்களும்...?"

முன்ஸ்டரின் வாயில் நெடிய சிரிப்பு நின்றது. ''மேற்கு ஜேர்மனியரும், கிழக்கு ஜேர்மனியரும் ஒன்றுதான். சகோதரர்கள்தான்! பெறுமதியும் ஒன்றே! ஆனால் இவையெல்லாம் எழுத்திலும், வெறும் வாய்ப் பேச்சுகளிலும் மட்டும்தான்! நடை முறையில் எதுவுமே கிடையாது!" முன்ஸ்டர் அத்துடன் நிறுத்தவில்லை. இரு பகுதியும் இணைந்து போவதில் உள்ள நுட்பமான சிரமங்களை நெடு நேரமாகப் பேசியபடியே சென்றார். சாட்சியாகப் பல சிறிய புகையிரத நிலையங்கள் சடசடத்து மறைந்தன.

''ஹிட்லர் சொன்ன கலப்படமில்லாத ஆரியம் என்பது உண்மையான வார்த்தையா? அப்படியானால் அந்த ஆரியம் இன்று ஜேர்மனியின் இன்னொரு பகுதி மக்களுக்கு மட்டும் ஏன் மறுக்கப்படுகிறது? ஒரு சுவரும் ஐம்பது ஆண்டுகளும் ஒரு மக்கள் குழுவை இரண்டாவது இனமாக்கி விடுமா?" என்று முன்ஸ்டரே மறுபடியும் கேட்டார். குமரேசனோ இந்தக் கேள்வியை தனக்குத் தெரிந்தவரிடையே எப்படி எடுத்துச் செல்வது? என்ற வழி வகை தெரியாதவனாய் மௌனித்திருந்தான்.

"என்றாலும் உமக்கும் சில நல்ல செய்திகளைக் கூறலாமென்று நினைக்கிறேன். இனி வரும் உலகத்தில் கறுப்பர் வெள்ளையர் என்ற பேதம் கடும் உக்கிரமடையுமென்று நான் நினைக்கவில்லை. பொருளாதாரத்தையும், தொழில் நுட்பத்தையும் கையில் வைத்திருப்போர் ஒரு பிரிவு. அது இல்லாதவர்கள் இன்னொரு பிரிவுமாக உலகில் இரண்டு பெரும் தட்டுக்களே இருக்கும்.

முன்ஸ்டரின் நீலக் கண்களையே ஊடுருவிக் கொண்டிருந்த குமரேசன், "சோட்சிவின்" (கருப்பு பன்றி) இகழ்ச்சிகளால் ஏற்கெனவே ஒடிந்து போன தன் நெஞ்சை ஒரு முறை ஆறுதலாக நீவிக் கொண்டான். 'கறுப்பர், வெள்ளையர் என்ற பேதம் இனிமேலாவது கடுமையடையாதென்று நீங்கள் நம்புகிறீகளா? அதற்கு என்ன ஆதாரம்?"

padippakam

“நிறைய இருக்கு! தென்னாபிரிக்காவிலிருக்கும் கறுப்பரையும், வெள்ளையரையும் ஒரே சமூகமாக உலகம் அங்கீகரித்திருக்கு! எங்களை ஏற்றுக் கொள்ளக் கூச்சப்படுற மேற்கு ஜேர்மனியர் கூட அதை அங்கீகரிக்கிறார்களே? பொஸ்னியாவிலும், செச்சனியாவிலும் நடப்பது கறுப்பர் வெள்ளையர் பிரச்சனையல்லவே? எப்போதுமே பிரச்சனையின் மையப் புள்ளி அதிகாரம் தான். அதுதான் பிரச்சனைகளின் தாய்வீடு!” என்று சிறிய மேசையின் மீது உறுதியாக ஒரு தட்டு தட்டினார். பின் கையைக் காட்டியபடியே சிறுநீர் கழிப்பதற்காக எழுந்து போய்விட்டார். தூரத்தே ஹம்பேக் நகரம் சில்க்கில் வார்க்கப்பட்ட வர்ணங்களாய்த் தெரிந்தது.

அந்கச் சிறு பொழுதிற்குள் மனக் குகையின் இருட் காடுகளை ஒரு கோடாரி, “பட்..! பட்..!”டென்று தறிக்க ஆரம்பித்திருந்தது. ஏதோ சில வெளிச்சங்கள் மனதில் பிடிபட்டன.

“சீட்டும், வட்டியும் நீயா நானா போட்டிகளுமாக சதுராடும் சமூகத்தில் இதையெல்லாம் யாரிடம் கொண்டு போய்க் கொட்டுவது? ஆடையில்லாத தேசத்தில் கோவணங்கட்டினால் அவனைப் பைத்தியம் என்றல்லவா கூறுவார்கள்?” என்பது போன்ற சில கேள்விகள் எண்ணங்களை மேலும் முன் நகர விடாது தடுத்தன. ஆடுகின்ற ஒரு தராசில் எதிரெதிராக வல்வெட்டிக் கண்டனும், முன்ஸ்டரும் அமர்ந்திருக்கும் பிரமையானது, ஒரு பிரபல ஓவியரின் கோட்டுப் படம் போலத் தெரிந்தது.

பெட்டிகளைக் கீழே இறக்கிக் கொண்டே முன்ஸ்டரும், மனைவியும் அவனின் கையைப் பற்றி அன்போடு விடை பெற்றனர். ஒரு சில நிமிடங்களில் புகையிரதம் ஹம்பேர்க் அல்ரோனாவை நோக்கி நகர்ந்தது.

குறுக்காகப் போடப்பட்ட சுவர் ஒரு நாட்டின் மக்களையே இணைய முடியாது பிரித்து விட்டிருக்கும் போது ஆயிரக் கணக்கான மைல்களைத் தாண்டி, கண்டங்களாலும் சமுத்திரங்களாலும் பிரிந்து போயிருக்கும் தன் தாய் நாட்டையும், புலம் பெயர் மக்களையும் இணைந்த ஜேர்மனியின் நெருக்கடிகளோடு ஒரு முறை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான். எதிர் காலத்திற்காக நிறைய பணியாற்ற வேண்டியிருப்பது தெரிந்தது.

●



படிப்பகம்

# துரும்பார் துரும்பாட்டம்!

துரும்பு தான் வாழ்ந்த இடத்தில் உதைபட்டு எங்கெல்லாமோ சுற்றி, எங்கே விழாலாமென்று தெரியாமல் வானமெங்கும் பறந்து, கடைசியில் ஒருவாறு ஐரோப்பாவில் ஓர் நாட்டில் அகதியாக வந்து விழுந்து கொண்டது.

இதுவரை நடந்தவைகளை நினைக்க யாவுமே அழிந்தும் அழியாததும் எரிந்தும் எரியாததுமான படச்சுருள் போல இடையிடையில் தோன்றி மறைந்தன. நாட்டில் முன்னரும் பிரச்சனைகள் நடந்தன. துரும்பும் பாதுகாப்பு தேடி பக்கத்து ஊருக்கும்; பின் அதற்குப் பக்கத்து ஊருக்கும் புலம்பெயர்ந்து போனதுதான். ஆனால் இப்படி கண்டம் விட்டுக் கண்டம் தூக்கியெறியப்படுமென அது முன்னரே நினைக்கவில்லை.

இங்கு வந்த துரும்பு, தனக்கு முன்பே பிரச்சனைகளால் பாரம் குறைந்த தூசுகள் அதிவேகமாகப் பறந்துவந்து சத்தமில்லாமல் குடியேறியிருப்பதைக் கண்டு கொண்டது. அவைகளோடு ஒப்பிட்டால் தான் பாரம் கூடியவன் என்று பெருமை கொண்டது. நாட்கள் போகப் போக துரும்பைவிட பிரச்சனைகளால் அகோரப் பட்டவையும் அதைவிடப் பாரமான தடிகளும், மரங்களும் சிலவேளைகளில் வேரோடு மரங்களுமாக பறந்து வந்தும், கப்பலில் வந்தும், முழு விமானத்தோடு நிறைந்து வந்தும் விழுவதைக் கண்டு துரும்பு பயந்தே போனது.

துரும்பு வருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே இங்கு வெள்ளை நிறமான ஊரிகள் படிந்திருந்தன. அவை இங்கு கொடியேற்றி வைத்திருந்தன. இதையே தமது தாய் நாடென்றும் பறைதட்டின. வந்தேறு குடிகளான தூசுகளையும் துரும்புகளையும் தட்டி ஒதுக்கி தம்

நாட்டை வெள்ளை நிற ஊரிகளின் நாடாகவே வைத்திருக்க விரும்பின. இதனால் அவற்றில் சில, இங்குமங்குமாக துரும்புகளின் வீடுகளைத் தீ மூட்ட, துரும்பின் வாழ்வு இங்கும் கூட பறப்பதும் விழுவதுமாகிப் போனது.

இப்படி வெள்ளைக்கார ஊரிகள் வெறுத்து ஒதுக்கினாலும் வெண்மையான ஊரிகளின் ஊரில் இருப்பதால் துரும்புகள் இடைக்கிடை தம்மை மறந்து பெருமை கொள்ளும். அடிக்கடி மூளையில் புளிக்குத்த பறந்த வந்த கதைகளை மறந்து போய் தூசுகள் துரும்புகளை இகழ, துரும்புகள் மரங்களோடு மோத இப்படியே யாவும் மோதிச் சிதறுவனவாயின. இவ்வளவு தூரம் பறந்து வந்தும் திருந்திக் கொள்ளாததால் தூசு துரும்புகளைத் தட்டிச் சுத்தப்படுத்த ஊரிகள் பன்னிரண்டு நட்சத்திரங்களில் மாலை கோர்த்து ஓர் பொது விளக்குமாற்றைச் செய்து முடித்தன. இதனால் வரக்கூடிய வில்லங்கங்களைப் புரியாத தூசுகளும் துரும்புகளும் தம் மனம் போனபடியெல்லாம் பறந்து திரிந்தன.

காலம் ஓடியது. இப்பொழுது பழைய தூசிகள், இடைக்காலத் துரும்புகள், புதிய மரக்கட்டைகளெனப் பிரிந்து கிடந்தாலும் ஊரிகளின் பார்வையில் யாவுமே, "துரும்புகள்." துரும்புகளின் பிரச்சனைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்ல, ஊரிகள் தமக்குள் மேலும் மேலும் சட்டங்களிட்டு புதிதாகத் துரும்புகள் வந்தால் பொசுங்கும்படியாக தம்மைச் சூடாக்கிக்கொண்டன. ஆனால் இங்குள்ள துரும்புகளோ ஊரிகளின் புழுதிச் சாம்பலில் புரண்டு, புதிய குடிமைகள் என்னும் பட்டை நாமம் தீட்டி, தாமும் அசல் ஊரிகளேயெனவும் கொக்கரித்தன.

இவைகளின் கண்மன் தெரியாத ஆட்டங்களால் பிறந்த நாட்டில் அண்ணன் தம்பிகளாகப் பழகிய உறவுகளைக் கூட காப்பாற்ற வழியின்றி விலகிப் போயின. சில துரும்புகள் ஒன்றோடொன்று நான்கு நாட்களுக்கு நன்றாகப் பழகும், சிரிக்கும், பேசும், தம் பிறந்த நாட்களுக்கும் கூப்பிட்டு மகிழும். பிறகு திடீரென முகம் பார்த்து சிரிக்காமல் எங்கோ பார்த்தபடி போகும். அதை "துரும்பு நோயென" சிலர் சொன்னார்கள். விளங்காத்தனமெனச் சில பட்டமரங்கள் கவலைப்பட்டன.

ஒரு துரும்பு யாரையோ பார்த்து என்னத்தையோ சொல்லும் சம்மந்தமில்லாத மற்ற துரும்பு வேறெதையோ விளங்கிக் கொள்ளும். மூஞ்சை நீட்டும் பிரிந்து போகும். போன துரும்பே மூன்று நான்கு மாதங்களின் பின் ஏனோ மறுபடியும் சிரித்து நெருங்கும். அது மீண்டும் சிரிக்குதே என்று இந்தத் துரும்பு மகிழ; அதற்குள் வேறொரு துரும்பு

வேறென்னத்தையோ விளங்கி முகத்தை மறுபக்கம் இழுத்தபடி போகும். இப்படியே காரணம் புரியாதபடி ஓடுவதும் விடுவதுமாக துரும்புகளின் வெளிநாட்டுச் சீவியம்.

இங்கு தூக்கி வீசப்பட்டபோது துரும்புகள் கையிலும் மடியிலும் ஒன்றுமில்லாமல்தான் வந்து வீழ்ந்தன. அதனால் சில துரும்புகளுக்கு ஏக மகிழ்ச்சி. பழைய குப்பைகளில் காலகாலமாகக் கிடந்து இற்றுப்போன துரும்புகள் புதிதாக விழுந்திருக்கும் ஊரிநாடுகளின் சூழலால் கவரப்பட்டு, இனியாவது தம்மைப் புதுப்பித்துக் கொள்ளுமென தம்முள் எண்ணி மகிழ்ந்தன.

ஆனால் நடந்ததெல்லாம் தலை கீழாகவே இருந்தன. சில நாட்களில் துரும்புகள் தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ள பல அளவுகோல்களையும், மட்டக் கம்புகளையும் எங்கிருந்தோவெல்லாம் தருவித்துக் கொண்டன. இவற்றில் சில ஆயிரமாயிரம் ஆண்டுகளாக களிம்பேறிப்போன லோட்டாக்கள். நெளிந்து, பாசி படிந்து, நாற்றமடிக்கும் அளவுகோல்கள். அந்தப் பழைய லோட்டாக்களில் ஏந்திய நீரில் குளித்ததால் சில துரும்புகளுக்குப் புதிய புதிய சிலிர்ப்புக்கள் உண்டாயின. லோட்டா நீர் செய்த வேலையால் அவை தம்மையும் மற்றவரையும் வேறுபடுத்தி உயர்ந்த தாழ்ந்த படிக்கட்டுகளாக யாவற்றையுமே அமைத்துக் கொண்டன.

இப்படியாக துரும்புகளின் குளறுபடிகளினால் வெறுத்து மனங்கருகிய வேறு சில துரும்புகள் எங்கு போயினும் நாம் திருந்தமாட்டோமென எண்ணிச் சோர்ந்து, படுத்த படுக்கையாய்க் கிடந்தன. அவ்வேளை இன்னும் சில தூசுகளோ சோர்ந்து கிடந்த துரும்புகளின் சளிக்கோர்த்த நாசிகளில் புகுந்து, அவைகளையும் சன்னமாக தும்ம வைத்தன. நாசரிப்பாலும், தும்மலாலும் மேலே கிளம்பிய துரும்புகளில் பல "இனி பாருங்கள் படுத்துக் கிடப்போருக்கும் சட்டென விடிவு கிடைக்கும்" என எண்ணியெண்ணி மகிழ்ந்தன. தும்மலே விடிவெனக் கண்டு மெய் சிலிர்த்தன. வேகமாக ஓடிச் சென்று மற்றவர்கள் படலைகளைத் தட்டி மோதின. இதனால் எங்கும் ஜலதோஷங்களும் தும்மல்களுமே பரவலாயின.

ஒரு நாளில் உலகத்தைப் புரிந்து, அதிமேதாவிகளாகிப் போன தும்மல் துரும்புகள் "துயரத்திற்கெல்லாம் எங்கோ ஓர் இருள் கிடங்கில் நரகத்தின் அடியில் கிடப்பவன்தான் காரணம்" எனவும் கற்பித்துத் திரிந்தன. நரகத்தில் கிடப்போனால் பிடிக்கப்பட்டவரென இவரை அவரும். அவரை இவரும் தூற்ற நரகலோகம் நரகலோகமாகவே கிடக்க இவையோ வாழ்க்கையை நரகலோகமாக்கி மேலும் மேலும் படிக்கட்டுக்களை அதிகரித்துச் சென்றன.

"அட துரும்புகளே, நீங்கள் நரகக் குழியில் கிடப்பவர் பேரிலும் பழைய லோட்டாக்களின் பேரிலும், பிரிந்து போவதைவிட, எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே நோக்கில் கைகளை முறுக்கினால் கயிறு போல பலம் பெறுவீர்களே! இதைக்கூட அறிய முடியாது மூளை செத்துக் கிடக்கிறீர்களே! உங்களுக்கு விடிவு தர வானத்திலிருந்து ஒருவரை அனுப்புவது எப்பொழுதுமே முடியாத காரியமல்லவா?" என்று வானத்திலிருந்து சில அசரீரீகள் இடி முழக்கங்களாக, மழை வடிக்கும் கண்ணீராக, பெருமூச்சுப் புயல்களாக, குமுறி வெடிக்கும் எரிமலைகளாக வெவ்வேறு வடிவங்களில் பீறிட்டு வெளிவந்தன. நல்ல வேளையாக இவைகளின் மொழிகளை விளங்கிக் கொள்ளக்கூடிய அளவிற்கு துரும்புகளுக்கு அறிவோ, கேட்கக்கூடியபடி கூர்மையான காதுகளோ படைக்கப் பட்டிருக்கவில்லை.

இவை இப்படியிருக்க இங்கும் துரும்புகள் குட்டிகள் போடுவதில் விண்ணாதி விண்ணர்களாக இருந்தன. இதனால் வேகமாக குட்டிகள் போடுவதில் நாட்டமில்லாத ஊரிகளுக்கோ ஏகப்பட்ட அச்சம். துரும்புகள் குறைந்தது தம்மை மூன்றாகவோ அல்லது ஐந்தாகவோ அதிகரித்துக் கொண்டன. ஆரம்பத்தில் இதனால் கை நிறைய பணம் கிடைத்தது. ஆனால் துரும்புகளின் குட்டிகள் பெரிதாக வளரவளர போதுமடா சாமி என்ற அளவிற்குப் புதுப்புதுச் சிக்கல்கள் தோன்றின.

துரும்புகளின் பழைய பாரம்பரியங்கள், அவை ஆசையுடன் முகரும் குப்பை கூளங்களின் வாசனைகளால் வரும் சுகந்தம் எதையுமே அறியாது துரும்புக் குட்டிகளோ புதிது புதிதாய் மேலைத் தேய ஆட்டம் போட்டன. குப்பை கூளங்களால் கட்டப்பட்ட துரும்புகளின் காலத்திற்கொவ்வாத சில பாரம்பரியப் படிக்கட்டுகளை அறிய வாய்ப்பில்லாத குட்டித் துரும்புகளுக்கும்; அப்படிக் கட்டுக்களே கதியெனக் கிடக்கும் கிழட்டுத் துரும்புகளுக்கும் நாளுக்கு நாள் இடைவெளி பெருக அதனால் உண்டான தலையிடியால் துரும்புகள் தாம் முதல் முதலில் பிறந்த இடத்தில் நடக்கும் பிரச்சனைகளையும் தமக்கிருக்கும் கடமைகளையும் தீரவே மறந்தன. அது போலவே இங்குள்ள ஊரிகளினால் வரக்கூடிய ஆபத்தையும் மறந்தன. வேறெங்கோ பறந்து திரிந்தன. நாடு விட்டு நாடுகள் ஓடின. நகரங்கள் மாறின, குடித்தன, வெறித்தன, குடும்பம் பெருக்கின, தூக்குப்போட்டன, தீ மூட்டின..

பௌதீக விதிப்படி எப்போதும் துரும்புகளாகப் பட்டவை தரையில் படுத்துக் கிடப்பதே இயல்பு. அவை தாமாகச் செயற்பட வலுவற்றவை. காற்று வந்து ஊதினால் போதும் தம்மை மறந்து சுழன்று ஆட்டம் போடுவன. பின் தாமாகவே படுத்துக் கொள்வன. இதை சமூக விஞ்ஞானிகள், ''துரும்பார் துரும்பாட்டம்'' என்று

வரைவிலக்கணப் படுத்தினர். ஆனால் இந்தக் காற்று விசையின் நடனங்களைப் புறக்கணித்து, புதிதாகப் பிறந்த துரும்புகள் தாமாகவே வேறு வேறான பாதைகளில் பறக்க முயன்றபோது விதிகள் உடைந்தன. லோட்டாக்கள் நசிந்தன. இதனால் கோபமடைந்த பழைய துரும்புகள் விதிகளைக் காக்க பல வலுவான அத்திவாரங்களைப் போட்டன. தம்மைச் சுற்றி வலிய பாதுகாப்புச் சுவர்களை எழுப்பின.

விட்டேனா பார் என சில துரும்புகள் பணத்தால் விடிவு காண நினைத்து பணக்கடலில் வேகமாக மூழ்கிச் சென்றன. அங்கு போயும் விடிவு காண முடியாமல் சோர்ந்து நின்றன. பணம்மெத்தி சில தங்காபிஷேகம் செய்து மெய்மறந்து, பின் அதிலும் விடிவின்றி நின்றன. இனி எதிலாவது மாறினால்தான் விடிவு கிடைக்குமென எண்ணி அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்கும் மாறி மாறி ஓடிப் பார்த்தன. எந்த வழியிலும் எங்கும் விடிவின்றி அலைந்தன. வேறு சில உழைத்து ஓடாகிப்போக மற்றவை சற்றலைட்டுக்களைப் பூட்டிவிட்டு அதன் வழியே விடிவுவந்து விழுமெனவும் காத்துக்கிடன்தன.

நாளும் நாளும் தேசத்தில் வெடிக்கும் பூகம்பத்தின் ஒலியிலும் தம்மைப் புரியாத புலம்பெயர் துரும்புகளுக்கு இனி நாமாவது, எதையாவது புரிய வைப்போம் என்ற ஆதங்கத்தில் சில பறவைகள் வானத்தில் பறந்து பறந்து எதையெதையோ பாடின, பேசின, குரலெடுத்துக் கூவின. அவற்றின் ஒவ்வொரு ஒலியிலும் ஒவ்வொரு செய்தி மறைந்திருந்தது.

"துரும்புகளே! ஊரிகள் உங்கள் தேசத்திற்குள் புகுந்து உங்களையே அடிமைகொண்ட நூற்றாண்டுகளிலிருந்தே நீங்கள் கதியற்ற துரும்புகளாக்கப்பட்டீர்கள் என்பதை மறந்துவிட்டீர்களா?' என்று அவை கேட்டன. வெள்ளைக்கார ஊரிகள் உலகத்தை இரு தடவைகள் யுத்தப்படுத்தி ஊழித்தாண்டவமாடியபோது, உலகமெல்லாம் துரும்புகள் பட்டபாட்டை உரத்த குரலில் மொழிந்தன. இன்னொரு தடவை உலகைப் போர் நெருப்பு மூடினால் முதலில் தீப்பிடிக்க ஆரம்பிப்பது துரும்புகளில் இருந்துதானென எச்சரித்தன. பாழான விஞ்ஞான மருந்துகளும், குரூர நச்சுவாயுக்களும் பரிசீலனைப் படுத்தப்பட்ட சில மனிதர்கள் தேவைப்படுவதை அறியாது, அதற்கு பயன்பட்டுப் போவதற்கான பாழ்பட்ட வாழ்க்கையையே தொடர்ந்தும் வாழ முயற்சிக்கலாமா என்றும் எச்சரித்தன. வாழ்வழிந்து, வரலாறழிந்து, உண்மைக்கும் பொய்மைக்கும் பேதமறியாது கிடக்கும் துரும்புகளை நோக்கி அவை சுதந்திரப் பாடல்களை கண்ணீரோடு பாடின.

அழுது குழறினாலும், எதைப் பாடினாலும், எழுதினாலும் ஏது பயன்? எல்லா மொழிகளுமே புறக்குடத்து நீராகிப் போக, துரும்புகளோ

மாற்றமின்றி தம் வழி தொடர்ந்தன. பூமியும் செக்குமாடாய்ச் சுழன்றது. வருடங்களும் வாழ்வும் கூட அப்படியே. என்றோ ஒரு நாள் துரும்புகள் புதிதாகச் சிந்திக்கும்; ஒன்றாகக் கை கோர்க்கும். தம்மைப் பலமான வடமாகத் திரித்துக்கொள்ளும். அந்தப் பலமான கயிற்றால் வரலாற்றையும் புதிய தடத்தில் இழுத்துச் செல்லலாம் என்ற நம்பிக்கையோடு சுதந்திரப் பறவைகளும் களைப்பின்றியே பாடிக் கொண்டிருந்தன.

(யாவும் கற்பனை)

●



படிப்பகம்

# மின்னல் கொடிகள்!

காலையிலேயே எழுந்து நகரத்தை ஒரு முறை வலம் வந்தாலே போதும் எனது பை வெற்றுப் போத்தல்களால் நிறைந்துவிடுகிறது. அவற்றை விற்றுப் பியர் வேண்டி, நடந்த களை தீர்ப்பேன். பின் குடித்து முடித்த வெற்றுப் போத்தல்களையே மறுபடியும் பியருக்காக விற்பதும், தாகம் தீர்ப்பதுமே தினசரி வாழ்வு.

போதைக் கதிர்ப்பால் ஈரல் குலை புடைத்தெழும் கால்கள் தள்ளாட கடற்கரைப் பக்கமாக ஊர்ந்து வருவேன். இப்படியே ஆடியபடி அலைகளும் வெறி போட்டுத் துள்ளும் வேடிக்கைக் காட்சிகளைச் சுவைப்பதில் ஏக மகிழ்ச்சி.

இன்றோ மேகங்களைப் பார்த்தபடி, மணலில் காலெறிந்து கிடந்தேன். பதினெட்டு வயதில் பறிகொடுத்த காதலி இப்போது மூன்று பிள்ளைகளும்; வயிற்றிலொன்றுமாய் வந்து நிற்பதாக சில கொத்து மேகங்கள் விளையாட்டுக் காட்டின.

இந்த மேகங்களைப்போல தூக்கிப் போட்ட கூந்தல்தானே ஜோதிக்கும் இருந்ததென நினைக்க விரல்களும் தாடியைக் கிளறின. அதிலிருந்து எழுந்த மதுவின் புளிப்பு நாற்றம் நாசியைக் குடைந்தது. அப்போதுதான் தாடியில் வீசும் நெடி பற்றி நேற்றே ஆனர்ஸ் சொன்னதும் நினைவுக்கு வருகிறது. அவன் வரமுன் தாடியைக் கடலிலேயே கழுவிக்கொள்ள எண்ணுகிறேன்.

ஜோதியை இழந்து போன நாளிலிருந்தே இப்படியாகிப் போனது வாழ்வு. கடல் ஆட நானும் ஆடியும், தனிமையில் இருந்து காற்றுடன் பேசியும், நூலாக விழும் மழைக்குள் படுத்தும் எதிலும் அவளையே தேடுவேன். அப்பொழுதெல்லாம் என்னோடு சேர்ந்து அம்மாவும் அழுவாள்.

padippakam

"என்ரை வயித்தை இப்பிடியுமொரு பிறப்போ..?" ஓங்கி வயிற்றில் குத்தி, பின் தானே ஒப்பாரி வைத்து அழுது, சீந்தி.. கடைசியாக ஒரு நாள் எனக்குப் புத்தி சொல்ல ஒப்பிலாமணிய வாத்தியாரைக் கூட்டி வந்து நிற்பாட்டினாள்.

"அடேய் கவிஞா! தென்றலை நிலவை மறந்து; முதலில் சோத்துக்கு வழிதேடு!" என்று எச்சரித்தார். ஓவியக் கலையால் வாழ்க்கையைச் சுட்டுக்கொண்டு, மாற்றிக் கட்ட ஒரு வேட்டியில்லாத வறுமையால் தொய்ந்திருந்தது அவர் குரல்.

"அம்மாவோடு சேர்ந்து நீங்களும் என்னைச் சோத்துக்காவே வாழச் சொல்கிறீர்களா? நீங்கள் சொல்லும் வாழ்க்கையைத்தான் இங்கு நிறையப்பேர் வாழ்கிறார்களே!" என்று சிரித்தேன். அதன் பின் புத்தி சொல்ல வருவோரும் நின்று போக, வாழ்வு தொடர்ந்தது.

அப்போதெல்லாம் மண்டைக் கபாலத்திற்குள் சுரக்கும் அமிலங்கள் புதுமை, புரட்சியென்றே ஓலமிட வைக்கும். கல்லும் செரித்து நீராகும் இளமை. மக்கள் பாடகன் என்று எனக்கு நானே எழுச்சியுடன் பெயர் புனைந்தேன்.

"மக்களை, வாழ்க்கையைப் பாட வாருங்கள்!" என்றபடி இளங்கன்றாய்த் துள்ளிக் குதித்து, ஒரு நாள் பழங்கவி மின்னல் கொடியின் சால்வையைப் பற்றியபோது, என் அகவை பதினேழில் நின்றது.

கோபமின்றி மின்னல் கொடி சிரித்தது. கீழே கிடந்த ஒட்டு பீடியைத் தூக்கித் தீ மூட்டியது. "தம்பீ.. தூள்ளாதே! பொதி சுமக்கப் போகிறாய்! எங்கே இதே கொள்கையுடன் நாலு வருடங்களுக்குப் பிறகு வா! அப்போது கவிபாடுவது பற்றி உட்கார்ந்து பேசுவோம்! என்றது. அதற்கு மேல் பேசவில்லை. சொண்டுக்குள் ஒரு புலுண்டிப்போன சிரிப்பு. அவ்வளவுதான் வேகமாய் ஓடிவிட்டது.

பிறகுதான் எனக்கும் ஜோதிக்கும் காதல் வந்தது–

கவிதையை ஜோதிக்குள் படித்தேன். அவளின் அழகே கவிதையின் உயிராகத் தெரிந்தது. ஈட்டி பாய்ந்தது போல ஒரு சுடர் எப்போதும் அவள்மீது நாதமாய் நிற்கும். அது மற்றவர்களுக்குத் தெரியவில்லை. எனக்கும் என்னால் அவளுக்கும் தெரியவர அதுவே காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கி..

காதல் நெருப்பு உள்ளும் புறமும் சுட்டுப் புடம் போட நாலு



படிப்பகம்

முழுத்தில் மாறுகரை வேஷ்டி, தோல் செருப்பு, வெள்ளைச் சேட்டுமாக மெருகு பெற்றேன். ஜோதி என் மீது பிரகாசித்தாள்.

ஊரூராய் ஓடித்திரியும் மின்னல்கொடி அப்போது பார்த்து மீண்டும் தேடிவந்தது. என் கவிதைகளிலிருந்த சிவப்பு மெல்லக் கரைந்து, செங்கோடாய்ப் போவதைச் சுட்டிக்காட்ட வந்திருப்பதாகச் சொன்னது." உனக்கு நான் தந்த நாலு வருட அவகாசம் அதிகம் போலிருக்கிறதே?" என்று அது ஆரம்பிக்கமுன்; பிறகு பார்க்கலாமென அனுப்பிவிட்டேன்.

ஆனால் மனம் கேட்குமா?" வீடுவந்து கவிதையைத் திருப்பித் திருப்பித் பார்த்தேன். காதலும் கவிதைகளும் நிலவாய்க் குளிர்ந்தன. நெருப்பெடுத்த எண்ணங்களெல்லாம் காதல் கடலில் நீலமும் சிவப்புமாய் கரைந்து வடிவதாய்ப் பட்டது.

"உயிரை உயிரோடு கலக்க முடியுமா?" என்று சில கவிதை வரிகள் கேட்க, "முடியும்!" என்று எழுதியிருந்தது ஜோதிக்கும் எனக்குமிருந்த உறவு. தேகங்களைத் தீண்டி கொள்ளாத தூய நெருப்பாய்க் கிடந்த காதலே கவிதைக்கு உயிராய் நிற்பதும் தெரிந்தது.

இதுவும் சொற்ப காலந்தான். அந்தக் காதல் அம்பலமேறி, எல்லோரும் படிக்க வரும் பொது நூல்நிலையமானபோது, ஜோதிக்கு வீட்டில் இரும்புக் கூட்டைப் போட்டு விட்டார்கள். அதற்குப் பிறகுதான் மின்னல் கொடியுடன் ஆலமரத்தடியில் உட்கார்ந்து பேச முடிந்தது.

"உனக்கு இப்போதும் பெயர் மக்கள் பாடகனா..?" மின்னல் கொடியின் கேள்விக்கும் பதில் கூறச் சிரமப்பட்டேன்.

"தம்பி! புரட்சி எண்ணங்கள் ஜீவனம் பண்ணுவது வெறும் இலக்கியங்களில்தான்! வாழ்விற்குள் அல்ல.." மின்னல் கொடி தோள்களைத் தட்டி, உலகிற்குள் இழுத்தது. முதன்முதலாக அதனுடன் சேர்ந்து பீடி பற்றவைத்துக் கொண்டேன். பின் நெடுநேரம் பேசினோம்.

எழுத்தை வழ்க்கையாக்கி, மின்னல் கொடிகளானோரை பாரதி முதல் பட்டியல் போட்டுக் காட்டியது. "புதுமை என்பது சமுதாயத்தின் சின்ன வீடென்பதையாவது உன்னால் விளங்கிக் கொள்ள முடிகிறதா?"

"என்ன சொல்கிறாய்? சீர்த்திருத்தங்கள் இரகசியமாக அனுபவிக்கப்படும் ஆசை நாயகிகளா?"

"நிச்சயமாக! சீர்த்திருத்தங்களை விரும்பாதவர்கள் இங்கு யார் இருக்கிறார்கள் சொல்? மாற்றங்களையும், புதுமைகளையும் மனதிற்குள் மட்டும் எண்ணியெண்ணி சுவைப்பதுதானே வாழ்க்கையின் ஒரே இன்பம்? தனது இரகசிய இன்பங்களை யாராவது பகிரங்கமாகத் தொடுகிற போதுதான் சமூகம் விழித்துக் கொள்கிறது. அவர்களைத்தான் மின்னல் கொடிகளாக, தூக்கியும் வீசுகிறது.

''செயலாக்க முடியாதவைகளைக் கவியாக்குவதை விட, இயற்கையின் இன்பத்தில் என் ஆத்மம் குளிப்பது தவறா..? ம்..! என்ன யோசிக்கிறாய்? உன்னைத்தான் கேட்கிறேன். மீண்டும் இடித்தது.

சரிதான், இந்தக் கவிஞன் ஏன் சமூகத்தால் மின்னல் கொடியாக்கப்பட்டான் என்பதை ஒருவாறு புரிந்துகொண்டவனாய்," அதற்காக மக்களை மறந்து கவிபாட முடியுமா?" என்று கேட்டேன். சிரித்தது.

"உனக்கு மேலும் பத்து வருட அனுபவம் வரவேண்டியிருக்கிறது! அதன் பின்பு வா! அப்போது இயற்கையின் ஒவ்வொரு உரோமமுமே ஒவ்வொரு மனிதனும் என்பதைக் கண்டிருப்பாய். இயற்கையின் நேசமும் மானிட நேசமும் வேறு வேறல்ல என்பதை நீ அறியும்போது மீண்டும் சந்திப்போம்." மின்னல்கொடி விடைவாங்கியது.

பத்து மாதங்கள்கூட ஆகியிருக்கவில்லை, வாழ்க்கைக்குள் அந்தச் செய்தி மெல்லத் தடக்குப்பட்டது. ஏமாற்றமான அனுபவங்களால் மக்கள் பாடகன் என்ற பெயரை நானாகவே அழித்துக் கொண்டு, மின்னல் கொடியைத் தேடித் திரிந்தேன். அதற்குள் அது ஊரைவிட்டே ஓடிவிட்டது.

அதன்பின் மின்னல் கொடி போல அலைவதே எனக்கும் வாழ்வானது. அதுவும் ஒரு சோகமான கதைதான்.

ஜோதியும் நானும் சேர வேண்டுமானால் கடினமான சீர்த்திருத்தங்களையெல்லாம் வாழ்க்கையாக்கிக் காட்ட வேண்டியிருந்தது. பலவாறு யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் அந்த வெடி வீசும் திருமணம் என்னை ஒரே இரவில் முந்திக்கொண்டது.

வெடிவீசும் திருமணம் அங்கு பத்து வருடங்களுக்கு முன்பு வழக்கிலிருந்தது–

திடீரென ஒரு மாப்பிளையைப் பிடித்து வந்து, பெண்ணோடு

சேர்த்து அறைக்குள் பூட்டிவிட.. வெளியே சிலர் சரை சரையாக வெடிகளைக் கொழுத்தி வீச, ஊர்கூடும். அதுவே கல்யாணமுமாகும். இப்படித்தான் அன்று ஜோதிக்கும் ஒரு திருமணம் நடந்தது.

பொழுது விடியவில்லை. ஊர் கலியாணக் கோலத்தோடு விழித்துக் கொண்டது. விசர்பிடித்து ஓடினேன். அந்த அதிகாலை முற்றத்தில் ஆடை முழுதும் எரிந்து, அம்மணமாகி.. கூந்தல் கருகி, மொட்டந்த தலையோடு குளறி.. அங்குமிங்கும் உலாஞ்சி அனல் முட்டி; கிணற்றில் வீழ்ந்தாள் ஜோதி.

காதல் துடித்தது. நானும் அவளோடு பாய்ந்தேன். தண்ணீரிலே அவள் தோல்கள் பிய்ந்து சுருள்சுருளாய் கொட்டுண்டன. அவிந்துபோன கண்களால் வெளிப்பட்ட உயிர் மானிட வாழ்வின் மீது காறி உமிழ்ந்துவிட்டு நகர்ந்தது. அதன் பின்பு நானும் மின்னல் கொடிபோல சமூக விடிவை வெறும் எழுத்துகளில் மட்டுமே பாடுவதில் பயனில்லையென நினைத்து நிறுத்திக் கொண்டேன்.

ஒரு கோடி ஜோதிகள் கூத்தாடும் காற்றுக்குள்ளும் எரியும் நெருப்பிற்குள்ளும் என் கவிதைகள் வீடு மாறின.

அதோ வானத்தில் இரண்டு மேக டாங்கிகள் சுடுபடுகின்றன. அங்கும் வெடியும், மின்னலும், புகையும்.. நாட்டிலும் இப்படியொரு போர் தொடங்க என்னை இங்கு கலைத்து விட்டார்கள்.

''அடையாளம் காணப்படாத அகதிகள் குழுவில் ஒருவனாம்!" பெயர் குத்திவிட்டு, இந்த ஐரோப்பிய நாடு சோறு போடுகிறது.

இதோ ஆனர்சும் நானும் மணலில் ஓடி விளையாடிக் கொண்டிக்கிறோம்.

ஆனர்சிற்கு வயது ஆறு. டென்மார்க்கில் பிறந்த தமிழ்ச் சிறுவன். தாயும் தகப்பனும் இளம் தம்பதிகள். அவனுக்காக ஒதுக்க பொழுதுகளற்ற நேர-ஏழைகள்.

தமிழும் டெனிசும் கலந்த அவனுடைய பேச்சை என்னால் விளங்கிக் கொள்ள முடிகிறது. இந்தக் கடற்கரையும் அந்தச் சிறுவனுமே எனது மாலை நேரத்து இன்பமாகிப் போயின.

நெடுமேரமாக ஓடிப்பிடித்து விளையாடினோம் "ஆனர்ஸ் எனக்கொரு ஆசை சொல்லலாமா..?"

padippakam

"யா...!"

"நானும் உன்னைப்போல் போல சிறுவனாக மாறி இன்பமான வாழ்வு வாழ, ஆசைப் படுகிறேன்!"

என் பேச்சிற்கு காது கொடுக்காதவனாய் தொடர்ந்தும் விளையாடிக் கொண்டிருந்தவன் திடீரென அழுதான்! அருகிலிருந்த குப்பைத் தொட்டி மீது ஓங்கி ஓங்கி உதைக்கத் தொடங்கினான்.

''ஆனர்ஸ்! உனக்கென்ன... ? நான் ஏதாவது தவறாகப் பேசிவிட்டேனா? என்னை மன்னித்துவிடு.. வா! உனக்கு ஐஸ் வாங்கித் தருகிறேன்.. இந்தா.. ஆனர்ஸ் நீ இப்படி அழுதால் இனி உன்னோடு விளையாட வரமாட்டேன்!'' நான் பதைபதைத்தாலும் ஆனர்ஸ் நெடுநேரமாக அழுதான்.

சிகரட்டை வாயில் ஏந்தி, தீ மூட்டாமலே ஏங்கிப்போயிருந்தேன். இருள் மெல்ல மூட்டமாய் இறங்கிக் கொண்டிருந்தது.

"ஆனர்ஸ்! நீ வீட்டிற்குப் போகவில்லையா? இருட்டாகப் போகிறதே!"

"இல்லை.!"

"ஏன்..?"

"ஜிம்மிக்கு அடிக்கவேணும்!" அவன் கோபமாக மறுபடியும் நிலத்தில் உதைத்தான். சினம் கண்ணீராகக் கொட்டுப்பட்டது. அவனை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. பாடுபட்டு வீட்டிற்கு இழுத்துச் சென்றேன். வீடு நெருங்கவும் அழுகையை நிறுத்தி அமைதியாக உள்ளே போனான்.

அவன் அழுகைக்கும் செவிசாய்க்க அந்தப் பெற்றோருக்கு நேரமில்லையா? அன்றிரவு தூங்குவதற்காக மட்டுமே ஒரு வீட்டர் வொட்கா விஸ்க்கியை விலை கொடுத்து வாங்க நேர்ந்தது.

ஜிம்மி என்பவன் ஆனர்சுடன் படிக்கும் ஒரு டெனிஸ் சிறுவன். பலசாலி துடினமானவன். அன்று வகுப்பில் முத்துக்களைக் கோர்த்து ஆளுக்கொரு மாலை செய்திருக்கிறார்கள். எல்லாவற்றிலும் ஆனர்சின் மாலையே மிக நேர்த்தியாக இருந்திருக்கிறது. வெப்பிசாரம் கொண்ட ஜிம்மி அதைப் பிய்த்தெறிந்திருக்கிறான்.



படிப்பகம்

அங்கு ஆனர்சின் நிறம் அவனின் முதன்மைக்குத் தடைபோட்டிருக்க வேண்டும். சிதறிப்போன மாலையைப் பார்த்து சில பிள்ளைகள் சிரிக்க.. சிலர் ஜிம்மியின் வீரத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். தனியனான ஆனர்சின் உரிமைக்குரல் அங்கு செல்லாக்காசு. அதனால் அவனும் சிரித்து, ஜிம்மியைப் பாராட்டி, தன் இயலாமையை வறுகி மூடியிருக்கிறான்.

தகவல்களை ஆனர்சின் ஆசிரியை சொன்னார். தீர்வற்ற மனம் துரத்த வேறெங்கு போவதென்று தெரியாது மறுபடியும் கடற்கரைக்கே வந்தேன். ஏகாந்தத்தில் எண்ணங்களைச் செருகிக்கொண்டு ஆனர்சிற்காக இரங்கினேன்.

தன் மாலை அறுக்கப் பட்டு, இழிவு படுத்தப்பட்ட இடத்தில் வீறுகொள்ளாது ஆனர்ஸ் ஏன் சிரித்தான்..? அவனே என்னருகில் நின்றபோது எதற்காக கோபத்தோடு பொங்கியெழுந்தான்? கேள்விகளை எனக்குள்ளேயே சான்ட்விச் முறையில் அடுக்கியபடி, எண்ணப்படிகளில் தவழ்ந்தேன்.

மக்கள் ஆயிரமாயிரமாக மூட்டை முடிச்சுகளுடன் புலம் பெயர்ந்து, என்னைப் போல வசதியான ஒரு நாட்டில் குந்திக்கொண்டு; உயிர்ப்பாதுகாப்புக்காகப் பெருமூச்சு விடுவது போல; எங்கிருந்தோ வந்த, சில துருவப்பட்சிகள் கடற்கரையில் மூச்செறிந்து குந்தின.

அப்பொழுதுதான், "உயிர்ப்பாதுகாப்பு வேறு; இனப்பாதுகாப்பு வேறு!" என்ற இரண்டு வரிகளும் தங்களையும் கவியாகச் செதுக்கி பூமிக்கு அனுப்பிவிடுமாறு அடம்பிடித்து, முன்வந்தன.

கூர்ந்து நோக்கினேன். தட்டந்தனியாக டெனிஸ் வகுப்பில் அமர்ந்திருக்கும் அந்தத் தமிழ்க்குழந்தை தன் இனப்பாதுகாப்பை இழந்திருக்கும் சோகம்; அந்த வரிகளின் பின்னணியாக இழையோடுவது தெரிந்தது.

டெனிஸ் ஜிம்மிகள் மாலைகளை அறுக்கும் போது. தமிழ் ஆனர்சுகள் ஏன் சிரிக்கிறார்கள்? ஜோதி செத்தபோது நானும் சிரித்து, என் இருத்தலும் ஒரு மின்னல் கொடியாகிப்போன நிகழ்வு அந்த கேள்விக்கு விடையாகத் தெரிந்தது.

இப்போது வானத்தின் மீது ஜோதி போல ஒரு செம்முகில் தனியாக நின்றது. அதன் அருகில் குழந்தைகள் இல்லை. "இனப்பாதுகாப்பை அழித்து, வெறும் உயிர்ப்பாதுகாப்புக்காக மட்டும் குழந்தைகளைப் பெறுவது தவறென்று ஜோதியும் சொல்கிறாளா?

padippakam

அதே அடிவானக் கோட்டில் புதிது புதிதாய் மின்னல் கொடிகள் தோன்றி, மறையக் காண்கிறேன்

ஏக்கமும் கவலையும் நெஞ்சைக் கிழிக்க, "எங்கள் ஆனர்ஸ்களின் அவலங்களை யாராவது பாட வரமாட்டீர்களா?" என்று வானதிர ஓலமிடுகிறேன். "திடுதிடுவென" இடிமுழக்கம் ஒன்று நெற்றிப் பொட்டில் அடிப்பது போல வெடித்து உருண்டு வந்தது.

வானம் ஏன் இத்தனை அகோரமாகத் தன் எதிர்ப்பைக் காட்டவேண்டும்? சீறும் இடியைப் பார்த்தபடி ஏங்கி நின்றேன்.

"வானும், மண்ணும்; அவற்றின் படைப்புகளுமாய்க் குவிந்து கிடக்கும் இயற்கையின் மீது நீ கொண்டுள்ள நேசம் முழுமையானதுதானா? அப்படியானால் இயற்கையே தாயாகவும், மனிதர்களும் ஜீவராசிகளும் அதன் குழந்தைகளாகவும் படைப்பாகியிருக்கும் நிஜத்தை உன் கவியுள்ளம் ஏன் அடையாளங்கான மறுக்கிறது? இயற்கையையும் மனிதர்களையும் பிரித்து, ஒரு எண்ணக்கோட்டை வரையும்படி உன்னைத் தூண்டியது யார்?" குழம்பிய மனக்குட்டைக்குள் பல கேள்விகள் சிறு சிறு மீன்களாய்ச் சுழிப்பெடுத்து ஓடிப்போகின்றன.

"தம்பீ! இந்த ஆனர்ஸ்களின் சோகங்களை எதற்காக யாரும் பாட வேண்டுமென ஓலமிடுகிறாய்? பூவையும், புல்லையும் நேசித்து நிற்கும் மனதிற்குள்ளேயே மக்கள் மீதான நேசமும் மறைந்திருக்கிறதே? இனியாவது அதைத் தேடிக் கண்டு கொள்வாயா?" மின்னல் கொடியே வந்து சொல்வதைப் போன்ற பிரமை.

பையிலிருந்து பேனாவை எடுக்கிறேன். வருங்கால ஆனர்ஸ்களின் வாழ்வு மின்னல் கொடிகளாகச் சிதைக்கப்பட முன் நானும் மக்கள் பாடகனாக வேண்டிய கடமை பேனா முனையில் பளிச்சிடக் காண்கிறேன்.

●


படிப்பகம்

# இன்னொரு சினிமா!

பின்னால் திரும்பிப் பார்த்தான். இரண்டு வாகனங்கள் போட்டி போட்டுத் துரத்திக் கொண்டிருப்பது தெரிந்தது. வேகக்காட்டியின் முள் 180 கி. மீயைப் பிடித்துவிட்டது. தொடர்ந்து துரத்தி வரும் இயம கண்டத்திலிருந்து தப்பிவிட்டால் போதும் பிறகு வெற்றிக்கொடி பறப்பது நிச்சயம்.

சொன்னபடியே பின் சீட்டில் கனகரின் மகள் சோபிகா குனிந்து மறைந்திருந்தாள். முக்காட்டை விலக்கி, அவளை ஒருமுறை பார்க்க ஆசைப்பட்டான். நகக் கணுவில் தொங்கும் நீர்த் திவலையைச் சுண்டிவிடுவதைப் போல பெற்றோரை உதறிவிட்டுப் புறப்பட்டிருக்கும் அந்தக் காதல் தேவதையைப் பார்த்துவிட்டால் போதும் காரின் வேகத்தை 200 கி.மீக்கு துணிந்து கூட்டிவிடலாம்.

பாது காவலுக்காக அழைத்து வந்திருந்த ஜீன்ஸ் குரூப்பைத் தேடினான் அவர்ளைக் காணவில்லை. ஓடிப்போகும் காதலருக்காகவே அமைக்கப்பட்டிருக்கும் ஜீன்ஸ் குரூப் கொலண்டிலிருந்து வந்திருந்தது. வேகமெடுத்து ஓட பி. எம். டபிள்யூ கார், வெட்டு வாள், துப்பாக்கி, சைக்கிள் செயின், கொட்டன் பொல்லென யாவும் தயாராக வைத்திருந்தார்கள். எல்லாமிருந்தும் என்ன பயன் இப்போது வழியை தவற விட்டு விட்டார்கள்.

திடீரென மஞ்சள் நிற ஸ்போர்ட்ஸ் மொடல் காரொன்று எகிறியபடி அவர்களுக்குப் பக்கமாக வந்தது. இரும்புச் சங்கிலிகளால் போட்ட மாலைகளும், பின்புறமாகத் திரும்பி நிற்கும் தொப்பிகளுமாக சிலர் இருந்தனர். ஆட்களைப் பார்த்தால் நோர்வேயிலிருந்து வந்திருக்கும் "காதலா காதலா" குரூப் போலத் தெரிந்தது. கார் கண்ணாடியைக் கீழே இறக்கியபடியே ஒருவன் தலையை வெளியே நீட்டினான்.

"மவனே! நிப்பாட்டடா காரை..!" அவன் உரத்துக் கத்துவதைக்

கேட்டதும் செந்திரு மேலும் வேகமெடுத்தான். கார் 200.கி.மீ.யைத் தாண்டிப் பாய்ந்தது.

"படீர்!" அவன் கோபமடைந்திருக்க வேண்டும். டயருக்குத்தான் குறிவைத்துச் சுட்டான். நல்லவேளையாகச் சறுகிவிட்டது. தொடர்ந்து துரத்தினார்கள். இரண்டாகப் பிரிந்த சாலையில் ஏதோ ஒரு பக்கமாக ஓடத் தொடங்கினான்.

"ரி...ரி..ரிங்! லா!" மொபைல் அழகாக வாசித்தது.

"ஹலோ! செந்திரு!!"

"ஜீன்ஸ் கருணா பேசுறன்! இப்ப எங்கையடாப்பா நிக்கிறாய்?"

"E 47 றோட்டிலைதான் போய்க்கொண்டிருக்கிறம். கோல்டிங் நகரத்தைத் தாண்டியிட்டம்."

"அப்பிடியே அப்ப நாங்களும் பக்கத்திலைதான் நிக்கிறம்!"

"நாலு தரம் வெடி வைச்சிட்டாங்கள். நல்ல வேளை டயரிலை பிடிக்கேல்லை. பிடிபட்டால் எல்லாமே சரி. என்னை வெட்டிப் போட்டு அவங்கள் பிள்ளையைக் கடத்திப் போடுவாங்கள். உங்களை ஒழுங்குபடுத்தினதை விட டென்மார்க்கிலேயே ஒரு குரூப்பை ஒழுங்கு படுத்தியிருக்கலாம்."

"வாவ்! ஜீன்ஸ் கருணாடா... ஜீன்ஸ் கருணா! காதலுக்காக உயிரும் கொடுப்பாண்டா! அ ஹ..ஹ...! என்ன நடக்குதெண்டு பார்!" கோபத்தோடு போனைக் "கட்" செய்தான்.

நேரத்தைப் பார்த்தான் பதினொரு மணி. பன்னிரெண்டு மணி தாண்டிவிட்டால் சோபிகாவிற்குப் பதினெட்டு வயதாகிவிடும். அதற்குப் பிறகு முதன் முதலாகத் தென்படும் போலீஸ் நிலையத்திற்குள் புகுந்துவிட வேண்டும் என்பதுதான் திட்டம்.

நல்லவேளை அவன் மட்டும் சிறிது தாமதித்திருந்தால் சோபிகாவை வீட்டிலேயே கட்டிப்போட்டு, யாரோ ஒருவனுக்கு முடித்துக் கொடுத்திருப்பார்கள். இரண்டு பக்கங்களிலுமே எதிர்ப்பாக இருந்தமையால் கூட்டிக்கொண்டு ஓடுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி தெரியவில்லை. எனினும் சிறிது காலம் போனால் போதும் இருக்கவே இருக்கிறது நீ பெரிதா நான் பெரிதா என்னும் போட்டி.

மெதுவாகத் தூண்டிவிட்டால் போதும் யாராவது ஒரு பக்கம் ஆதரிக்காமலா போகப் போகிறார்கள் என்று நினைத்தான்.

"மகன் உனக்கு இதெல்லாம் அவசியந்தானோ? முதலிலை நீயொரு எஞ்சினியராக வா! பிறகு நீ விரும்பின ஆளைக் கட்டன்! நானென்ன வேண்டாமெண்டே சொல்லப்போறன்..."

"எஞ்சினியரா வாறதெண்டால் என்னம் ஏழெட்டு வரியம் படிக்க வேணும் அதுவரைக்கும் சோபிகாவை அவையடை வீட்டிலே சும்மா வைச்சிருக்க மாட்டினம்"

'பார் அவன்ரை வாய்க் கொழுப்பை! எடேய் அவங்களாரடா? நாங்களாரடா? எங்கடை பரம்பரையே எல்லாரும் என்ஜினியரும், டாக்குத்தர்மாருந்தானே! கொப்பர் ஒராளைத் தவிர!" என்று நளினமாகக் கோடு போட்டு நிறுத்திக் கொண்டாள் தாய் கட்டியம்மா!

- "அப்பாவைப் போலத்தான் என்னாலையும் எஞ்சினியராப் படிக்க ஏலாது. அது எனக்கு ஏலாது எங்கையாவது போய் வேலைக்குச் சேரப் போறன்."

"அப்ப என்ன கட்டு வேலைக்குப் போகப் போறியோ? உன்னோடை திரியுற பெடியளெல்லாம் எஞ்சினியருக்கும் டாக்குத்தருக்கும் படிக்கிறாங்கள். நீ மட்டும் ஏன் காதலும் கத்திரிக்காயுமெண்டு அலையிறாய்?"

அவர்களும் தன்னைப் போலவே தமிழ்ச் சினிமாக் கனவுகளால் அலைக்கழிவதையும், சினிமாப் படங்களின் பெயரால் குழுமயப்பட்டு மோதுவதையும் சொல்வதைவிட, திருமணத்தைப் பின் போட ஏதாவது வழியிருக்கிறதாவெனத் தேடிப் பார்த்தால் ஒரு வழியும் தெரியவில்லை.

நல்ல வேளையாக சோபிகாவின் அக்கா சிவராணி கறுப்பாகவும், பற்கள் மிதப்பாகவும் பிறந்திருப்பதால் அவளுக்கு இப்போதைக்குத் திருமணம் சாத்தியமில்லையென்று தெரிந்தது. அது மட்டுமே தான் சிறிது காலம் தாமதிக்க உதவுமென நினைத்தான்.

குளிரில் விறைத்துப் போகும் நாட்டிலும் திரைப்படங்களில் வரும் ரம்பா போல அரைகுறை ஆடைகளுடன் திரியும் சோபிகா ஏன் செந்திருவைத் தெரிவு செய்ய வேண்டும். ஏன் நாங்களென்ன குறைவா? என்ற ஒப்பீட்டில் இறங்கிய நண்பர்களெல்லாம் இப்போது அவனுக்குப் பகைவர்களாகிவிட்டார்கள். தமக்குத் தலை போனாலும் காரியமில்லை அவனுக்குச் சகுனப் பிழை ஏற்பட்டாலே போதுமென ஓடித் திரிகிறார்கள்.

padippakam

இப்படியே காதல் ஊர்க்காற்றில் அடிபட்டு ஊஞ்சலாட, நோர்வேயிலிருந்து சோபிகாவின் மச்சான் தன்னுடைய குருப்புடன் இங்கு வந்து சேர்ந்துவிட்டான். அடுத்த நாள் சுவிசிலிருந்து இன்னொரு மச்சானும் அவனுடைய குருப்பும் வந்திருந்தார்கள்.

அதைப் பார்த்த பின்புதான் சோபிகாவிற்கும், சிவராணிக்கும் திருமணம் நடக்கவிருப்பதாகச் சிலர் பேசிக் கொண்டார்கள். உண்மையான தகவல்களை எடுக்க முடியவில்லை. கடைசியாக மணவறை காரரை விசாரித்துப் பார்த்தான். சோபிகா வீட்டுக்காரர்தான் "புக்" பண்ணியிருப்பது தெரிய வந்தது. அன்றய தினமே சோபிகாவிற்கும் பதினெட்டு வயது பூர்த்தியாகிவிடுவதை அவதானித்ததும் செந்திரு விழித்துக் கொண்டான். உயிர் கொடுத்தாயினும் சோபிகாவைக் காப்பாற்றுவேன் என்று சபதம் போட்டுக் கொண்டான். முதல் நாளே அவளை அழைத்துக் கொண்டு எங்காவது ஓடிவிடவும் முடிவு செய்தான். தூரத்து நண்பன் ஒருவனின் உதவியிருந்ததால் ஜீன்ஸ் குருப்பையும் வரவழைத்துக் கொள்ள முடிந்தது.

"இரவு பத்து மணிக்கு காரில் வந்து கோர்ண் அடிப்பேன்! புறப்பட்டு வரவும். இப்படிக்கு, செந்திரு" என்று எழுதி கடிதத்தை பக்கத்து வீட்டுச் சிறுவனிடம் கொடுத்தனுப்பிருந்தான். இந்தத் திடீர்த் திருமணத்திலிருந்து தப்பிக் கொள்ள அவள் கண்டிப்பாக வீட்டை விட்டுப் புறப்படுவாளென உறுதியாக நினைத்தான். சொன்னபடி அவன் காரில் சென்று, "கோர்ண்" அடிக்கவும் அவளும் மெல்ல வந்து பின்னால் ஏறிக்கொண்டபோது காதலின் தெய்வீகத் தன்மையை மனதாரப் பாராட்டினான்.

"படீர்! படீர்!" இறக்கமாக இரண்டொரு வெடிச் சத்தங்கள். மஞ்சள் நிற காரின் டயர் வெடித்து அது வீதியின் கரைக் கம்பிகளோடு மோதிச் சுழன்று பிரண்டது. திடீர் அதிர்ச்சியால் அவர்களுக்கு உதவியாக வந்த காரும் தீப்பறக்கும்படி பிறேக் பிடித்து நின்றது. எதிரணியின் கார்களைக் கவிழ்த்து வெற்றிவாகை சூடியபடியே ஜீன்ஸ் கருணாவின் கார் இவனுடைய காருக்குப் பக்கமாக வந்து.

"ரிரிரிரி...ரீங்! ரிங்! லாலா!" மீண்டும் மொபைல்.

"ஹலோ நான் செந்திரு பேசுறன்!"

"ஜீ... ஜீ.. ஜீன்ஸ் கருணா! இப்ப விளங்குதே நான் ஆரெண்டு?"

"ஓமண்ணே என்னை மன்னிக்க வேணும்!"



படிப்பகம்

"அது சரி! இப்படியே போனியெண்டால் கடைசி போடர்தான் வரும்! என்ன செய்யப் போகிறாய்?"

"போடரிலை பொலீஸ் இருக்கும்தானே? அதிலை வைச்சே விசயத்தைச் சொல்லி சரண்டாயிடுறேன்."

"அதுக்காக இப்பவே ஸ்பீடைக் குறைக்காதை! அவங்கள் எப்படியும் அடுத்த காரிலை ஏறி வருவாங்கள். அதுக்கிடையிலை போடரை எட்டிப் பிடிச்சிடு."

"ஓமண்ணே!" டெலிபோனைக் கட் பண்ணினான். பலமாகச் சிரித்தபடியே வெற்றிக் களிப்பில் வானத்தை நோக்கி ஒரு சத்தவெடி வைத்தான் ஜீன்ஸ் கருணா.

வெடிச்சத்தம் கேட்டதும் நான்கு பக்கங்களிலிருந்தும் "பளிச்! பளிச்!" சென நீல வண்ண விளக்குகள் மின்னின. அலாரம் அடித்தபடியே பதுங்கியிருந்த பொலீஸ் வண்டிகள் தாறுமாறான வேகத்தில் துரத்த ஆரம்பித்தன. ஆட்கடத்தல் பேர்வழிகளைப் பிடிக்க மறைந்திருந்த பொலீஸ் வண்டிகள் இப்போது இவர்களைத் துரத்த ஆரம்பித்தன. செந்திரு அவர்களுக்கும் வேப்புக் காட்டி அசுர வேகத்தில் பறந்தான்.

தூரத்தே ஜேர்மனியையும், டென்மார்க்கையும் பிரிக்கும் பிளஞ்ச்பேர்க் போடர் தெரிந்தது. தடைக் கம்புகள் குறுக்கே விழுந்து கிடந்தன. "ஸ்டொப்!" என்ற விளக்குகள் சிவப்பில் டாலடித்தன. ஓடினால் சூடுவிழும். பிறேக் அடித்து நின்றான். பொலீஸ்காரர் துப்பாக்கி முனையில் செந்திருவையும், கனகரின் மகளையும் காவிச் சென்றனர்.

செந்திரு நடந்ததையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்ல ஆரம்பித்தான். இதற்கிடையில் கழுத்தாங்குத்தியில் பிடித்து ஜீன்ஸ் கருணா குழுவையும் கொண்டுவந்து சேர்த்தார்கள். எல்லாவற்றையும் கேட்டாலும் ஏனோ அவர்கள் பரபரப்பாகவே இருந்தார்கள்.

"ஏன்டா கருப்புப் பன்றிகளே! இதற்காகவா உங்களுக்கெல்லாம் அடைக்கலம் தந்திருக்கிறோம்?" என்று கேட்டபடி ஒரு பொலிஸ்காரன் ஓங்கி மேசையில் குத்தினான். அவனின் வாயில் ஒரு கொத்து மீசையிருந்தது.

தொடர்ந்ததும் அபாயச் சங்கொலிகள். பொலீஸ்காரர்கள் நோர்வேக் குரூப்பையும் மடக்கி இழுத்து வருவது தெரிந்தது.

அதற்குப்பிறகுதான் எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். இப்போதுதான் சோபிகா தனக்குள்ளாக அழுவது கேட்டது.

"உன்னுடைய பெயர்?"

"சிவராணி கனகரெத்தினம்." செந்திருவிற்குத் தூக்கிவாரிப் போட்டது. சோபிகா எதற்காகத் தனது பெயரை மாற்றிக் கூறுகிறாள் என்பது தெரியாமல் குழம்பினான்.

"நீ ஏன் செந்திருவுடன் ஓடிவந்தாய்?"

"எனக்கு என்னுடைய நோர்வே மச்சானைக் கட்ட விருப்பமில்லை. அதுதான் செந்திருவோட ஓடி வந்தனான்."

"உனக்கு செந்திரு மீது விருப்பமா?"

"ஓம்! அவரை நான் கனகாலமாக விரும்பினானன். அவரும் என்னை விரும்பியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த நெருக்கடியான நேரத்தில் தானாகவே முன்வந்து என்னைக் காப்பாற்றியிருக்க மாட்டார்.

ஒரு பொலீஸ்காரன் புகைப்படக் கருவியுடன் வந்தான். முதலில் செந்திருவைப் படம்பிடித்தான். பின் அவளைப் படமெடுக்க விரும்புவதாகக் கூறினான். அப்போதுதான் அவளின் தலையை மூடியிருந்த போர்வையை முதல் தடவையாக விலக்கினான்.

கூர்ந்து பார்த்தான் செந்திரு. சந்தேகப்பட இனி ஏதுமில்லை. உண்மையாகவே அது சோபிகா இல்லை. அவளுடைய அக்கா சிவராணியேதான். இவள் எப்படிக் காரில் ஏறினாளென யோசித்தான். சிறுவன்தான் கடிதத்தை மாற்றிக் கொடுத்திருக்க வேண்டுமெனத் தெரிந்தது.

அவன்தான் மாற்றிக் கொடுத்தாலும் இவளுக்கு எங்கேபோனது மதி. இனி உண்மையைச் சொன்னால் சினிமாப் படத்தால் சீரழியும் சமூகத்திற்குத் தானே உதாரணமாகிவிடுவேனெனப் பயந்தான். அவளுடைய வாழ்வு நாசமாகாமல் காப்பாற்றுவதா? அல்லது தன்னுடைய காதல் நாசமாகாமல் காப்பதா? எதைச் செய்வதென்று தெரியாமல் தடுமாறினான்.

"டேய்! என்ரை முறை மச்சாளைக் கடத்திப் போட்டாய்! உன்னைச் சும்மா விடமாட்டன்!" நோர்வே மச்சான் பலமாகக் கத்திக்

padippakam

கெம்பினான். அவனுக்குக் கைமாஞ்சி போட்டு, ஒரு கேடர் கம்பியோடு மாட்டுவதற்கு ஓடினான் மீசைக்காரப் பொலீஸ்காரன்.

செந்திருவையும், சிவராணியையும் விடுதலை செய்ய முன் ஒரு பத்திரத்தில் கையெழுத்து வைப்பதற்காக அழைத்துச் சென்றனர். தர்மசங்கடமான நிலை! எந்தச் சினிமாவிலாவது இப்படியொரு கூத்து நடந்திருக்குமா? என்பது தெரியாது திகைத்து நின்றான் செந்திரு.

●

ஜ௸



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam




அடிவானத்திலிருந்து என்னும் தலைப்பில் வெளிவரும் இச்சிறுகதைத் தொகுப்பு கி.செ. துரையின் நான்காவது நூலாகும். இதற்கு முன்னர் சுயம்வரம், ஒரு பூ ஆகிய இரு நாவல்களும், புதிய சிந்தனைக் கட்டுரைகள் என்னும் தொகுப்பும் வெளிவந்துள்ளன. இதுவரை அறுபது மேடை நாடகங்கள் வரை எழுதியுள்ளார். இவர் எழுதிய யாத்திரை என்னும் நாடகம் சுவீடனில் நடைபெற்ற உலக நாடக விழாவில் கலந்து கொண்டது. பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர், தொழில் நுட்ப உதவியாளர் கட்டடப்பிரிவு ஆகியன கல்விப் பின்புலங்கள். கடந்த பத்தாண்டுகளாக டென்மார்க்கில் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார்.

படிப்பகம்